# திருக்குறளும் இந்திய அறநூல்களும்

க. த. திருநாவுக்கரசு

# திருக்குறளும் இந்திய அறநூல்களும்

திருக்குறள்மணி
க. த. திருநாவுக்கரசு
இணைப்பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

மணியகம்
கோட்டூர்த் தோட்டம்,
சென்னை - 85.

மணியகம் வெளியீடு : 2

முதற்பதிப்பு : ஆகஸ்டு, 1978

© திருமதி தி. கஸ்தூரி
3, இரண்டாவது நெடுஞ்சாலை,
கோட்டூர்த் தோட்டம்,
சென்னை - 85

இந்நூல் அரசு வழங்கிய
சலுகை விலைத் தாளில்
வெளியிடப் பட்டுள்ளது.

விலை ரூ. 4 - 20

விற்பனை உரிமை
பாரி நிலையம்
பிராட்வே, சென்னை - 1

அச்சிட்டோர் : ஒப்புரவு அச்சகம், சென்னை-18

சென்னை.
11 - 8 - 78

டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி,
M. A., Ph. D.
இயக்குநர் (ஓய்வு),
டாக்டர் S. இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக்
கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

# வாழ்த்துரை

'திருக்குறளும் இந்திய அறநூல்களும்' என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூலுக்கு அடிப்படை, இதன் ஆசிரியர் திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 'திருக்குறளும் உறுதிப் பொருள்களும்' என்னும் கருத்தரங்கில் ஆய்வுக்கு அளித்த கட்டுரையாகும். உறுதிப் பொருள்களை நான்காகக் கொள்ளுவது, மூன்றாகக் கொள்ளுவது என்னும் மரபுகள் முதலில் பேசப்பெறுகின்றன. பின்னர் தரும சூத்திரங்கள் சாத்திரங்கள், சமண, பௌத்த சமய அறநூல்கள் ஆராயப்பெறுகின்றன. இவ்வாறு அறத்துறையைப் பரந்த நோக்கில் கண்ட பிறகு, திருக்குறளின் சிறப்பு இயல்புகள் தொகுத்துக் கூறப் பெறுகின்றன.

தரும சாத்திரங்களுடனும், சமண, பௌத்த அறநூல்களுடனும் திருக்குறள் ஒப்பீட்டு முறையில் ஆராயப்பெறுகிறது. இந்திய எல்லையைச் சற்றே கடந்து, மேலைநாட்டு அறக் கொள்கைகளுடனும் திருக்குறள் ஒப்புநோக்கப் பெறுகிறது. திருக்குறளின் அகல ஆழங்களை உணர்தற்கு, இம்முறை பெரிதும் பயனுடையது. இந்நூல் நம்மனோரால் வரவேற்கத் தக்கது.

இத்தகைய நூலை எழுதக்கூடிய அறிஞர் க. த. திருநாவுக்கரசு அவர்கள், இந்நூலைத் தொடர்ந்து வேறிரு நூல்களையும் எழுதவேண்டும் என்பது என் விருப்பம். இந்திய அறநூல்களுடன் திருக்குறளை ஒப்பு நோக்கியதன் தொடர்ச்சியாகப் பிற நாடுகளின் அறநூல்களுடன், குறிப்பாக மேலைநாட்டு அறநூல்களுடன் ஒப்பிடுவது அடுத்த பணியாகும். மேலைநாட்டில் மொழி வழிப் பகுப்பியல் துறையில் சமய, அறநூல் கூற்றுக்கள் ஆராயப்பெறுகின்றன. இம்முறையில் நம் தமிழ் மொழியின் சொற்றிறங்கள், பொருள் திறங்கள், கருத்து நலங்கள் முதலியவற்றைத் திருக்குறளில் ஆராய்ந்து, மற்றொரு நூலை எழுதவேண்டும் என்று அறிஞர் திருநாவுக்கரசு அவர்களை வாழ்த்தி, இந்நூலை வரவேற்கின்றேன்.

**வ. ஆ. தேவசேனாபதி**

# முன்னுரை

மதுரைப் பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆய்வகம், சென்ற மார்ச்சு மாதத்தில் 'திருக்குறளும் உறுதிப் பொருள்களும்' எனும் கருத்தரங்கினை நடத்தியது. அக்கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஆய்வுரையின் விரிவாக்கமே இந்நூல்.

'திருக்குறளும் இந்திய அறநூல்களும்' எனும் இந்நூலில் எட்டு இயல்கள் இடம் பெற்றுள்ளன. முப்பொருள் கோட்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் முதல் இயலில் கோடி காட்டப்பட்டுள்ளன. முப்பொருள் கோட்பாடு தமிழ்மொழி மரபா அல்லது வடமொழி வழக்கா என்பதை அறிவதற்கு இப்பகுதி உறுதுணையாகும்.

இரண்டாம் இயல், நால்வகைப் பேறுகள் பற்றியது. நால்வகைப் பேறுகளின் இயல்புகளை விளக்குவதோடு அவற்றிற்கு இடையே உள்ள தொடர்பு இவ்வியலில் சுட்டிக் காட்டப்படுகிறது. 'முப்பால்' எனப்படும் திருக்குறளின் மாட்சி, அடுத்த இயலில் தெளிவுறுத்தப்படுகிறது.

நான்காவது இயலில் சம்ஸ்கிருத மொழியில் உள்ள தரும சூத்திரங்களின் அமைப்பும் அழகும் ஆராயப்பட்டுள்ளன. தருமசூத்திரங்கள் உணர்த்தும் அறக்கொள்கை அடுத்த இடத்தைப் பெறுகிறது. ஐந்தாவது இயலில் வடமொழி தரும சாத்திரங்களின் வரலாறும் சிறப்பு இயல்புகளும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. சிறப்புமிகு தரும சாத்திரமான 'மனுதரும சாத்திரத்தின்' நோக்கும் போக்கும் விரித்துரைக்கப்படுகின்றன. பின்னர் மனுதரும சாத்திரத்தின் அறக்கொள்கையைத் திருக்குறளின் அறக்கொள்கையோடு ஒப்பிட்டு, அவற்

றிடையே காணப்படும் ஒற்றுமைப் பண்புகளும் வேற்றுமை இயல்புகளும் தெளிவுறுத்தப்படுகின்றன.

அடுத்த இயலில், ஜைந ஆகமங்கள் உணர்த்தும் அறக்கொள்கையைத் திருக்குறள் உணர்த்தும் அறக் கொள்கையோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஏழாவது இயலில், பௌத்தசமய அறநூலான தம்மபதம் திருக்குறளோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

எட்டாவது இயலில், திருக்குறள் உணர்த்தும் அறக் கோட்பாடு எவ்வாறு சிறப்புமிக்கதாக விளங்குகிறது என்பதைத் தெளிவுறுத்த முயன்றுள்ளேன். இத்தகைய அறவியல் ஒப்பாய்வு நூல், இதுவரை தமிழில் வெளி வந்தது இல்லை! எனவே, இதனை முதல் நூல் எனலாம்.

இந்நூலின் கருத்துகளைத் தெளிவுறுத்தும் வகை யில், நல்லதோர் வாழ்த்துரை வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெய்யறிவுத் துறைப் பேராசிரிய ரான டாக்டர் வ. ஆ. தேவசேனபதி M. A., Ph. D. அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அவருடைய அறிவுரையைச் செயல் படுத்த இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

சென்னை.
15-8-78

க. த. திருநாவுக்கரசு

# உள்ளுறை


| | |
|---|---|
| முப்பொருளின் மாட்சி | 1 |
| உறுதிப்பொருள்கள் | 12 |
| முப்பாலின் மாட்சி | 24 |
| தரும சூத்திரங்களின் அமைப்பும் அழகும் | 31 |
| தரும சாத்திரங்களின் சிறப்பு | 38 |
| சமண சமய அறநூல்கள் | 63 |
| பௌத்த சமய அறநூல்கள் | 75 |
| திருக்குறளின் சிறப்பியல்புகள் | 85 |

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| 1. | Title of the Book | Tirukkuralum Indiya Aranulkalum |
| 2. | Author | K. D. Thirunavukkarasu |
| 3. | Date of Birth | 20-11-1931 |
| 4. | Language | Tamil |
| 5. | Edition | First Edition |
| 6. | Date of Publication | August 1978 |
| 7. | Copy Right | Maniyagam Publications |
| 8. | Paper used | 15.2 Double Demy |
| 9. | Size of the Book | 22.5 × 18.5 Cms. |
| 10. | Printing Point | 10 Point |
| 11. | Number of Pages | 8+112 |
| 12. | Number of Copies Printed | 1000 |
| 13. | Printer | Oppuravu Accakam, Madras-18. |
| 14. | Binding | Card Board Binding |
| 15. | Price | Rs. 4 - 20 |
| 16. | Publisher | Maniyagam Publications, Kottur Gardens, Madras-85. |
| 17. | Subject | Comparative Study of Indian Ethical Literature |
| 18. | Call Number | O, 31, IB, 50a R4 |

# முப்பொருளின் மாட்சி

தமிழ் இலக்கியப் பூங்காவில் மலர்ந்து, மணம் பரப்பும் நறுமலர் திருக்குறள். அதில் நூற்று முப்பத்து மூன்று கந்தித் இதழ்கள், மூவகை வண்ணப் பொலிவோடு கவினுற விளங்குகின்றன! 'அறிவுதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பிகளான' அறிஞர்கள், எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும், வாழ்க்கையில் இன்பத்தையும் நாடி, திருக்குறளில் பொங்கிவழியும் அறிவுத் தேனை உண்டு, மகிழ்கின்றனர். 'நினையுந்தொறும் காணுந்தொறும் பேசுந்தொறும்' திருக்குறள் எனும் பேரின்பக் கடலுள், அவர்கள் திளைத்து வருகின்றனர். அவ்வறிவுத் தேனை உண்டவர்கள், மனிதன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்'வதற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக, வள்ளுவர் தந்த வான்மறை விளங்குவதைப் பலவகையாக எடுத்துரைத்துள்ளனர்.

## மானிடப் பயன்மதிப்புகள்

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருநூல், மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது! மனித வாழ்க்கை ஏற்றமும் எழிலும் பெற்று விளங்க வழி காட்டுவது! மண்ணக வாழ்வில், விண்ணக வாழ்வினை அடைவதற்குப் பயிற்சியளிப்பது!

'வாழ்க்கை வாழ்வதற்கே!' என்பது இக்காலத்தில் எங்கும் யாரும் எழுப்பிடும் முழக்கமாகும். பலர் 'வாழ்க்கை என்பது வளமாக வாழ்வதற்கே!' எனக் கருதுகின்றனர். ஆனால், சிலரோ, 'வாழ்க்கை வளமாக வாழ்வதற்கும், நலமாக வாழ்வதற்கும் உரிய ஒன்று!' எனும் தெளிவு உடையவராக உள்ளனர். 'நலமான வாழ்க்கை' என்பது உடல் நலத்தோடு, பெரிதும் மனநலத்தையும் சார்ந்து இருக்கிறது.

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (திருக். 457)

என்பது முப்பால் உணர்த்தும் முதுமொழியாகும்.

வாழ்க்கையில் வளமும் நலமும் பெறுவதற்குத் தேவைப்படுவனவற்றை 'உறுதிப் பொருள்கள்' எனவும், 'பேறுகள்' எனவும் நம் முன்னோர்கள் வகுத்துரைத்தனர். அவை, மனித வாழ்க்கையைப் பயனுடையதாக, மதிப்புடையதாக, சிறப்புடையதாகச் செய்யும், உயர்த்தும் பேராற்றல் வாய்ந்தனவாகும். அவற்றை அடைகின்றவன், கடைப்பிடிக்கின்றவன், நுகர்கின்றவன், துய்க்கின்றவன் முழுமையான வாழ்க்கையை—குறைவற்ற நிறைவான வாழ்க்கையை—வாழ்ந்தவனாகப் போற்றப்படுகின்றான். அவனை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் (திருக். 50)

எனத் திருவள்ளுவர் போற்றுகின்றார்.

தன் வாழ்க்கையில் அடையத் துடிக்கும் இன்பம், மனிதனுக்கு எளிதில் கிட்டாத, எட்டாத கனியாகவே இருந்து வருகிறது. அதை அடைவதற்கு அறிவின் துணையைக்கொண்டு, அல்லும் பகலும் அவன் அயராது முயலுகிறான். அம்முயற்சியினால், அவன் அடையும் மனநிறைவு, அல்லது இலட்சிய ஈடேற்றமே அவனுடைய வாழ்க்கையைப் பயன்மதிப்பு வாய்ந்ததாகச் செய்கிறது. இந்த மன நிறைவை - இலட்சிய ஈடேற்றத்தை - அடைவதற்கு உதவியாக - கருவியாகப் பயன்படுவனவும் பயன்மதிப்புகளேயாகும். ஆனால், அவற்றுள் சில கருவியாக மட்டும் அல்லாமல், முடிந்த பயன்களாகவும் உள்ளன. இப்பயன்மதிப்புகளை (Values), நம்முடைய சான்றோர்கள் 'மும்முதற் பொருள்', 'முப்பால', 'நாற்பொருள்' என்று வகுத்தளித்துள்ளனர். அவை 'அறம், பொருள், இன்பம்' எனவும், 'அறம் பொருள் இன்பம் வீடு' எனவும் சுட்டப்படும்.

அவற்றின் இயல்புகளைக் கருத்தில்கொண்டு 'மானிடப் பயன்மதிப்புகள்'(Human Values) எனவும், ஆன்மிகப் பயன்மதிப்புகள் (Spiritual Values) எனவும் வகைப்படுத்தலாம். பொருளும் இன்பமும் வாழ்வியல் பயன்மதிப்புகளாகும். அறமும் வீடுபேறும் ஆன்மிகப் பயன்மதிப்புகளாக அமைகின்றன. நால்வகைப் பேறுகளின் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, 'உள்ளுறு பயன்மதிப்பு (Intrinsic Values) உடையன' எனவும், 'புறத்துறு பயன்மதிப்பு (Extrinsic Values) உடையன' எனவும் அவற்றைப் பாகுபடுத்தலாம். அறம்[1], வீடுபேறு ஆகிய இரண்டும் உள்ளுறு பயன்மதிப்புடையன. அதாவது இவை இரண்டும் முடிந்த பயன் மதிப்புகளாகவும் உள்ளன. அறத்தை அறத்திற்காகவும், வீட்டை

1. அறம் கருவியாகவும், இலட்சியமாகவும் (முடிந்த பயனாகவும்) உள்ளமையைப் பின்னர்க் காண்போம்.

வீடுபேற்றிற்காகவும் நாடுகின்றோம். சில நிலைகளில் அறம் வீடுபேற்றை அடைவதற்குரிய வாயிலாகவும் கருதப்படுகிறது. எனவே, இவற்றுக்கெனத் தனிப்பட்ட—உள்ளார்ந்த - சிறப்பு - மதிப்பு - உள்ளதை நாம் உணர முடிகிறது. இக்காரணத்தால் தான் 'அறம், வீடுபேறு' எனும் இரண்டும் உள்ளுறு பயன்மதிப்புடையனவாகப் போற்றப்படுகின்றன.[2] இவற்றிலிருந்து மும்முதற் பொருளையும், நால்வகைப் பேற்றையும் மானிடப் பயன் மதிப்புகள் (Human Values) - மனித வாழ்க்கையை மதிப்புறச் செய்யும் - செம்மைப் படுத்தும் பயன்மதிப்புகள் எனப் போற்றுவதன் பொருள் புலப்படும்.

## தமிழ் இலக்கியத்தில் மும்முதற்பொருள்

மனித வாழ்க்கையை வளப்படுத்தும், மதிப்புறச் செய்யும் இப்பயன்மதிப்புகளை நம்முடைய சான்றோர்கள், தொல்காப்பியர் காலத்திற்கு (கி மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு)[3] முன்பே, நன்கு அறிந்திருந்தனர்.

*அந்நிலை மருங்கின் அறமுத லாகிய*
**மும்முதற் பொருட்கும் உரிய என்ப** (தொல். 1363)

எனத் தொல்காப்பியர் கூறுவதனால், இதனை அறிய முடிகிறது. இந்நூற்பாவை 'என்ப' (எனக் கூறுவார்கள்) என அவர் முடிப்பதனால், அவருக்கு முன்பே, இக்கருத்து வழக்கில் இருந்தமை தெரிகிறது. இம் மும்முதற்பொருள் மக்கள் வாழ்க்கையில் பெறுமிடத்தைத் தொல்காப்பியர்,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்* (தொல். 1038)

எனவும்,

**மூன்றன் பகுதியும் மண்டிலத்(து) அருமையும்** (தொல். 987)

எனவும் தெரிவித்துள்ளார். இவருக்குப் பின்னர், இக்கொள்கை நன்கு போற்றி வளர்க்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

---

2. காண்க: K. D. Thirunavukkarasu, *Treatment of Ethics in Ancient Tamil Literature* (Unpublished M. Litt. Thesis) Annamalai University, 1962, Ch. 5

3. மா. இராசமாணிக்கனார், தமிழ் மொழி இலக்கிய வரலாறு, பக். 100

......... அதனால்
அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் (புறநா. 28)
சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல (புறநா. 31)
அறம் பொருள் இன்பமென்(று) அம்மூன்றின் (கலித். 141)

எனச் சங்கப் புலவர்கள், மும்முதற்பொருளின் மாட்சியையும் பயன்பாட்டையும் நன்குணர்ந்து போற்றியுள்ளனர்.

திருவள்ளுவர், தம்முடைய நூலை 'அறம், பொருள், இன்பம்' எனும் முப்பொருளின் அடிப்படையிலேயே, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பெரும் பகுதிகளாகப் பாகுபடுத்தியுள்ளார். அவருடைய நூலிலேயே, இம் மும்முதற் பொருள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவை,

அறம் பொருள் இன்பம் உயிரச்சம் (திருக். 501)
அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (திருக். 754)
அறவினையும் ஆன்றபொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல் (திருக். 909)

என்பனவாகும்.

இம் மும்முதற் பொருளை, 'வடுவிலா வையத்து மன்னிய மூன்று' என நாலடியார் (114) சுட்டுவதும் இங்குக் கருதத்தக்கது.

### நால்வகை உறுதிப் பொருள்கள்

இம் மும்முதற் பொருளை, நால்வகைப் பேறுகளாகப் போற்றும் நிலை, பையப்பையத் தலையெடுக்கலாயிற்று. சிலப்பதிகாரத்தில்,

வீடுகண் டவர்போல் மெய்ந்நெறி விரும்பிய (சிலப். 30:167)

என வீடு வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம்.[4] சமய மலர்ச்சிக் காலத்தில், நாயன்மார்களும் ஆழ்வார்களும் மும்முதற்பொருளை

---

4. மணிமேகலையில், வீட்டின் இயல்பு
குற்றமும் வினையும் பயனும் துன்பம்
பெற்ற தோற்றப் பெற்றிகள் நிலையா
எப்பொரு ளுக்கும் ஆன்மா இலையென
இப்படி யுணரும் இவைவீட்டு இயல்பாம்
(மணி. 30: 175—178)

என்று விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நால்வகைப் பேறுகளாக விரிவுபடுத்தியுள்ளனர். அக்காலத்திய மனப் போக்கிற்கு ஏற்ப, வீடுபேற்றை (மோட்சத்தை) உடன் சேர்த்து நால்வகையாகக் கொண்டுள்ளனர்.

ஐம்புலனும்
அழிந்த சிந்தையந்த ணார்க்கு அறம்பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் (தேவா. 575)

என்று திருஞானசம்பந்தரும்,

ஆலதன் கீழிருந்து
நால்வர்க்(கு) அறம்பொருள் வீடின்பம் ஆறங்க வேதம்
தெரித்தானை (தேவா. 6905)

என்று திருநாவுக்கரசரும் நால்வகைப் பேறுகளை, இறைவன் ஆலமர்செல்வனாக வந்து, சனகாதி முனிவர்க்கு அறிவுறுத்திய தாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அம்மறைதான்
மன்னும் அறம்பொருள் இன்பம்வீ(டு) என்றுலகில்
நன்னெறிமேம் பட்டன நான்(கு) அன்றே
(நா. திவ். 2764:10—12)

எனத் திருமங்கையாழ்வாரும் நால்வகை உறுதிப் பொருளைக் குறிப்பிட்டுள்ளார்.

சேந்தன் திவாகரத்தில் 'நால்வகைக் கேள்வி' எனும் பகுதியில்,

அறம்பொருள் இன்பம் வீடெனா நான்கும்
திறந்தெரிந்து கேட்டல் நால்வகைக் கேள்வி
(சேந். திவா. 286)

என நால்வகைப் பேறுகள் சுட்டப்படுகின்றன.

பின்னர் வந்த இலக்கண நூலார்,

அறம் பொருள் இன்பம் வீ(டு) அடைதல் நூற்பயனே (நன். 10)

என்று தெரிவித்துள்ளனர். பெருங்காப்பிய இலக்கணத்துள்,

நாற்பொருள் பயக்கும் நடை (தண்டி. 8)

சிறப்புடையதாகப் போற்றப்படுகிறது.

அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கு பொருளினும்
(திருக்கோவையார் 1, பேரா. உரை.)

என்பது பேராசிரியர் கருத்து.

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளில் இருந்து, தேவார காலத்தை (கி. பி. ஏழாம் நூற்றாண்டு) ஒட்டியே, 'மும்முதற் பொருளை', 'நால்வகைப் பேறுகளாக' விரித்துரைக்கும் மரபு, தமிழில் தோன்றி வளர்ந்துள்ளமை புலனாகின்றது.

கி. பி. பத்தாம் நூற்றாண்டு அளவில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும்.[5] திருவள்ளுவ மாலையில் உள்ள பல செய்யுள்கள், திருவள்ளுவர் முப்பாலின் மூலம் நாற்பாலைத் தெளிவுறுத்தியுள்ளதாகக் கூறுகின்றன.

அவை, திருக்குறளையே **முப்பால்** எனும் பெயரால் சுட்டுகின்றன.

வள்ளுவர் முப்பால் மொழிந்த மொழி (திரு. மா. 9)
வள்ளுவர் முப்பால் (திரு. மா. 10, 11, 31)
வள்ளுவனார் முப்பால் (திரு. மா. 12, 15, 17)
முப்பால் மொழிந்த முதற்பாவலர் (திரு. மா. 16)
வள்ளுவனார் தாம்செப்பவரும் முப்பால் (திரு. மா. 30)
குறள் வெண்பாவிற் சிறந்திடு முப்பால் (திரு. மா. 39)
முப்பால் (திரு. மா. 44, 59)
வள்ளுவர் முப்பால் நூல் (திரு. மா. 46)
வண்டமிழின் முப்பால் (திரு. மா. 53)
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றோ
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால் (திரு. மா. 10)

இத் திருவள்ளுவமாலைப் பாடற்பகுதிகளில் பயிலும் 'முப்பால்' எனும் தொடர் மூன்று பால்கள் என்னும் பொருளைச் சுட்டுவன அல்ல; முப்பால் எனும் நூல் ஒன்றையே குறிப்பனவாக அமைந்துள்ளன. இம் முப்பால் யாவை என்பதை,

அறம்தகளி; ஆன்ற பொருள்திரி; இன்பு
சிறந்தநெய்;.................................... (திரு. மா. 47)

எனும் திருவள்ளுவமாலையின் மற்றொரு பாடற்பகுதி தெளிவுறுத்துகிறது.

திருவள்ளுவர் முப்பாலில் உறுதிப்பொருள் நான்கினையும் எடுத்தியம்பியுள்ளார் எனும் கருத்தினைத் திருவள்ளுவ மாலைச் செய்யுள்கள் குறித்துச் செல்லுகின்றன: முதலாவதாக அறம்,

5. K. N. Sivaraja Pillai, The Chronology of the Early Tamils, Appendix : 3

பொருள், இன்பம் எனும் முப்பாலிலேயே நாற்பொருள் அடங்கி இருப்பதாகத் தெரிவிக்கும் செய்யுள்களைக் காண்போம்:

இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியின் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினார் இன்குறள் வெண்பா (திரு. மா. 40)

இதே கருத்தை, வடமொழி மரபுவழி

ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தருமம் முதல் நான்கும் சாலும் (திரு. மா. 44)

என மற்றொரு செய்யுள் அறிவிக்கின்றது.

திருவள்ளுவர் முப்பொருளைத் தாமே, மூவகைப் பால்களாக அமைத்துப் பாடியுள்ளார். நான்காவது பேற்றினைத் தனிப் படப் பாடவில்லையே எனும் ஐயம் மேற்கண்ட செய்யுள்களைக் காணுகின்றபொழுது எழுவது இயற்கை. இத்தகைய ஐயத் திற்குப் பண்டைக்கால உரையாசிரியர்களே நல்ல அமைதியும், விளக்கமும் தந்துள்ளனர்.

> இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறி அறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம் வீடு என்பன. அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவது அல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.[6]

என்று பரிமேலழகர் தந்துள்ள விளக்கம் இங்குக் கருதத்தக்கது.

---

6. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால் (காசிமடம், 1957), பக். 1

இதனைத் "தொல்காப்பியர் வீடு கூறுரோ எனின், அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடு பேற்றுக்கு நிமித்தம் கூறுதல் அன்றி, வீட்டின் தன்மை இலக்கணத்தால் கூறார் என்று உணர்க. இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி, மெய் உணர்தலான் வீடு பேற்றுக்கு நிமித்தம் கூறினார்" என்று நச்சினார்க்கினியர் (தொல். சிறப்புப்) தெளிவுறுத்தி யுள்ளமையாலும் அறியலாம்.

எனவே, திருக்குறள் முப்பாலின்வழி, உறுதிப் பொருள் நான்கினை விரித்துரைக்கிறது எனும் திடமான நம்பிக்கை, தொன்றுதொட்டு அறிஞரிடையே இருந்துவருவதில் வியப்பு இல்லை.

திருவள்ளுவ மாலையில், இந்த எண்ணம் நன்கு வடிவம் பெற்றுள்ளதை நாம் காணுகின்றோம்.

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறம்முதலா அந்நான்கும் (திரு. மா. 7)

அறம்பொருள் இன்பம்வீ (டு) என்னும்அந் நான்கின்
(திரு. மா. 8)

அறம்நான் (கு) அறிபொருள் ஏழொன்று காமத்
திறம்மூன் (று) எனப்பகுதி செய்து—பெறல் அரிய
நாலும் மொழிந்தபெரு நாவலரே (திரு. மா. 22)

இன்பம்பொருள் அறம் வீடென்னும் இந்நான்கும்
(திரு. மா. 33)

அறம் முதல் நான்கும் (திரு. மா. 36)

அறன் அறிந்தேம் ஆன்றபொருள் அறிந்தேம் இன்பின்
திறன் அறிந்தேம் வீடு தெளிந்தேம் (திரு. மா. 50)

என்பன இதற்குத் தக்க சான்றுகளாகும்.

எனவே, திருக்குறள் மும்முதற் பொருளையே விளக்குவது எனும் கருத்து, கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் நின்று நிலவியது என்பதும், கி. பி. ஏழாம் நூற்றாண்டை ஒட்டி, உண்டான சமய மலர்ச்சிக் காலத்தில் 'வீடுபேறு' முதன்மையிடம் பெறத் தொடங்கியமையால், அந்த நோக்கில் திருக்குறளைக் காணத் தலைப்பட்டபொழுது, திருக்குறளில் நால்வகைப் பேறுகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளதாகக் கூறும் மரபு தோன்றி வளர்ந்தது என்பதும் புலனாகின்றன.[7] எக்காலத்தில் சமயத்திற்குக் குற்

பரிமேலழகர் உரைப்பாயிரத்திற்கு மற்றொரு பாடம் உள்ளது. அதில் "புருடார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுள் முதல் மூன்றையும் வழுவாது ஒழுகவே, மோக்க மெய்தலான் அதற்கு வேறு வகுத்துக்கூற வேண்டுவது இன்மையான்" (செந்தமிழ் தொ.1; பகுதி 6) எனக் காணப்படுகிறது.

7. இக்கருத்தமைய ஜே. எம். நல்லசாமி பிள்ளை, 'திருக்குறள்—வீட்டின்பால்' எனும் ஆய்வுரையைச் செந்தமிழில் (தொ. 3; பகுதி8) வெளியிட்டுள்ளார்.

ஏவல் செய்யும் பணிமகளாக அறத்தைக் கருதும் வழக்கம் தோன்றியதோ, அக்காலம் முதற்கொண்டு 'நால்வகைப் பேறுகள்' தமிழகத்தில் செல்வாக்குப் பெறலாயிற்று.

## வடமொழி வழக்கா? தமிழ் மரபா?

பொருளினை 'அகம், புறம்' எனப் பாகுபடுத்தி உரைப்பதே தமிழ் மரபு எனவும், 'அறம், பொருள், இன்பம்' என மும்முதற் பொருள்களாக வகைப்படுத்திக் கூறுவது வடமொழி வழக்கு எனவும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.[8] இவர்களுடைய கருத்திற்கு ஆதாரமாகக் காமத்துப்பால் உரையின் தோற்றுவாயில் "இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான்"[9] என்று பரிமேலழகர் மொழிந்துள்ளதைக் காட்டுவர்.

இக்கருத்துகளின் வன்மைமென்மைகளைக் கண்டு, முடிவிற்கு வருவது எளிய செயல் அன்று. 'மும்முதற் பொருள்' எனும் கோட்பாடு முதன்முதல் வடமொழியிலேயே **திரிவர்க்கமாகத்** தோன்றியது எனும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டதே, இந்த எண்ணக் கோட்டையாகும்.

> .........பிரமதேவர், திரிவர்க்கம் என்ற மகா சாஸ்திரத்துக்கு ஆசிரியர் என்ற செய்தியேயாம். மகாபாரதம் சாந்தி பர்வம் 58ஆம் அத்தியாயத்தில் உலகம் ஒருகாலத்தே தர்மங் குன்றி அதர்மத்தால் தலைதடுமாறி நின்றபோது, தேவர்கள் பிரமதேவரிடம் சென்று முறையிட, அப்பிரமன் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, லக்ஷம் அத்யாயமுள்ள பெருநூல் ஒன்றைத் தம் புத்தியால் இயற்றினர் என்றும், அதனில் அறம்பொருளின்பங்களான **திரிவர்க்கங்கள்** அவரால் விரிவாக உரைக்கப்பட்டன[10]

என்பர் பேராசிரியர் மு. இராகவையங்கார். திருவள்ளுவ மாலைச் செய்யுள்கள், வள்ளுவர் "வேதப்பொருளை விரகால் விரித்துலகோர்—ஓதத் தமிழால் உரை செய்தார்" என்பதனால், வடமொழி

---

8. மறைமலையடிகள், பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் பக். 72.
9. திருக். பரிமே. உரை. மற்றும் பரிப்பெருமாள் உரையிலும் இக்கருத்து (காமத். தோற்றுவாய்) இடம்பெற்றுள்ளது.
10. மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி' பக். 205—206.

'திரிவர்க்க' வழக்கினைப் பின்பற்றியே முப்பாலைத் தமிழில் வள்ளுவர் இயற்றியுள்ளதாக அவர் கருதுகிறார்.[11]

இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கியங்களில் மிகவும் பழமையானதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில், 'மும்முதற்பொருள்' என்று 'இன்பமும், பொருளும், அறனும்' (தொல். 1037) சுட்டப்படுகின்றன. பழைய அகம், புறம் எனும் பொருள் பாகுபாட்டின் படிநிலை வளர்ச்சியாக, இதனைக் கொள்ளலாம். பேரளவிற்கு 'அகம், புறம்' எனப் பேசுகின்ற தொல்காப்பியர், மூன்றே இடங்களில்[12] இப்புதுமைப் போக்கினை—புதியதாக உண்டான கூர்தலற வளர்ச்சியைச் சுட்டிச் செல்லுகிறார் எனக் கருத இடம் உண்டு. எனவே, இதனைப் பழந்தமிழ் மரபு எனவே கொள்ளலாம். இந்த 'முப்பொருள் மரபு' இந்தியாவிற்கு வெளியே சம்ஸ்கிருத மொழியோடு தொடர்புடைய மொழிகளிலும் தொல்பாரசீக மொழியின் வேதமாகிய அவஸ்தாவிலும் காணப்பெறவில்லை. மற்றும், வடமொழியின் வேதங்களிலோ, பழமையான உபநிடதங்களிலோ 'திரிவர்க்கத்தின்' தடையத்தைக் காண இயலவில்லை. முதன்முதல், மகாபாரதத்தில்தான் முப்பொருள் கோட்பாடு இடம்பெற்றுள்ளது. மகாபாரதத்தில், வரலாற்றுக்காலம் நெடுக, பல சுலோகங்கள் இடைச்செருகல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்பதில், அறிஞரிடையே கருத்துவேற்றுமை இல்லை. மேலும், சாந்திபருவமே கி. பி. இரண்டாம் நூற்றாண்டு அளவில் மூல நூலின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டதாகச் சுக்தங்கர் எனும் பாரத ஆராய்ச்சிப் பேரறிஞர் துணிந்துள்ளார்.[13] எனவே, 'திரிவர்க்க மரபு' வடமொழிக்கேயுரிய வழக்கு எனக் கூறுதல் பொருந்தாது.

வடநாட்டில் தோன்றிய புறச்சமயங்களான பௌத்த, சமண சமய நூல்களில் மும்முதற்பொருள்பற்றிய குறிப்பே கிடையாது. எனவே, இதனை 'வடமொழி மரபு, வடநாட்டு மரபு' எனக் கருத இயலவில்லை. மேலும், திருக்குறளைப் போன்ற அமைப்பில் 'அறம், பொருள், இன்பம்' பற்றிய அறநூல், சம்ஸ்கிருத மொழியிலோ, பாலி மொழியிலோ, அர்த்தமகதி, அபப்பிர

11. டை, பக். 215, பேராசிரியர் மு. இரா. 58ஆம் அதிகாரம் எனச் சுட்டியுள்ளார். இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ், ஆங்கில பாரத மொழிபெயர்ப்புகளில் 59ஆம் அதிகாரமாக (செ. 29) உள்ளமை கருதத்தக்கது.

12. தொல். 987, 1038, 1363.

13. V. S. Sukthankar, On the Meaning of Mahabharata, pp. 6-11.

மிசம் போன்ற பிராகிருத மொழிகளிலோ இன்றுவரையில் கிடைக்கவில்லை என்பது இங்குக் கருதத்தக்கது. தமிழகத்தில், சமண சமயத்தின் அறநூலாக விளங்கும் நாலடியாரில் 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணது எய்த இருதலையும் எய்தும்' (114) எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் இங்கு நினைவுகூர் தற்குரியதாகும்.

இவை யாவற்றையும் ஒருங்கு இணைத்து நோக்குகின்ற பொழுது, தமிழ்வழி மலர்ந்த இந்திய மரபு ஒன்று கிறித்துவ நூற்றாண்டிற்கு முன்பே இந்தியா முழுவதிலும் மூலவூற்றாக வழங்கி வந்திருக்கவேண்டும் என்பதும், அவ்வூற்றின்வழி 'மும்முதற் கொள்கை' வடமொழியிலும், தமிழ்மொழியிலும் பாய்ந்தோடி இருக்கலாம் என்பதும் புலனாகின்றன.

# உறுதிப் பொருள்கள்

மனிதன், தன் வாழ்க்கையில் அடையவேண்டிய பேறுகளையே 'மும்முதற் பொருள்கள்' என்று நம் முன்னோர்கள் கொண்டனர். அவை, காலப்போக்கில் நான்காக விரிந்ததை நாம் முன்னர்க் கண்டோம். அவை எவ்வாறு முதன்மையும், முக்கியத்துவமும் பெறுகின்றன என்பதை முதலில் காண்போம்.

## நால்வகைப்பேறு—விளக்கம்

விருப்பம் என்பது யாது? அது ஓர் உளவியல் பண்பு. நம் உள்ளத்திற்கும் நாம் அடையத் துடிக்கும் பொருளுக்கும் இடையே உண்டாகும் உறவில் எழுவது விருப்பம். நாம் எதை விரும்புகிறோம்? யாதோ ஒரு பொருளை விரும்புகின்றோம். எனவே, விருப்பம் என்பது ஒன்று; விரும்பப்படும் பொருள் என்பது மற்றொன்று என்பது புலனாகின்றது. விருப்பம் வேட்கையாக—அடைய, நுகரத் துடிக்கும் உணர்வாக—வடிவு எடுக்கிறது. இதனால், நிறைவை (அனுபவத்தின்—நுகர்ச்சியின் முடிந்த பயனை) நாடி விருப்பம் நிற்கிறது. விருப்பங்கள் நிறைவேற்றப் படவேண்டிய நிலையில்—உளவியல் தேவைகளாக உள்ளன. நம்முடைய விருப்பங்கள் நிறைவேறுவதன் மூலமே, நாம் உயிருடன் இருக்க இயலுகிறது. எனவே, நம் உயிர்வாழ்க்கைக்கு, நம் விருப்பங்கள் நிறைவேறுதற்குரியனவாக அமையவேண்டி இருக்கின்றன. நம் விருப்பத்தின் நிறைவே, நம் வாழ்க்கையைப் பயனுடையதாக—மதிப்புடையதாகச் செய்கிறது.

விருப்பங்களின் வெறும் நிறைவே பயன்மதிப்பாக அமைவதில்லை. நாம் அடையும் நிறைவு, தன்னுணர்வோடு கூடிய மனநிறைவாக அமைந்தால்தான், அது பயன்மதிப்பைப் பெறுகிறது. தன்னுணர்வோடு கூடிய மனநிறைவை 'நுகர்ந்து, மகிழ்தல்' என்பர். நாம், நுகர்ந்து மகிழ்வதற்குரிய அனைத்தும் வாழ்க்கைப் பேறுகளாகும். ஆகவே, நம் வாழ்க்கைக்குப் பயன்மதிப்பை அளிப்பவை அனைத்தும் 'மனித வாழ்வின் பயன்மதிப்பு'கள் எனலாம். இதனையே, வடமொழிவாணர் 'புருஷார்த்தம்' எனப்

போற்றுகின்றனர். அதாவது தன்னுணர்வோடு முயன்று, அடைந்து, அனுபவித்து, மகிழும் பயன்மதிப்புகளே மனித வாழ்க்கையை மதிப்புடையதாகச் செய்வன. எனவே, அவை மனித (புருஷ) மதிப்பு(அர்த்தம்)களாக—மானிடப் பயன்மதிப்புகளாகக் கருதப்படுகின்றன.

இதனைத் தாயுமானவர்,

> புருடர்வடி வானதே யல்லாது கனவிலும்
> புருடார்த்தம் ஏதும் இல்லேன்! (தாயு. பா. 42)

எனப் பாடியுள்ளார்.

பயன்மதிப்புகளையே, நால்வகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. 'முழுமையான மனிதனை' இந்நால்வகைப் பயன்மதிப்புகளே உருவாக்குகின்றன.

**அறம்**

மனித வாழ்வின் பயன்மதிப்புகளை, நான்காகக் கருதும் வழக்கம் தமிழில் தோன்றிய பிறகும், அவற்றுள் அறத்தையே முதன்மையாக வைத்துப் போற்றும் முறை மாறவில்லை. அறம் என்பது யாது? அறம் என்பது ஒருவகை வாழ்க்கை நெறி. அது காப்பு நிலை. வாழ்க்கைக்குத் தேவைப்படும் காப்புநிலை அது. நம் விருப்பங்களை நேர்மையான முறையில் நிறைவேற்றிக்கொள்ள உதவுவது அறம். பொருளையும் இன்பத்தையும் நுகர்ந்து மகிழ்வதில், நம்மை நெறிப்படுத்தும் சக்தியாக இருப்பது - நம்மை நெறியோடும் முறையோடும் ஒழுகுமாறு இயக்குவது அறம். அறம் மனமாசு அற்ற நிலையில், உள்ளத்தின் தூய்மையை வெளிப்படுத்துவது.

அது இல்லறம், துறவறம் என இருவகைப்படும். **இல்லறம்** என்பது நேர்மையான முறையில் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைத் தேடியும், சேகரித்தும், சேமித்தும் 'நம்முடையவை' என உரிமை கொண்டாடும் வாழ்க்கை நிலையாகும்; மனைவிக்காகக் கணவனும், கணவனுக்காக மனைவியும் தியாகம் செய்யத் தூண்டும் பயிற்சிக் களமாகும். துறவறம் என்பது உரிமைகளையும் உடைமைகளையும் விட்டுக்கொடுக்கும்—வேண்டா எனத் துறக்கும் வாழ்க்கை நிலையாகும். 'யான்' எனும் அகப்பற்றையும், 'எனது' எனும் புறப்பற்றையும் உள்ளத்தால் துறந்து, 'எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய்' ஒழுகும் வாழ்க்கை நிலையே, துறவறமாகும். எனவே, உள்ளத்தால், உணர்வால்,

செயலால் அரிதின் முயன்று அடையவேண்டிய பெறற்கரும் பேறே, தமிழ்ப் பண்பாட்டில் அறமாகப் போற்றப்படுகிறது. இதனால், மனிதன் ஒழுகலாற்றில் மாற்றமுறவும், முன்னேறவும், முழுநிறைவை — சான்றாண்மையினை — அடையவும் நம்முடைய அறநெறிக் கோட்பாடு வாய்ப்பினை அளிக்கிறது. 'அறம்' எனும் சொல் தருமம், புண்ணியம், தகுதி, ஞானம், நோன்பு, தீப்பயன் உண்டாக்கும் சொல், அறக்கடவுள், இயமன் எனும் எண்வகைப் பொருள்களை யுடையதாகும்.[1] திருவள்ளுவர் தருமம்,[2] இல்லறம்,[3] துறவறம்,[4] வழக்கம், முறைமை, ஈகை, அறக்கடவுள்,[5] அறநூல்,[6] புண்ணியம்[7] எனும் ஒன்பது வகைப் பொருள்களில், 'அறம்' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.[8]

அறம் என்ற சொல்லிற்குரிய நேரான பொருள் 'அறுத்துச் செல்வது: வழியை உண்டாக்குவது' என்பதேயாகும். மனித இனத்தின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக்கொண்ட ஒழுக்க நெறியே, 'அறம்' என்பது. இதனால் பெறப்படுகிறது. இவ்வொழுகலாறு வழக்காற்று ஒழுக்க நெறிகளையோ, குடும்பக் கடமைகளையோ, சமுதாயக் கடமைகளையோ, மானிடக் கடமைகளையோ, ஆன்மிகக் கடமைகளையோ மட்டும் சுட்டவில்லை. இவை யாவும் அறவாழ்வின் முதல்நிலையில் இடம்பெறும் பல்வேறு பிரிவுகளாகும்.

ஆனால், அறம் மனித நடத்தையையும் ஒழுகலாற்றையும் கடந்து, உயர்ந்து விளங்கும் மெய்யுணர்வுத் தன்மை வாய்ந்த 'வாழ்க்கை நெறியாக' விளங்குகிறது. அறச்செயல்கள் அனைத்தின் கண்ணாடியாக — மேல்வரிச் சட்டமாக அறம் போற்றப்படுகிறது. இவ்வகையில் 'அறம்', 'பண்பாடு' எனும் பொருள்பயக்

---

1. தமிழ்ப் பேரகராதி (சென்னைப் பல்கலைக் கழகம், 1936), தொகுதி 1, பக். 174.
2. திருக். 8: 31—39, 46, 93, 96, 185, 249, 283, 295, 297, 501, 1018, 1019, 1047.
3. ௸ 49.
4. ௸ 23, 76.
5. ௸ 77, 130, 141
6. ௸ 183, 189.
7. ௸ 24, 33, 40, 45, 48, 49, 142, 147, 148, 15[illegible], 157, 163, 173, 179, 18[illegible], 189, 321, 3[illegible]6, 441, 6[illegible]5, 641, 75[illegible], 9[illegible]
8. இவற்றின் விளக்கத்தைத் 'திருக்குறள் நீதி இலக்கியம்' எனும் நூலின் பக். 23-48இல் காண்க.

குவதாக அமைகிறது. டி. எஸ். எலியட் "வாழ்க்கையைப் பயன் மதிப்பு உடையதாகச் செய்வது பண்பாடு"[9] என்று விளக்கியுள்ளார். இந்த நோக்கில் 'அறமே பண்பாடு; பண்பாடே அறம்' என உரத்த குரலில் முழங்கலாம்போல் தோன்றுகிறது.

பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல் (கலித். 133)

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் (திருக். 997)

எனப் போற்றப்படும் பண்புகளின், முழுநிறை வடிவமாக ஒழுகுவது - வாழ்வது அன்றோ பண்பாடு! எனவே, அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கையில் வெளிப்படுவதே பண்பாடு எனலாம்.

## பொருள்

மனிதனுடைய தேவைகள் பல. அவற்றுள் முதன்மையானது 'உடைமைகள்' பலவற்றைச் சேர்க்க வேண்டும் எனும் அவாவாகும். இந்த அவாவினை, நிறைவு செய்துகொள்ள முயலுவதற்கு உதவியாக உள்ளது பொருளை - செல்வத்தைத் - தேடுதல். பொருளைத் தேடி, சேர்த்துக் காத்து, வகுத்து, வழங்கி இன்பம் துய்க்கும் கலையினைப் 'பொருளியல்' (Economics) என இக்காலத்தில் வழங்குகின்றோம். தேடிய பொருளைக் காக்கவும், வளர்க்கவும், பெருக்கவும் காவல் தேவைப்படுகிறது. இத்தகைய காப்பினை அளிப்பது அரசு. அவ்வரசின் இயல்புகளை எடுத்துரைப்பது அரசியல் (Political Science). இவ்விரண்டும் பின்னிப் பிணைந்த நிலையினையே 'பொருள்' என நம் முன்னோர்கள் போற்றியுள்ளனர். திருக்குறளின் பொருட்பாலும், வடமொழி அருத்த சாத்திரமும் இம்மரபைப் பின்பற்றியனவாகும்.

பொருள் எனும் சொல்லிற்குப் "பொருள், சொற்பொருள், கருத்து, உண்மைக் கருத்து, காரியம், தத்துவம், மெய்ம்மை, மதிப்பு, கல்வி, அறிவு, கொள்கை, அறம், பயன், வீடுபேறு, கடவுள், செல்வம், பலபண்டம், பொன், மகன், தந்திரம், சுணங்கு, உவமேயம், நால்வகைப் பேறு, அருத்தாபத்தி, அகம் புறம், அருத்த சாத்திரம்" எனும் இருபத்தாறுவகைப் பொருள்கள் தமிழில் வழங்குகின்றன.[10] இவற்றுள் திருவள்ளுவர், தத்துவம்,[11]

9. T. S. Eliot: Notes Towards Definition of Culture p. 27
10. தமிழ்ப் பேரகராதி (சென்னைப் பல்கலைக் கழகம், தொகுதி 5) பக். 2935–36
11. திருக். 5

அறம்,[12] நால்வகைப் பேறு,[13] மதிப்பு,[14] கருத்து,[15] செல்வம்,[16] பயன்,[17] அருத்த சாத்திரம்,[18] மெய்ம்மை[19] எனும் ஒன்பது பொருள்களில் 'பொருள்' எனும் சொல்லைப் பயன்படுத்தி யுள்ளார்.

இவற்றால், மனிதனால் 'உடைமைகளாகப் பெறக்கூடிய பொருள்கள் அனைத்தையும், ஐப்பொறிகளால் நுகர்ந்து இன்பம் துய்க்கக்கூடிய பொருள்கள் அனைத்தையும் தழுவிய நிலையில் 'பொருள்' எனும் உறுதிப்பொருள், போற்றப்படுவது புலனாகின் றது. நம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களை யும், மனித வாழ்க்கையின் கடமைகளைச் செம்மையாகச் செய்து முடிப்பதற்கு இன்றியமையாதனவாக உள்ள பொருள்களையும் அது சுட்டுகிறது. மேலும், புலன் நுகர்ச்சிக்கு இன்றியமையாத பொருள்களையும், மனித உணர்ச்சிகளை நிறைவுபடுத்தி, சிந்தை யின் (மனத்தின்) நிறைவாகிய செல்வத்தை அளிக்கும் பொருள் களையும், மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத நேர்மையான தேவைகளாகிய அன்பு, காதல், கல்வி, அறிவு, உடைமைப்பண்பு போன்ற உணர்வுகளையும், கருத்துப் பொருள்களையும் 'பொருள்' எனும் சொல்லினாலேயே நம்முடைய முன்னோர்கள் உணர்த்தி வந்தனர்.

இவ்வாறு, 'பொருள்' என்னும் சொல் மிக விரிந்தும், பரந் தும் பல்வகைப் பொருள்களைப் பயப்பினும், 'மும்முதற் பொருள்' முறையிலும், 'நால்வகைப் பேறு' நிலையிலும் 'அரசியல்' அல்லது 'ஆட்சிக்கலை' (Polity) எனும் பொருளே முதன்மையுடையதாக விளங்குகிறது. அன்றாட வாழ்வில், தனிமனிதன் அரசியலில் பெறும் பங்கையும், நாட்டின் தலைவன் என்ற முறையில் அரசன் அதிகாரம், செல்வம் முதலியவற்றைப் பெற்று, அவற்றை நிலை நிறுத்துவதையும் குறிக்கிறது.

திருக்குறளின் இரண்டாம் பகுதி, 'பொருட்பால்' என்பதாகும். அப்பகுதியில் அரசியல், அரசியல் சூழ்ச்சித்திறன், பொருளியல், ஆட்சி முறையின் பல்வேறு இயல்புகள் போன்ற

12. ஷை 91, 254
13. ஷை 122, 128
14. ஷை 751;
15. ஷை 423
16. ஷை 63, 171, 176, 212, 1230
17. ஷை 254
18. ஷை 141
19. ஷை 5

பல அரசியல் நுணுக்கங்கள் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்படுட்ள்ளன.

## இன்பம்

மும்முதற் பொருள்களுள் மூன்றுவதாகவும், நால்வகைப் பேறுகளுள் மூன்றுவதாகவும் இடம் பெறுவது இன்பம். இன்பம் எனும் சொல், அகமகிழ்ச்சி, இனிமை, காமம், கலியாணம், சொற்சுவை, பொருட்சுவை எனும் ஐவகைப் பொருள்கள் உடையதாகும்.[20]

திருவள்ளுவர், **அகமகிழ்ச்சி** எனும் விரிந்த பொருளிலேயே 'இன்பம்' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.[21] இன்பம் பல்வேறு வகையாக வரும் என்பது வள்ளுவர் கருத்து.

அறத்தான் வருவதே இன்பம் (திருக். 39)
மக்கள் மெய்தீண்டல் உடற்(கு) இன்பம் (திருக். 65)
சிறுமையுள்நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் (திருக். 98)
ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் (திருக். 156)
சிற்றின்பம் வெஃகி (திருக். 173)
ஈத்துவக்கும் இன்பம் (திருக். 228)
இருள்நீங்கி இன்பம் பயக்கும் (திருக். 352)
இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின் (திருக். 369)
அறம் பொருளின்பம் உயிரச்சம் (திருக். 501)
இன்பம் விழையான் (திருக். 615, 628)
இன்பத்துள் இன்பம் விழையாதான் (திருக். 629)
இன்னாமை இன்பம் எனக்கொளின் (திருக். 630)
இன்பம் பயக்கும் வினை (திருக். 669)
பிணிஇன்மை, செல்வம், விளை(வு) இன்பம் (திருக். 738)
இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் (திருக். 854)

---

20. தமிழ்ப் பேரகராதி, தொ. 1; பக். 368
21. திருக். 39, 65, 98, 156, 173, 228, 352, 369, 501, 615, 628—630, 669, 738, 754, 854, 869, 945, 1052, 1166, 1330

செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின் (திருக். 869)

இழிவறிந்து உண்பான் கண் இன்பம் (திருக். 946)

இன்பம் ஒருவர்க்கு இரத்தல்; இரந்தவை
துன்பம் உறுஅ வரின் (திருக். 1052)

இன்கண் உடைத்தவர் (திருக். 1152)

எனும் குறட்பாக்களால், ஒரு மனிதன் இன்பத்தைப் பல்வேறு வழிகளில் அடைகிறான் என்பது பெறப்படுகிறது. ஆயினும், அவற்றால் அவன் அடைவது மகிழ்ச்சி. இம் மகிழ்ச்சியை, நாம் **அறிவு இன்பம்** அல்லது **மனநலம்** எனலாம். இதனை ஆங்கிலத்தில் 'ஹாப்பினஸ்' (Happiness) என்பர். மும்முதற்பொருளில் மூன்றாவதான **இன்பத்தை,** நம் முன்னோர்கள் இப்பொருளிலேயே வழங்கியுள்ளனர்.

ஆனால், ஐம்புலன்களால் நுகரும் இன்பத்தையும், நாம் இன்பம் எனும் சொல்லால் சுட்டுகின்றோம். இதனைப் **புலன் நுகர் இன்பம்** (Pleasure) எனக் கூறலாம். எண்வகை மெய்ப்பாடுகளுள் உவகை (மகிழ்ச்சி) என்னும்மெய்ப்பாடு இவ்விருவகை (அறிவு இன்பமாகிய மனநலம், புலன் நுகர் இன்பம்) இன்பத்தின் அடிப்படையில் தோன்றுவது என்பதைத் தொல்காப்பியனார்,

செல்வம் புலனே புணர்வு விளையாட்(டு) என்று
அல்லல் நீத்த உவகை[22] நான்கே (தொல். மெய். 11)

என்று தெளிவுறுத்தியுள்ளார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு, திருக்குறளை நோக்குகின்றபொழுது, சிறிது ஏமாற்றமே உண்டாகிறது. திருவள்ளுவர், தம் நூலின் மூன்றாவது பகுதியில் புலன் நுகர் இன்பத்தையே விரித்துரைக்கின்றார். காமத்துப்பாலிற்கு விளக்கம் தருகின்ற உரையாசிரியர்கள் இதனை நன்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

இனி அப்பொருளைத் துணைக்காரணமாக உடைத்தாய் இம்மையே பயப்பதாய இன்பம் கூறுவான் எடுத்துக் கொண்டார். ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொரு

22. 'உவகை எனினும் மகிழ்ச்சி எனினும் ஒக்கும்'—பேராசிரியர் உரை

> ளான் ஐம்புலனும் நுகர்தல் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை[23]

என்பது பரிமேலழகர் கருத்து. இதனை,

> கண்டுகேட்டு உண்டுயிர்த்(து) உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்தொடி கண்ணே உள (திருக். 1101)

எனும் குறட்பா உறுதிப்படுத்துகிறது. இதனால், காம இன்பமே—புலநுகர் இன்பமே - திருவள்ளுவரால் காமத்துப்பாலில் விரித்து உரைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இவ்வாறு கூறுவது தொல்காப்பியரின் வழிப்பட்ட தமிழ்நெறிக்கு, முற்றிலும் பொருத்தமாகத் தோன்றவில்லை. இன்பத்துள் ஒரு பகுதியாகிய காம இன்பத்தையே, தலைமையும் சிறப்பும் கருதி 'இன்பம்' எனத் திருவள்ளுவர் கொண்டனர் போலும்.

எனவே, இங்கு இன்பம் என்பது புலன்நுகர்ச்சியால் பெறும் இன்பத்தை - காம(காதல்)வாழ்வின் பயனைச் சுட்டுவதாக அமைகிறது.

ஆனால், இன்பம் என்பது வெறும் புலனுகர் இன்பத்தை மட்டும் அல்லாமல், அறிவின்பம், அழகியல் இன்பம், ஆன்மிக இன்பம் போன்றவற்றையும் சுட்டுவதாகக் கொள்ளுவதே பொருத்தமாகும்.

### வீடு

மக்கள் வாழ்க்கையின் தலைசிறந்த குறிக்கோள் 'தன்னைத் தான் அறிதல்' அல்லது பிறவிப் பிணியை அறுத்து, வீடுபேற்றை அடைவதாகும். இதைப்பற்றித் திருக்குறளோ, மற்றப் பழந்தமிழ் இலக்கியங்களோ வெளிப்படையாகப் பேசவில்லை. இதற்குரிய காரணத்தை நாம் முன்னரே கண்டோம்.

'வீடு' எனும் சொல்லிற்கு 'விடுகை, விடுதலை, முடிவு, மனை, இராசி, தேற்று, ஒன்றைக் குறிக்கும் குழூஉக் குறி' எனும் பல பொருள்கள் வழக்கில் உள்ளன.[24] இவற்றுள் 'விடுதலை' அல்லது 'விடுகை' எனும் பொருளிலேயே **மோட்சத்தை,** நாம் வீடு பேறெனச் சுட்டுகிறோம். இன்ப துன்பத்திலிருந்து, 'இருள்சேர்

---

23. பரிமேலழகர் மட்டும் அல்லாமல் பரிப்பெருமாளும் இக் கருத்துடையவராகவே உள்ளார். காண்க: திருக்குறள் உரைக் கொத்து, காமத்துப்பால், பக். 1-3
24. தமிழ்ப் பேரகராதி, தொ. 6; பக். 3751

இருவினையில்' இருந்து விடுதலை பெறுவதே 'வீடு' எனவும், 'யான்' எனும் அகப்பற்றையும், 'எனது' எனும் புறப்பற்றையும் விட்டு ஒழிப்பதே (விடுகையே) வீடுபேறு எனவும் பலவகையான விளக்கம் கூறுவர்.

'வீடு' எனும் சொல்லைத் தம் நூலில், யாண்டும், 'முத்தி' எனும் பொருளில் வள்ளுவர் பயன்படுத்தவில்லை.

நாடாது நட்டலின் கேடில்லை; நட்டபின்
வீ(டு) இல்லை நட்(பு)ஆள் பவர்க்கு (திருக். 791)

எனும் குறட்பாவில், 'விடுதல் இயலாது' எனும் பொருளில், 'வீடு' எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 'இறைவன் அடி சேர்தல்[25], 'மேல் உலகம்'[26] 'அவ்வுலகம்'[27] 'வானோர்க்கு உயர்ந்த உலகம்'[28] 'பேரா இயற்கை'[29] எனும் தொடர்களைக் கொண்டு, திருவள்ளுவர் வீடுபேற்றையே சுட்டியுள்ளமை புலனாகின்றது.

தனி மனிதனின் மனவளர்ச்சியே, நம் வாழ்க்கையின் நோக்க மாகும். 'மனிதனைக் காட்டிலும் மாண்புமிக்க பொருள்' உலகில் வேறு ஒன்றும் இல்லை. உடல், உயிர், உள்ளம் ஆகியவற்றின் வெறும் கூட்டுச்சரக்கு அல்ல மனிதன். அவனிடம், செம்பாதிக்கு மேல் விலங்கு இயல்புகள் குடிகொண்டுள்ளன. பல சமயங் களில், அவற்றையே தம் (மனித) இயல்புகள் எனத் தவறாக எண்ணி, அவன் மதி மயங்கிவிடுகிறான். அவை, அவனுடைய முழுமைத்தன்மையும் அல்ல; உண்மையான இயல்புகளும் அல்ல. அவை, 'தன்னைத் தான் அறிவதற்கு'ப் பயன்படும் கருவி களேயாகும். படிப்படியாக ஆன்மிக உணர்வு பெற்று, 'நான் யார்? என் உள்ளமார்? என் ஞானங்கள் யார்?' என மெய் யுணர்வுச் சிந்தனையில் மூழ்கும் நிலையில், அவை அடங்கி யொடுங்கி விடுகின்றன.

இவ்வான்மிக உணர்வின் மூலம், அவன், தன்னுடைய உண்மை இயல்பினை - ஆன்மாவை - உணர முயலுகிறான். இவ்வாறு, ஒருவன் தன் ஆன்மாவை மெய்யாக உணர்ந்து போற்றுவதற்கு, இவ்வுலக வாழ்க்கையில் அறம், பொருள், இன்பங்கள் வாய்ப்பு அளிக்கின்றன; தூண்டுகோல்களாக

25. திருக். 10
26. ஷை, 222
27. ஷை, 247
28. ஷை, 346
29. ஷை, 370

அமைகின்றன. ஆன்மாவினை உணர்வதன்மூலம், மனிதன் தன்னுடைய உண்மை இயல்பினை அறிகிறான்; அப்பேருண்மைப் பெரும்பொருளாகிய இறைவனின் திருவருளில் ஈடுபட்டு, புற உலகை மறந்துவிடுகிறான். இவ்வாறு, தன்னுடைய ஆன்மிக ஆற்றலைக்கொண்டு அகத்தும் புறத்தும், தன் ஆன்மாவின் உண்மை நிலையினை உணர்தலே வீடுபேறாகும். மனத்தாலும் அறிவின் திறத்தாலும், இதயத்தாலும், அதில் பொங்கியெழும் அன்பாலும், மனத்திடத்தாலும், செயல் திறத்தாலும் அனைத்துலகப் பண்பைப் பெற முயலுவதே மனிதப் பண்பின் மாண்பு மிகு இலட்சியமாகும். அந்த இலட்சியத்தையே 'வீடுபேறு' எனப் போற்றுகிறோம்.

முன்னரே கண்டதைப்போல, பண்டைத் தமிழரின் அறவியல் கொள்கையும், அதில் மலர்ந்த முயற்சிமிகு அறச்செயல்களும் வரம்பற்ற இருத்தலின் மாபெரும் உயர்நிலைக்கும், இயக்கமாகிய வரம்பற்ற உணர்வுநிலையின் கொடுமுடியான பேரின்பத்திற்கும் வழிகாட்டும் வான்பொருளாக அமைகின்றன. புலனடக்கமும், நுகர்ச்சி விருப்பங்களில் பற்றற்ற மனப்பான்மையை வளர்த்தலுமே மனிதன், தன் ஆன்மாவின் இயல்புகளை உணர்வதற்கும், இறைவனுடைய அடிசேர்தலுக்கும் உறுதுணையாக அமைகின்றன. இந்நிலையினை அடைதலே 'முத்தி' எனப் போற்றப்படுகிறது. இவ்வாறு 'வீடுபேறு', அடைய வேண்டிய இலட்சியமாக விளங்குகிறது. ஆனால், நடைமுறையில், இந்த வாழ்க்கையில், தனிமனிதனால் அனுபவிக்கப்படும் மெய்ம்மையான இருத்தல் நிலையாக வீடுபேறு விளங்குகிறது. நடப்பு இயலில் நன்மையும் தீமையும், நல்லதும் கெட்டதும் வாழ்க்கையைச் சிக்கல் உடைய தாக்குகின்றன. அவற்றுக்கு இடையே, வேறுபாட்டை உணர்வது, வீடுபேற்றை அடைவதற்குத் தேவைப்படும் அறிவாகும். இவ்வறிவு ஒரு கருவியாகும். ஆனால். ஒருமுறை அப்பெருநிலையை அடைய முயலும் ஆன்மா, சீவன் முத்த நிலையை அடைந்துவிடுமானால், அவை பொருளற்றனவாய், பயனற்றனவாய்ப் போய்விடுகின்றன. இந்நிலையில், அறவியலும் அப்பாலைத் தத்துவமும், அறிவியலும் சமயமும், அளவையியலும் அனுபூதிக்கலையும் ஆன்மிக அனுபவத்துள் இரண்டறக் கலந்து ஒன்றாகிவிடுகின்றன. அந்த ஆன்மிக அனுபவத்தின் முதிர்ந்த நிலையே - கனிந்த நிலையே 'வீடுபேறு' எனலாம்.

பொதுவாக 'வீடுபேறு' என்பது செத்த பிறகு, மனிதன் அடையக் கூடிய ஒப்புயர்வற்ற - பெருநிலையாகக் கருதப்படுகிறது

ஆயினும், இவ்வுலகில், கூற்றம் குதித்தவர்கள்,[30] பிறப்பறுத்த வர்கள்,[31] 'இறைவன் அடிசேர்ந்து பேரின்பப் பெருவாழ்வைத் துய்த்தலாகிய சிவன் முத்த நிலையினையே' திருவள்ளுவர் வீடு பேறாகக் கருதுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (திருக். 10)

எனும் குறட்பாவில் 'இறைவன் அடிசேர்தலை' வீடுபேறாக வள்ளுவர் தெரிவிக்கிறார்.[32] 'சேர்தல்' என்னும் சொல்லிற்கு 'இடைவிடாது நினைத்தல்'[33] என்பது பொருளாகும். இடைவிடாது நினைத்தலையே 'தியானம்' என்பர். இத்தியானத்தின் முடிமணியாக விளங்குவது 'தூங்காமல் தூங்கி சுகம் பெறும்' யோகநிலை. இந்நிலையினை அடைந்தவர்கள் சிவன்முத்தர்கள். அவர்களே கூற்றம் குதித்தவர்கள்; பிறப்பறுத்தவர்கள்; பேரா இயற்கைப் பெருநிலையை எய்தியவர்கள்; மண்ணகத்தில் விண்ணக வாழ்வாகிய வீடுபேற்றை அடைந்தவர்கள் என்பது திருக்குறள் உணர்த்தும் வீடுபேறாகும்.

மனித வாழ்க்கையின் தேவைகளையும், முயற்சிகளையும், செயல்முறைகளையும் இவ்வாறு அறம், பொருள் இன்பமெனத் திருவள்ளுவரும், இவற்றோடு வீடுபேற்றைச் சேர்த்து மற்றவர் களும் வகைப்படுத்தித் தெளிவுறுத்தியுள்ளனர். இவை ஒவ் வொன்றும் தனித்தனியான வாழ்க்கைத் தத்துவங்கள் அல்ல; ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, முதலும் முடிவுமாக விளங்குவனவாகும். அறத்தின் நெறிநின்று, பொருளை ஈட்டி, அறவழியில் பொருளைப் பயன்படுத்தி வாழ்ந்தால், இன்பம் தானே வந்தடையும். அவ்வின்பம் மண்ணக இன்பமாகவும், விண்ணக இன்பமாகவும் அமையும் என்பது அனைவருக்கும் பயன்படும் ஒருவகைப் பொதுநெறி. அறநெறியில் பிறழாது இன்பம் துய்த்து, இல்லறத்தை நல்லறமாகப் போற்றிவாழ்ந் தால், வானுறையும் தெய்வநிலையும் எளிதிற் கிட்டும் என்பது இல்லற நெறி! உலகப் பற்றுகளைத் துறந்து, 'உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாமல்' தவநெறியில் நின்று,

30. திருக். 269
31. ஷை, 345
32. விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை (தேவா. 268)
33. திருக். 3. பரிமே. உரை

சிறப்பென்னும் செம்பொருளைக் கண்டால், 'மற்றீண்டு வாரா நெறியில்' சென்று, அறவாழி அந்தணனாகிய இறைவன் அடி சேர்வர். இது துறவற நெறி! இவை இரண்டும் சிறப்பு வகையான நெறிகளாகும். இம்மூவகை நெறிகளுக்கும் அடிப்படையாய், நிலைக்களனாய் இருப்பது அறம். எனவே, அறத்தின் ஆட்சியால் பொருளின் மலர்ச்சியையும், இன்பத்தின் எழுச்சியையும் எய்தும்பொழுது, வீடுபேறு தானே வந்து அடையும் என்பது இதனால் புலனாகின்றது.

"புருஷார்த்தங்கள், அதாவது மானிட ஜன்மம் எடுத்ததினின்றும் ஒருவன் அடையக் கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முத்தி, வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாகையால், அதனை விரித்துக் கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதல் அத்தியாயத்தில் கூறி நிறுத்தி விட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கி, திருவள்ளுவ நாயனார் **முப்பால்** (மூன்று பகுதிகளையுடையது) என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினார்.

ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட்பாக்களில், நாயனார் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமான செய்கை என்று கருதப்பட்டது. இது கண்ட ஔவைப் பிராட்டி, வீட்டுப்பாலையும் கூட்டி நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக்குள் அடக்கிப் பாடினார்.

> **ஈதல்அறம்**; தீவினைவிட்(டு) ஈட்டல் **பொருள்** எஞ்ஞான்றும்
> காதலிருவர் கருத்(து) ஒருமித்(து)—ஆதரவு
> பட்டதே **இன்பம்**; பரனை நினைத்(து)இம் மூன்றும்
> விட்டதே பேரின்ப **வீடு**"

என்பது சுப்பிரமணிய பாரதியாரின் கருத்து.

# முப்பாலின் மாட்சி

இந்திய நாடு பழம்பெரும் நாடு. உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் இந்தியப் பண்பாடு தன்னிகரற்று விளங்குகிறது. இப்பண்பாட்டினை உருவாக்கிய சமயங்கள் மூன்று. அவை இந்த மண்ணிலே தோன்றி, வளர்ந்து, சிறந்து, உலகப் புகழ் பெற்றன. இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம் எனும் முப்பெரும் சமயங்களும் இந்தியச் சிந்தனையை வளப்படுத்தின; மெய்ப்பொருள் ஆய்வின் கொடுமுடிக்குக் கொண்டு சென்றன.

## திருவள்ளுவரின் தனிச்சிறப்பு

அண்மைக் காலம் வரையில் இந்தியச் சிந்தனையாளர்கள், மெய்ப்பொருள் ஆய்வினைச் சமயத்தின் ஒரு பகுதியாகவே—, முதிர்ச்சிமிகு அறிவாராய்ச்சியாகவே — போற்றி வந்தனர். எனவே, அறம் — தருமம் — சமயத்தோடும் சமய வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே, அறிஞர்களால் கருதப்பட்டது. அறம்பாட வந்த அறவோர்களும், யாதாகிலும் ஒரு சமயத்தின் அடிப்படையிலேயே தங்கள் அறக்கொள்கையை உருவாக்கி யுள்ளனர். இதற்குத் திருவள்ளுவர் ஒருவரே விதிவிலக்கு. குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சாராது, அக்காலத்து நிலவிய பல்வேறு சமயங்களின் விழுமிய கருத்துகளை ஏற்று, தம் அறநூலில், அவற்றிற்குப் புதிய வண்ணத்தையும் வடிவத்தையும் திருவள்ளுவர் தந்துள்ளார். எனவேதான், எல்லாச் சமயத்தினரும் உரிமை கொண்டாடத்தக்க நிலையில் அவர், 'அனைத்துலக மனிதனைப் பாடும் பாவலராக' விளங்குகின்றார்.

இவ்விருபதாம் நூற்றாண்டில்தான், மேற்கு நாடுகளின் அறவியல் சிந்தனையாளர், 'அறவியல் சமயச் சார்பற்றது' (Secular) எனப் பறை சாற்றுகின்றனர். இதனை வள்ளுவர், வாயினால் பேசாமல், செயலினால், தமது நூலில் கோடி காட்டியுள்ளார்,

ஆனால், திருவள்ளுவருக்குப் பிறகு, தமிழ் நாட்டிலும் இந் நெறியைப் போற்றியவர் இல்லை!

ஆகவே, இந்திய அற நூல்களோடு திருக்குறளை ஒப்பீடு செய்வதற்கு, நாம் சமயச் சார்பற்ற அறநூல்களைத் தேர்ந்து எடுக்க இயலவில்லை. இதனால், இந்து, சமண, பௌத்த சமயங் களின் அறநூல்களோடு தனித்தனியாக ஒப்பிட்டு ஆய்வு செய் வதே, நடைமுறைக்கு உகந்த செயலாக அமைகிறது. இவ்வுண் மையினைக் கருத்தில்கொண்டு, 'இந்திய அறநூல்களிடையே திருக்குறள்' எனும் இவ்வாய்வுரை வரையப்படுகிறது.

### அறநூல்களின் கருமுதல்

இந்து சமயத்தின் தொன்மைக் கருவூலமாக வேதங்கள் விளங்குகின்றன. அவற்றில் அறக்கொள்கைகளின் கருமுதல், ஆழ வேரூன்றி வளர்ந்துள்ளதைக் காணுகின்றோம். வேதகால ஞானிகள் அறநெறிக் கொள்கைக்கு அண்டத்தில் அமைந்துள்ள ஓர் ஒழுங்கு முறையை அடிப்படையாக உணர்ந்து போற்றினர். அதனை, அவர்கள் ரித (Rta) எனும் சொல்லால் சுட்டினர். இது 'இருக்கு வேத சிந்தனையின் கொடிமுடியை எட்டிப் பிடிப்பதாக' அறிஞர் கூறுவர்.[1]

தொடக்கத்தில், 'ரித', இவ்வண்ட அமைப்பின் புறநிலை இயக்க ஒழுங்கை விளக்கும் கொள்கையாக இருந்தது. கோள் களின் இயக்கம், இரவும் பகலும் அடுத்தடுத்துத் தோன்றுதல், பருவங்கள் திரும்பத்திரும்ப மாறிவருதல் போன்ற இயற்கையின் இயக்கத்தை உணர்த்தும் இயற்கை நியதியாகக் கருதப்பட்டது. அமைப்பு முறையில் காணும் ஓர் ஒருமைப்பாட்டை - ஒழுங் கிசைவை சுட்டுவதன் மூலம், இயற்கையில் பல்வேறு இயல்பு களுக்கும் இடையே ஒருவகைச் செம்மை நலஞ் சார்ந்த அழகியல் வடிவத்தைக் கண்டு, அனுபவிக்க அக்கருத்து சிறந்த கருவியாகப் பயன்பட்டது. இந்த நியதிக்குட்பட்டே, மண்ணகமும் விண்ணக மும் அறவொழுங்கு உடைய அழகோடு, இயங்குவதாக வேதகால முனிவர்கள் கருதினர்.

நாளடைவில், அண்டத்தின் இயக்கத் தொடர்பான ரித, 'இயற்கை நியதி' எனும் பொருளையுணர்த்தும் நிலையிலிருந்து வளர்ந்து, திரிந்து, ஒழுக்க நியதி எனும் சமூகப் பொருளைப் பெற்றது. இவ்வளர்ச்சியின் போக்கினால், ஒழுக்கநெறி முக்கியத் துவம் வாய்ந்ததாயிற்று. அண்டப் பகுதியின் இயக்கத்தை இயற்கை நியதி தெளிவுறுத்தியதைப்போல, சமுதாய வாழ்வில்

1. A. L. Basham, The Wonder that was India, p. 216

அறமும், வாழ்வுநிலை விளக்கமாக அமைந்தது. இயற்கையின் நியதியைப் போன்றே, ஒழுக்கநெறிச் சட்டமான அறமும், உள்ளுறு பயன்மதிப்பு உடைய உண்மையாகப் போற்றப்பட்டது. சீரில்லாத மனித இயற்கையின் முயற்சிகளுக்கு, அது அற வடிவம் கொடுத்து, அண்டத்து இயற்கை நியதியைப் போன்று, மனிதனின் செயல்முறைகளுக்குச் சீரான வண்ணத்தையும், எழிலார்ந்த வடிவத்தையும் கொடுத்தது.

அறநெறிச் சட்டமாகக் கருதப்பட்ட 'ரித' வேதகாலச் சிந்தனையின் சிறப்பியல்பாக அமைந்தது. இந்தப் பயன்மதிப்பு உணர்வே, அக்காலக் கவிஞர்களின் சிந்தனையில் சிறப்புமிகு ஒழுங்கிசைவை அமைத்துக் கொடுத்தது. அவர்கள் அனைவரும்,

> மனிதன் செல்வத்தைப் பற்றி நினைக்கலாம். அதை அடைய அரும்பாடு படலாம். ஆனால், அவன் முயற்சிகள் யாவும் 'ரித'வின் நெறிப்பட்டதாக இருக்கவேண்டும். அவனுடைய மனத்தின் நுண்ணுணர்வைக் கொண்டு, எது 'ரித'வின் நெறியெனத் தெளிதல் வேண்டும். இவ்வுணர்வோடு, சிறந்த உள்ளவுரத்தையும் சிந்தனையார்வத்தையும் அவன் மேலும் பெறவேண்டும்,[2]

எனும் முறையில் அதைப் போற்றினர்.

இத்தகைய அறவுரைகள் பல இருக்கு வேதத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றால், 'ரித'வை முடிந்த இலட்சியமாகக் கொண்டு, வேதகால சமயமும், சமுதாயமும் உருவாக்கப்பட்டதை அறிகிறோம். பிற்காலத்தில், தருமத்தையும் காமத்தையும் பற்றிய இந்து சமயக் கொள்கைகளை விரிவான நிலையில் தோற்றுவிக்கும் அரும்பணியில், இக்கொள்கையின் கருத்துகளே அடிப்படையாக அமைந்தன. பையப் பைய நல்வினை, தீவினை, தருமம், முத்தி எனும் கருத்துகள் வேதகாலத்தில் மலர்ந்து மணம் பரப்பலாயின.

பின்னர் பிராமண, உபநிடதக் காலங்களில் பிறவிச் சுழற்சி, கருமம் (வினைப்பயன்), அகிம்சை, ஆசிரம தருமம், சத்தியம், சகிப்புத் தன்மை, கடமைபோன்ற அறக்கொள்கையின் அடிப்படைக் கருத்துகள் நன்கு வளர்ச்சியுற்றன.

**வடமொழியில் மும்முதற் பொருள்**

சம்ஸ்கிருத மொழிவாணர் 'மும்முதற்பொருளை'த் **திரிவர்க்கம்** எனும் பெயரால் சுட்டினர். 'திரிவர்க்கம்' என்பதற்கு

---

2. R. T. H. Griffith (Tr.), The Hymns of the Rig Veda, (Lazarus & Co., Benares, 1926), Vol. 2; p. 425

**'மூன்று பிரிவுகள் (பகுதிகள்)'** என்பதே பொருள். திருக்குறளுக்கு 'முப்பால்' என்பதே ஆசிரியர் இட்ட பெயராக இருத்தல் கூடும் என்பதை நாம் முன்னரே கண்டோம். வடமொழியில், எக்காலத்தில் இச் சொல்லாட்சி வழக்கிற்கு வந்தது என்பதை நாம் திட்ட வட்டமாகக் கூறுவதற்கு இயலவில்லை. முதன்முதலாக, மகா பாரதத்திலும், சாணக்கியரின் அருத்த சாத்திரத்திலும் இச் சொல்லாட்சியைக் காணுகின்றோம். மகாபாரதத்தில் சாந்தி பருவத்தில் இத்தொடர் இடம் பெற்றிருப்பதை நாம் முன்னரே கண்டோம். மற்றும், மகாபாரதத்தில் ஆதிபருவத்திலும் திரி வர்க்கம் பேசப்படுகிறது.[3] தருமம், அருத்தம், காமம் மக்கள் வாழ்க்கையில் பெறும் இடத்தையே மகாபாரதம் 'திரிவர்க்கம்' எனும் தொடரால் சுட்டுகிறது.

கௌடில்யரின் அருத்த சாத்திரத்தில் 'திரிவர்க்கம்' எனும் தொடர் **'அர்த்த திரிவர்க்கம்', 'சம்சய திரிவர்க்கம்'** என, அடை கொடுத்து, சிறப்பிக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். 'அர்த்த திரிவர்க்கம்' என்பது அருத்தம் (பொருள்), தருமம், காமம் எனும் முப்பொருள்களாகும். வைப்பு முறையில், பொருள் நூலாசிரிய ரான சாணக்கியர், அருத்தத்திற்கே முதலிடம் கொடுத்துள்ளார்.

> அர்த்தோ தர்ம காம
> இதயார்த்த த்ரிவர்க்கா[4] என்பர்.

அடுத்து, அர்த்தம்—அநர்த்தம், தருமம்—அதருமம், காமம்—சோகம் எனும் மூவகை இரட்டைகளைக் காட்டி, இவை மலைப் பினை உண்டாக்கும் (சம்சயம்) திரிவர்க்கம் என்று கௌடில்யர் குறிப்பிடுகிறார்.[5]

தரும சூத்திரங்களில் 'திரிவர்க்கம்' எனும் சொல்லாட்சியோ, குறிப்போ இடம்பெறவில்லை.[6] தருமசாத்திரங்களில் மனுதரும சாத்திரத்திலேயே **'திரிவர்க்கம்'** எனும் ஆட்சியும், விளக்கமும் காணப்படுகின்றன.

---

3. வியாசரின் மகாபாரதம், இராமானுஜாசாரியார் பதிப்பு; கணபதி சாஸ்திரி (மொழி) I: 87: 4
4. R. P. Kangle, The Kautilya Arthasastra, part II, Book I, Ch. 7: 6—7
5. Ibid: Book 9, Ch. 7: 60—64
6. Suresh Chandra Banerji, Dharma Sutras, A study of their Origin & Development pp. 345—350

> **காமத்திற்கு** (விருப்பம்)க் காரணமாக இருக்கும் **அறம் பொருளை** மேலென்றும், இன்பத்திற்கு—நல்வாழ்விற்கு-க் காரணமான பொருளும் காமமே சிறப்பென்றும், பொருளுக்கும் விருப்புக்கும் காரணமாக இருக்கும் அறமே உயர்வென்றும், அறம், காமம் இவற்றை விளக்கும் பொருளே மேலென்றும் பற்பல வகையாகச் சொல்லுகிறார்கள். **அறம் பொருள் காமம்** எனும் **திரிவர்க்கத்துள்**, ஒன்றுக்கொன்று முரண்படாவாறு ஒன்றியிருத்தலே சிறப்பு என்று நான் கூறுகிறேன்.[7]

என்னும் பகுதியில், **திரிவர்க்கம்** எனும் சொல்லாட்சி இடம் பெற்றிருப்பதோடு, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த ஒன்றாக உள்ளமை தெளிவுறுத்தப்படுகிறது. இவ்வாறே, இல்வாழ்க்கையில் ஈடுபட்டோர்க்குரிய ஒழுகலாற்றைக் குறிப்பிடுகின்ற பொழுது,

> மணம் புரிந்துகொண்ட கணவன் மனைவியர் கற்புநிலை தவறிய குற்றம் நேராமல், இருவரும் இணைபிரியாமல், **அறம் பொருள் இன்பம்** ஆகிய **திரிவர்க்கத்தினைப்** பின்பற்றி வர வேண்டும்.[8]

என்று மனு தெரிவிக்கின்றார்.

அரசனுடைய அதிகாரங்களை உணர்த்தும் இடத்து, மனு,

> பட்டத்துக்குரிய மரியாதைகளும், உண்மையும், பொய்மெய் பகுத்தறியும் பழக்கமும், அறநூல்களின் அறிவும், **அறம் பொருள் இன்பங்களை** அறிந்து இருக்கின்ற அரசனே இத்தகைய தண்டநீதிக்கு அதிகாரமுடையவன்[9]

என்று அறிவுறுத்துகின்றார். இங்கு அறம், பொருள், இன்பம் தனித்தனியே, திரிவர்க்கம் எனும் தொகைச் சொல்லின்றிக் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

இவ்வாறே, மற்றும் ஓர் இடத்தில் அறம், பொருள், இன்பம் தனித்தனிப் பெயர்களால் சுட்டப்படுகின்றன.[10]

இவ்வாறு திரிவர்க்கத்தைக் குறிப்பதோடு அமையாமல், அரசநீதியை விரித்துரைக்கும் பகுதியில்,

---

7. G. Buhler, (Tr.), The Laws of Manu, Ch. 2: 224
8. ஷை 9: 102
9. ஷை 7; 26
10. ஷை 6: 48

> இந்நான்கினையும் **புருஷார்த்தங்கள்** என்று அறிந்து, அன்றாடம் சோம்பர் இன்றி நடத்தவேண்டும்.[11]

என்று மனு, அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றை **உறுதிப்பேறுகள்** எனச் சுட்டுகிறார். இதைப்போன்றே, யக்ஞு வல்கிய, நாரத, பிரகஸ்பதி தரும சாத்திரங்கள் போன்றவற்றி லும் நால்வகை உறுதிப்பேறுகளே சுட்டப்படுகின்றன.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு அளவில், வடமொழியில் நாராயணன் என்னும் கவிஞரால் இயற்றப்பட்ட 'இதோபதேசத் திலும்' நால்வகைப் பேறுகளே சுட்டப்படுகின்றன.[12]

### தவறான கருத்து

இவற்றைத் தவிர, பிற வடமொழி அறநூல்களிலோ, இலக் கியங்களிலோ, 'திரிவர்க்கம்' எனும் தொடரோ, அதைப் பற்றிய குறிப்போ காணப்படவில்லை! ஒரு தவறான கருத்து, ஓரளவிற்குத் தமிழ்ப் புலமையோடு, வடமொழி அறிவுவாய்ந்த அறிஞர்களி டையே நிலவிவருகிறது. பர்த்ருஹரி எனும் வடமொழிப் புலவர் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். அவர் 'சதகத் திரையம்' எனும் மூன்று சதகங்களை இயற்றியுள்ளார். அந் நூல்கள் அறம், பொருள், இன்பமாகிய திரிவர்க்கத்தை விளக்கும் வகையில் இயற்றப்பட்ட நூல்களென, மேலே குறிப்பிடப்பட்ட அறிஞர்கள் எழுதியும், பேசியும் வருகின்றனர். நீதி சதகம், வைராக்கிய சதகம், சிருங்கார சதகம் என்பன பர்த்ருஹரி இயற்றிய மூன்று சதகங்களாகும். **நீதி சதகத்தில்** தனி மனித னுடைய அறம், இல்லறம், அரசியல் அறம், ஊழ்வினை ஆகிய வற்றின் இயல்புகளையும் ஆற்றலையும் அவர் விரித்துரைக்கின்றார். 'வைராக்கிய சதகத்தில்' துறவறத்தின் மாட்சியையும், வாழ்க்கை மறுப்புக் கொள்கையையும் அவர் தெளிவுறுத்துகின்றார். பொது மகளிரின் போகத்தில் துய்த்தலையும், பொதுமகளிரின் இயல்பு களையும் முதல் அறுபது பாடல்களில் போற்றிப் பாடும் ஆசிரியர், அடுத்துள்ள நாற்பது பாடல்களில் "பெண்களை நம்பாதே! மனமே! பெண்களை நம்பாதே! அவர்கள் பேரின்பத்தை அடையத் தடுக்கும் தடைக்கற்கள்!" எனும் பல்லவியைச் சிருங்கார சதகத் தில் அவர் பாடுகிறார்.[13] இவை யாவற்றையும் தொகுத்துப் பார்ப்

11. ஷெ 7: 99
12. இதோபதேசம், (புக்ஸ் இந்தியா, 1959) சு. 26
13. பர்த்ருஹரியின் மூன்று சதகங்களின் நோக்கையும் போக்கை யும் நன்கு அறிய விரும்புவோர் க. த. திருநாவுக்கரசின் "திருக்குறளின் நீதி இலக்கியம்" எனும் நூலில் பக். 308— 324ஐக் காண்க.

போமானால், திரிவர்க்கத்தை விளக்கும் வகையில், திரிசதகங்களைப் பர்த்ருஹரி இயற்றவில்லை என்பது தெரியவரும்.

சமணசமய ஆகமங்கள் ஒழுக்க சீலங்களையும் வீடுபேற்றையுமே சிறப்பித்துப் பேசுகின்றன. பௌத்த நூலான தம்மபதம் அறத்தின் ஆட்சியையும், மாட்சியையும் விரித்துரைப்பதோடு, நிர்வாணத்தை அடைவதற்கு அறவாழ்வே அரியநெறி எனப் போதிக்கின்றது.

இவற்றைக் கருத்தில்கொண்டு இந்திய இலக்கியத்தின்-அற நூல்களின் - வரலாற்றைக் கூர்ந்து நோக்குவோமானால், அறம் பொருள் இன்பம் ஆகிய மும்முதற்பொருள்களை (திரிவர்க்கத்தை) முறையாக விளக்கும் முதல் நூல்-முழுமையாக விளக்கும் தனி நூல், திருவள்ளுவர் இயற்றிய முப்பால் எனப்படும் திருக்குறளே என்பது எளிதிற் புலனாகும். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

"திருவள்ளுவர் ஒரு தமிழ் முனிவர். கிறித்துவ நூற்றாண்டு வரிசையில் முதல் நூற்றாண்டில் அவர் வாழ்ந்ததாகக் கூறுவர். புனிதமான மெய்ம்மொழிகளைக் கொண்ட திருக்குறளை அவர் இயற்றியுள்ளார். தமிழர்கள், அதைத் தங்களுடைய வேதமாகப் போற்றுகின்றனர்."

—காந்தி அடிகள்

# தரும சூத்திரங்களின் அமைப்பும் அழகும்

**மகாபாரதமும் அறக் கோட்பாடும்**

வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளிவீச இயலாத் தொன்மைக் கால இந்திய வரலாற்றினை-ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுவது வியாச பாரதம். அதைக் கதைக் கருவூலம் என்பர். ஏனெனில் அதில் 3500 கிளைக்கதைகள் உள்ளன. 'பாரதத்தை நாம் களஞ்சியமாக, கருத்தின் ஊற்றாக, அறநெறியுணர்த்தும் அறநூலாக, ஐந்தாவது வேதமாகப் போற்றி வருகிறோம். அக்காப்பிய - இதிகாசத்தில் பதினெட்டுப் பருவங்கள் உள்ளன. அவற்றுள் பன்னிரண்டாவது பருவம். 'சாந்தி பருவம்'. அதில் முதலில் உள்ள அனுசான பருவம், ஆஸ்வமேதிக பருவம், ஆசிரமவாசிக பருவம், மௌசல பருவம், மகாபிரஸ்தானிக பருவம், சொர்க்காரோகண பருவம் எனும் ஏழு பருவங்களும் அறங்கள், கடமைகள், வாழ்க்கைநெறிகள், அரச நீதிகள், முத்திநெறி முதலியவற்றை விரித்துரைக்கின்றன. இந்த வகையில், அவையாவும் சேர்ந்து ஓர் அறநூலாக - தருமசாத்திரமாகக் கருதத்தக்க அளவிற்குக் கருத்தாழமிக்க கடலாகவும், பரந்துபட்ட பல்வேறு செய்திகளைத் தெரிவிக்கும் கலைக்களஞ்சியமாகவும் வியாச பாரதம் விளங்குகிறது.

சாந்தி பருவத்தில் அரச தருமம், ஆபத்து தருமம், மோட்ச தருமம் என்பன விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அரச தருமம் என்பது அரசன், அரச பதவி, ஆட்சிமுறை, நட்பு, உறவினர், அதிகாரிகள், கட்டுக்கோப்பு, அகத்தூய்மையும் புறத்தூய்மையும், நல்லவரைத் துணைக்கொள்ளுதல், அரசன் கடமைகள் போன்றவை விளக்கம் பெற்றுள்ளன. 'ஆபத்து தருமம்' என்னும் பகுதியில் ஆபத்துக் காலத்தில் மூன்று மீன்கள், எலியும் பூனையும் எவ்வாறு நடந்துகொண்டன எனும் கதைகள், குற்றம் செய்த இடத்தைவிட்டு நீங்குதல், பாரத்துவாசரின் போதனைகள், விருந்தோம்பல், வலியவனைப் பகைத்தல் கூடாது, சத்தியின்

வரலாறு, பிராயச்சித்தம் தேவை இல்லை என்பன போன்ற செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மோட்ச தருமம் எனும் பகுதியில், வாழ்க்கையின் நால்வகை நிலைகள், பிரவிர்த்தி, நிவிர்த்தி மார்க்கங்கள், பிரமத்தின் இயல்பு, அடையும் வழி, முத்திநிலை என்பன இடம் பெற்றுள்ளன.[1]

அநுசாஸன பருவத்தில் இல்லற தருமம், பூதானம், அன்ன தானம், இன்சொல் கூறல், 'ஊழ்வினை பெரிதா? முயற்சி பெரிதா?', 'தவம் சிறந்ததா? தானம் சிறந்ததா?' என்பன போன்ற பொதுத் தருமங்களைப் பீஷ்மர் உபதேசித்துள்ளார்.

மற்றப் பருவங்களில், பாண்டவர் வரலாற்றுக்கு இடையே சிற்சில அறநெறிக் கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இவையாவும் மகாபாரதத்தைத் தருமசாத்திரம் எனக் கருது மாறு செய்துள்ளன. இப்பருவங்களில் கூறப்படும் அறங்கள் யாவும் 'நடைமுறையில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்க்கமுயலும் சிந்தனைகளாக - ஒழுக்கநெறி விதிகளாக' உள்ளன. அவை பெரிதும் காலத்திற்கும், இடத்திற்கும் கட்டுப்பட்டனவாய், சாதி முறைக்கும் சம்பிரதாயப் பழக்கவழக்கங்களுக்கும் உட்பட்டன வாய் உள்ளன, இவ்வகையில் திருக்குறள் வேறுபடுகிறது. அதனுடைய அறக்கோட்பாடு அனைத்துலகப் பண்புடையதாகக் காலத்தையும், இடத்தையும் வென்று வீறுடன் விளங்குகிறது. மற்றும், சாந்தி பருவத்தில் விளக்கப்படும் 'ஆபத்து தருமம்' 'உயிரைக் காக்க, என்ன வேண்டுமானாலும் செய்யலாம்' என்னும் போக்கில், 'ஆபத்து நேரத்தில் செய்த தீமைக்குப் பாவம் இல்லை' எனும் கருத்தை எண்பிக்க முயலுகிறது. இது,

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (திருக். 656)

எனும் திருவள்ளுவரின் அறவுணர்விற்கு நேர்மாறானது என்பதை எடுத்துரைக்கத் தேவை இல்லை!

மகாபாரதக் கதை நிகழ்ந்த காலம் கி. மு. 1000 அளவினதாக இருக்கலாம் என்பதும், இன்றைய வடிவத்தைக் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன்பே இந்நூல் அடைந்திருக்க வேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர் துணிவாகும்.[2]

---

1. காண்க: ஸ்ரீ மகாபாரதம்: சாந்திபர்வம், அநுசாஸனபர்வம், (தமிழாக்கம்), ம. வீ. இராமானுஜாசாரியார் பதிப்பு, சென்னை, 1916—1928
2. Krishna Chaitanya, A New History of Sanskrit Literature, p. 200

**தரும சூத்திரங்களின் நோக்கும் போக்கும்**

தருமத்தை விளக்கும் சூத்திரங்கள், தரும சூத்திரங்களாகும். தனி மனித வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகளை (ஆசாரங்களை)த் தரும சூத்திரங்கள் வகுத்துரைக்கின்றன. அவை சமயச் சார்பில்லாத, அன்றாட நடைமுறை வாழ்க்கையிலும் எவ்வாறு ஒருவன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றன.

வேறுவகையாகக் கூறுவதானால், தரும சூத்திரங்கள் ஒரு மனிதனுடைய குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, சமய வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. தனிமனிதனுடைய ஒழுகலாறு-நடத்தைப் போன்றவற்றிற்கு விதிமுறைகளை வகுத்துத் தருவதோடு அவை அமையவில்லை; அரச தருமமும் அவற்றிடையே விரித்துரைக்கப்படுகின்றன; சமயச் சார்பற்ற நிலையில் பொருள் வழக்கு (Civil cases), குற்ற வழக்கு (Criminal cases) ஆகியவற்றை விசாரித்து நீதி வழங்குவதற்குரிய சட்டங்களை (Law)யும் வகுத்து அளிக்கின்றன. சுருங்கச் சொல்லுவதானால், சிறப்பாக அக்காலத்திய பிராமண சமூகத்தினரின் அன்றாடக் கடமைகளையும் பழக்கவழக்கங்களையும், சட்ட முறைகளையும் தரும சூத்திரங்கள் தெளிவுறுத்துகின்றன. பிற சாதியினரைப் பற்றிய ஒழுகலாறு மிகவும் அருகிய நிலையில் சுட்டப்படுகின்றன. இதனைப் "பல்வேறு சாதியினருக்கும் வாழ்க்கை நிலையினருக்கும் உரிய கடமைகளை வரையறுத்து அவற்றிற்குரிய விதிமுறைகளையும் ஒழுங்கு முறைகளையும் உணர்த்துவதே தரும சூத்திரங்களின் நோக்கமாகும்"[3] என்னும் விண்டர் நீட்சின் கருத்தினாலும் தெளியலாம்.

பல திறப்பட்ட வழக்காற்று ஒழுக்க நெறிகளை (Customary Morality) - ஆசாரங்களை—ஆரியரல்லாத பிற இந்தியப் பழங்குடி மக்களோடு கலந்து வாழத் தலைப்பட்ட ஆரிய (பிராமண) இனத்தவர், எளிதில் நினைவில் கொண்டு, அன்றாட வாழ்க்கையில் தங்கள் சமூகத்தின் தூய்மை கெடாமல் காத்துக்கொள்வதற்குரிய வகையில் வகுத்துரைக்கப்பட்ட ஒழுகலாறுகள், அரசநீதிகள், வழக்குகளுக்குரிய சட்டங்கள் ஆகியவற்றின் தொகுப்பு நூல்களே, தரும சூத்திரங்கள் எனலாம். எளிதில நினைவில் கொள்ளத்தக்க வகையில், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையில் உரைநடைப் பாணியிலிருந்து சிறிது மேம்பட்ட சூத்திர வடிவில், அவையாவும் இயற்றப்பட்டுள்ளன. இவற்றிற்குக் கல்ப

3. M. Winternitz, History of Indian Literature Vol. I, P. 275.

**சூத்திரங்கள்** எனும் பொதுக் குழுப் பெயரும் வழங்கி வருகிறது. வேதத்தின் ஆறு அங்கங்களுள், ஒன்றாகக் கல்பம் போற்றப்படுகிறது. இதனை **சிரௌத்த சூத்திரங்கள், கிரகிய சூத்திரங்கள், தரும சூத்திரங்கள்** என மூவகையாகப் பாகுபடுத்துவர். இந்த வைப்பு முறையிலேயே, அவை தோன்றி வளர்ந்திருக்கக் கூடுமென அறிஞர்கள் நம்புகின்றனர்.

சிரௌத்த சூத்திரங்கள் வேத வேள்விகளுக்குரிய சடங்கு முறைகளை விரித்துரைக்கின்றன. இரண்டாவதான கிரகிய சூத்திரங்கள், வாழ்க்கையில் தொட்டில் முதல் சுடுகாட்டிற்குப் போகும் வரை அமையும் சிறப்புமிகு சமயங்களில், இல்வாழ்வான் செய்ய வேண்டிய குடும்பச் சடங்குகளையும், கொண்டாடுவதற்குரிய பண்டிகைகளையும், நோன்பு முறைகளையும் தெளிவுறுத்துகின்றன. கடைசியாக உள்ள தருமசூத்திரங்கள், முன்பு கண்டதைப்போன்று "தனிமனிதனின் ஒழுகலாறு—நடத்தை, தனிவாழ்விலும், சமுதாய வாழ்விலும், சமய வாழ்விலும் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்குரிய விதிமுறைகளை" வகுத்துரைக்கின்றன. இவை ஒவ்வொன்றும், வேதகால முனிவர்களோடு தொடர்புடையன; வேதத்தின் பல கிளைக்குழுக்களைச் சார்ந்து வளர்ந்துள்ளன.

யசுர் வேதத்து இருள்பகுதியின் வழிவந்தவை போதாயந, ஆபஸ்தம்ப குழுக்கள் என்பர். சிரௌத்த, சூல, கிரகிய, தரும எனும் நால்வகை சூத்திரங்களை அவை உடையன என்பதிலிருந்தும் இதனை அறியலாம். வேதத்தின் கரும காண்டத்திலிருந்து பிரிந்து, வளர்ந்து, சிறந்தவையே இம்மூவகைச் சூத்திர நூல்களாகும்.[4] அவற்றுள் இன்று நமக்குக் கிடைத்துள்ள சிறப்புமிகு தரும சூத்திரங்களாவன:

(1) கௌதம தருமசூத்திரம் (தென்னாட்டில் தோன்றியது)

(2) போதாயந தருமசூத்திரம் (ஷை)

(3) ஆபஸ்தம்ப தருமசூத்திரம் (ஷை)

(4) வாசிஷ்ட தருமசூத்திரம் (வடநாட்டில் தோன்றியது)

(5) விஷ்ணு தருமசூத்திரம் (ஷை)

(6) வைகாநச தருமசூத்திரம் (ஷை)

---

4. 'சூல சூத்திரங்கள்' என்பன வேள்விக் குண்டத்தின் அமைப்பு முறையைப் பற்றியன. எனவே, பெரிதும் அவற்றைச் சிரௌத்த சூத்திரத்தின் பிற்பகுதியாகக் கொள்ளுவர்.

மனுதரும சாத்திரத்திற்கு முன்னோடியாக **மானவ தரும சூத்திரம்** எனும் நூல் இருந்தது என்றும், ஆனால், அது இன்று கிடைக்கவில்லை என்றும் கூறுவர். அந்நூலின் பல பகுதிகள் பாரதத்திலும், கௌடில்யரின் அருத்த சாத்திரத்திலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. ஆனால், அவை இன்று கிடைத்துள்ள மனுதரும சாத்திரத்தில் காணப்படவில்லை. எனவே, அவை அழிந்துபோன மானவ தரும சூத்திரத்தின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்பர்.[5] வேறு சிலர், அந்த நூலின் சுருக்கப் பதிப்பே, இன்று வழங்கும் மனுதரும சாத்திரம் என்பர்.[6]

**ஆசிரியர்**

இத்தரும சூத்திரங்களின் ஆசிரியர் யாவர் என்பது ஒரு பெரிய புதிராகும். இயற்றியவர் யார் என்பதை அறிய இயலவில்லை. இவை வேதத்தின் எந்தக் கிளையை—எண்ணப்போக்கைச் சேர்ந்தன என்பதையே 'கௌதம', 'போதாயந', 'ஆபஸ்தம்ப' எனும் அடைமொழிகள் தெரிவிக்கின்றன.

**காலம்**

இத்தரும சூத்திரங்களின் பல பகுதிகள், காலந்தோறும் இடைச்செருகலாகச் சேர்க்கப் பட்டுள்ளன. எனவே, இவற்றின் காலத்தை வரையறுத்துக் கூற இயலாது என்பர். எனினும், ஆராய்ச்சியாளர் சிலர், பலவகையான அகச்சான்றுகளையும் புறச்சான்றுகளையும் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றின் காலத்தைத் தனித்தனியாகவும், ஒட்டுமொத்தமாகவும் கணித்துள்ளனர். அவற்றுள் மாக்ஸ் முல்லரின் கருத்து, பெரும்பாலான அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதைக் காணுகிறோம். அவர் கி. மு. 600க்கும் கி. பி. 200க்கும் இடைப்பட்ட காலத்தில், இத்தரும சூத்திரங்கள் இயற்றப்பட்டிருக்கலாம் என்று துணிந்துள்ளார். இக்கருத்தினையே டாக்டர் பாண்டுரங்க வாமன் காணே பொருத்தமானதாகப் போற்றுகிறார்.[7] பொதுவாக, தரும சாத்திரங்களுக்கு இவை காலத்தால் முற்பட்டவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

**தரும சூத்திரங்களின் உள்ளுறை**

தரும சூத்திரங்கள் பல திறப்பட்ட பொருள்களைப் பற்றிப் பல இடங்களில் பேசுகின்றன. அவற்றை (1) ஆசாரம், (2) பிராயச்

5. K. S. Ramaswami Sastri; The Dharma Sutras and the Dharma Sastras, P. 4
6. S. C. Banerji, op. cit; ch. 4
7. P. V. Kane, History of Dharmasastras, Vol. I, Pt. I P. 14

சித்தம், (3) விவகாரம், (4) அரச தருமம் எனும் தலைப்புகளில் அடக்க முயலலாம்.

**ஆசாரம்**

சிறப்புமிகு சடங்குகளுக்குரிய பிறப்பு, பெயரிடுதல், பூணூல் அணிவித்தல், திருமணம், இறப்பு நிகழ்ச்சி போன்றவை பற்றியும், திதி, தூய்மை கடைப்பிடித்தல், நோன்பு நாள்களில் உண்ணத்தக்க பொருள்கள், உண்ணத்தகாத பொருள்கள் முதலியனவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.[8]

**பிராயச்சித்தம்**

இப்பகுதியில் 'கழுவாய் என்பது என்ன?', பாவங்களின் வகைகள், கழுவாய் முறைகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

**விவகாரம்**

பொதுவாக தரும சூத்திரங்கள் சமயத் தொடர்பான சட்டங்களைப் பற்றியே பேசும் என நாம் நினைக்கக்கூடும். ஆனால், இத்தரும சூத்திரங்கள் சமயச்சார்பற்ற வழக்குகளையும், அவற்றை ஆராய்ந்து தீர்ப்புக் கூறவேண்டிய நீதிநிர்வாக முறைகளையும் விரிவாகப் பேசுகின்றன. இதைக் கண்டு, மேற்கு நாட்டு அறிஞர்கள் வியப்பும் திகைப்பும் அடைந்துள்ளனர்[9]. அடகு வைத்தல், வட்டி, நால்வகைச் சாட்சி, சொத்துரிமை, உரிமை கொள்ளும் முறை, சீதனம், இளம்பிள்ளைகளின் சொத்துகள், புதையல் போன்றவற்றின் தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள், சட்டங்கள் போன்ற பல செய்திகள் தருமசூத்திரங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

**அரச தருமம்**

நாட்டு ஆட்சியை நல்ல முறையில நடத்துவதற்கு அரசன் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை (1) அரசனுடைய வருவாய், (2) அரசனுடைய கடமைகள், (3) அரசனது அரண்மனை, (4) ஆட்சித்துறைகள், (5) ஊராட்சி, (6) பகை நட்பாக்கும் திறன், (7) போர்முறை, (8) கைப்பற்றிய நாடுகளை முறைப்படுத்துதல் போன்றவற்றிற்குரிய விதிமுறைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளன.

---

8. S. C. Banerji, op. Cit; Ch. 4
9. Julius Jolly, Hindu Law and Custom, pp. 1-2

**தருமசூத்திரங்களின் அறக்கொள்கை**

இன்றைக்குக் கிடைத்துள்ள தருமசூத்திர நூல்கள் அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்து நோக்கினால், மூவாயிரம் பக்கங்களுக்கு மேற்பட்டனவாக அவை உள்ளமை புலனாகும். அவை உணர்த்தும் அறமோ, ஒரேவொரு வகையைச் சேர்ந்ததாக உள்ளதைக் காணுகின்றோம். அவை **ஆசாரத்தைப்—பழக்கவழக்கங்களைப்** பற்றியனவாக உள்ளன. அறவியல் (Ethics) சிந்தனையாளர், அவற்றை 'வழக்காற்று ஒழுக்கநெறி' (Customary Morality) எனும், அறவளர்ச்சியின் இரண்டாம் படிநிலை அறத்திலேயே அடக்கிவிடுவர். தரும சூத்திரங்கள் உணர்த்தும் அறக்கொள்கை, இடத்திற்கும் (ஆரியவர்த்தத்திற்குட்பட்ட), காலத்திற்கும், சூழ்நிலைக்கும் கட்டுப்பட்ட ஒன்றாகக் காட்சி அளிக்கிறது. குறிப்பிட்ட ஒரு சமூகத்து மக்களின் நல்வாழ்வையும், மேம்பாட்டையும் கருத்திற்கொண்டு, ஒழுகலாற்று விதிமுறைகளைத் தருமசூத்திரங்கள் வகுத்துரைக்கின்றன.

தருமசூத்திரங்கள் உணர்த்தும் அறக்கொள்கையை ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம். அவை **வருண தருமம், ஆசிரம தருமம், வர்ணாசிரம தருமம், நைமித்திக (பிராயசித்தம் போன்றவை) தருமம், குண தருமம்** (பெற்றோரின் கடமை, மகனுடைய கடமை தொழிலாளர் கடமை போன்றவை) என்பனவாகும். எல்லாருக்கும், பொதுவான அறங்கள் (சாதாரண தருமம்), மிக மிகக் குறைவான இடத்தையே - மதிப்பையே - தரும சூத்திரங்களில் பெற்றுள்ளதைப் பார்க்கின்றோம். எனவே, தரும சூத்திரங்கள் உணர்த்தும் தருமம் குறுகிய நோக்கு உடையது; யாவர்க்கும் யாண்டும் பயன்படத்தக்க அனைத்துலகப் பண்பு (Universal) உடையது அன்று என்னும் எண்ணமே எழுகிறது.

# தரும சாத்திரங்களின் சிறப்பு

வடமொழியில் தரும சாத்திரங்களை 'ஸ்மிருதி' எனும் பெயரால் சுட்டுவது மரபு. 'ஸ்மிருதி' எனும் சொல் மிக விரிந்த பொருளிலும், துல்லியமான சுருங்கிய பொருளிலும் வழங்கப்பட்டு வருகிறது. சுருதி (கேள்வி) எனப்படும் வேதங்கள் அல்லாத சமஸ்கிருத நூல்கள் அனைத்தையும் 'ஸ்மிருதி' எனும் சொல் சுட்டுவதாகக் கூறுவர். இவ்வாறு வழங்குவது மிக விரிந்த பொருளிலாகும். தரும சாத்திரங்களை மட்டும் **ஸ்மிருதி** எனச் சுட்டுவது நன்கு வரையறுக்கப்பட்ட சுருங்கிய பொருளிலாகும். மனு,

தர்ம சாஸ்த்ர துவை ஸ்மிருதி (மனு. 2: 10)

என்று அறிவிக்கின்றார். "அறத்துணிவுகளே ஸ்மிருதி என உணர்க!" என்பது இதன் பொருளாகும். பொதுவாக 'ஸ்மிருதி' எனும் சொல்லிற்கு 'நினைக்கப்படுவது' என்பது பொருளாகும். மூதாதையரின் முதுமொழிகளை நினைந்து போற்றச் செய்வதே—கடைப்பிடித்து வாழத் தூண்டுவதே—ஸ்மிருதிகளின் நோக்கமாகும்.

### சூத்திரங்களும் சாத்திரங்களும்

தரும சூத்திரங்களுக்கும் தரும சாத்திரங்களுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. அவற்றை தோற்றம், வடிவம், மொழிநடை, பொருள் அடைவு, காலப் பழைமை, வேதத் தொடர்பு என வகைப்படுத்தலாம்.

### தோற்றம்

தரும சூத்திரங்கள் முனிவர்களால் இயற்றப்பட்டனவாகும்; வேதகால முனிவர் ஒருவருடைய எண்ணப் போக்கின் வழி வந்தவை. அவற்றைக் கடவுளர் உலகிற்கு வழங்கியதாகக் கூறும் வழக்கம் இல்லை. ஆனால், தரும சாத்திரங்கள் முதன் முதல் பிரமன் முதலிய கடவுளர்களால் திருவாய் மலர்ந்தருளப்

பெற்றவை எனும் மரபு போற்றப்பட்டு வருகிறது. மனு, தரும சாத்திரத்தின் தொடக்க உரையில், ஆதிமனு, "அந்தப் பிரம்மாவே தமது விதி நியமங்களை எனக்கு முன்னர் உபதேசித்தார். பின்னர், நான், அதனை மரீசி முதலான பதின்மருக்கும் முறையே அறிவித்தேன்"[1] எனக் கூறுவதால், மனுதரும சாத்திரம் தெய்விகத் தோற்றம் உடையது என்பது புலனாகும். இதைப் போன்றே, பிற தரும சாத்திரங்களின் தோற்றமும் தெய்வங்களோடு தொடர்பு உடையனவாக உள்ளன.

### வடிவம்

பெரும்பாலான தரும சூத்திரங்கள் உரைநடையில் இயற்றப்பட்டுள்ளன; இடையிடையே ஓரிரு செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. கௌதம, வைகாநச தரும சூத்திரங்களில் செய்யுளே கிடையாது; முழுமையும் உரைநடையாகவே உள்ளன. ஆனால், தரும சாத்திரங்கள் அனைத்தும் செய்யுள்களால் இயற்றப்பட்டுள்ளன.

### மொழிநடை

தரும சூத்திர நடை கடுமையானது; பழைமையானது; வழக்கிறந்த சொற்களைக் கொண்டது. தரும சாத்திர நடை நெகிழ்வும் தெளிவும் வாய்ந்தது.

### பொருள் அடைவு

தரும சூத்திரங்கள் பொருள் அடைவுப்படி அமைக்கப்படவில்லை. ஒரே பொருள் பற்றிய கருத்து முன்னும் பின்னுமாக மாறி, மாறி வருவதைக் காணலாம். ஆனால், தரும சாததிரங்களின் பொருள் அடைவு முறைப்படுத்தபட்டும், வகைப்படுத்தப்பட்டும் உள்ளன. யக்ஞவல்கிய ஸ்மிருதி 'ஆசாரம், பிராயச்சித்தம், விவகாரம்' எனும் முப்பெரும் பிரிவுகளாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். இதற்கு விதிவிலக்காக மனுதரும சாத்திரம் அமைந்துள்ளது. இதற்குரிய முதற் காரணம் பல்வேறு இடைச் செருகல்களாகும். இரண்டாவது காரணம் மனுதரும சாத்திரம் இரண்டு மூன்று முறை மாற்றிப் புதுப்பிக்கப்பட்டு, புதிய சுலோகங்களும் இயல்களும் சேர்க்கப் பட்டமையாகும் என்பர். முதல் இயலாக உள்ள 'அண்டப்

---

1. மனு. 1:58., இங்குச் சுட்டப்படும் எண், புகலரின் (Buhler) 'The Laws of Manu' (Clarendon, Oxford, 1886) எனும் ஆங்கில மொழி பெயர்ப்பினை அடியொற்றியதாகும்.

படைப்பும் அதன் இயல்பும்' எனும் பகுதியும், வினைப்பயன் பற்றிய பன்னிரண்டாவது இயலும் பிற்காலத்தில் சேர்க்கப் பட்டவை[2] என்பர்.

**காலப் பழைமை**

தரும சூத்திரங்களில் பெரும்பாலானவை கல்பசூத்திரங் களின் பகுதிகளாக உள்ளன. அவை கிரகிய சூத்திரங்களோடு ஒத்த இயல்புடையனவாக உள்ளன. ஆனால், தரும சாத்திரங் களுக்கும் கல்ப சூத்திரங்களுக்கும் இடையே எத்தகைய ஒற்று மையும் காணப்பெறவில்லை. எனவே, தரும சூத்திரங்கள் காலத்தால் முற்பட்டவையாக உள்ளன. இதனால், அவை பழைமையானவை என்பது புலனாகின்றது.

**வேதத் தொடர்பு**

நாம் முன்னரே கண்டதைப்போல, தரும சூத்திரங்கள் வேதத்தோடு, வேதகால முனிவர் சிலரின் எண்ணப் போக்கு (Schools of thought) களோடு நெருங்கிய தொடர்புடையனவாக - அவற்றிலிருந்து வளர்ந்து சிறந்தனவாக - உள்ளன. ஆனால், தருமசாத்திரங்கள் பிற்காலச் சிந்தனை வளர்ச்சியைப் பிரதிபலிப் பனவாக உள்ளன.

இவற்றால், தரும சூத்திரங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதும், பிற்காலத் தரும சாத்திரங்களுக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றன என்பதும் தெளிவாகின்றன. அதே சமயத்தில், தரும சாத்திரங்கள் முற்காலப் பழக்க வழக்கங் களையும் பிற்கால வாழ்க்கைச் சிக்கல்களையும், புதிய சிந்தனை களையும் படம் பிடித்துக் காட்டுவதை நாம் காண முடிகிறது. ஆனால், பாண்டுரங்க வாமன காணே, சூத்திரங்களையும் ஸ்மிருதி களையும் ஒன்றாகச் சேர்த்து, 'தரும சாத்திரம்' எனக் கொண்டுள் ளார்.[3] அவருடைய நோக்கில் இவ்வேற்றுமைகள் புறக்கணிக்கத் தக்கனவாக உள்ளன.

**சிறப்புமிகு தருமசாத்திரங்கள்**

தரும சாத்திரங்கள் பன்னிரண்டிற்கு மேற்பட்டவை இது வரை கிடைத்துள்ளன. அவற்றுள் தொன்மைச் சிறப்பும்,

---

2. இதன் விளக்கத்தைப் பின்னர்க் காண்போம்.
3. காண்க: அவருடைய 'History of Dharma Sastras' எனும் ஐந்து தொகுதிகளில் இரண்டையும் ஒன்றாகவே கொண் டுள்ளார்.

கருத்துச் சிறப்பும், தெளிவான நடையும் வாய்ந்தவை ஐந்து தரும சாத்திரங்களாகும். அவை (1) மனுதரும சாத்திரமும், (2) கௌதம, (3) ஆபஸ்தம்ப, (4) போதாயந, (5) யக்ஞுவல்கிய தரும சாத்திரங்களுமாகும். இவற்றை அடுத்து, (6) பராசர, (7) நாரத, (8) பிரகஸ்பதிய, (9) காத்யாயன, (10) வாசிஷ்ட தரும சாத்திரங்கள் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. இவற்றில், அக்காலத்திய மக்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் சமுதாயச் சிந்தனைகளும், அரச நீதியும், முக்தி அடைவதற்குரிய வழிமுறைகளும் விரித்துரைக்கப் பட்டுள்ளன. பழக்க வழக்கங்கள் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறும்/வேறுபடும் இயல்புடையவை என்பதை இத்தரும சாத்திரங்கள் தெரிவிக்கின்றன. தரும சூத்திரங்களைப் போன்று நெகிழ்ச்சியற்ற விதிமுறைகளை இவற்றில் காண இயலவில்லை!

## தரும சாத்திரங்களின் காலம்

இன்றைக்கு வழக்கில் உள்ள மனுதரும சாத்திரம், மூல நூலான 'மானவ தரும சாத்திரத்தின்' திருத்தப்பெற்ற புது வடிவம் என்பர். இவ்வாறு திருத்தப்பெற்ற காலம் கி. மு. 200க்கும் கி. பி. 200க்கும் இடைப்பட்டதாகத் தெரிகிறது.[4] இக்காலத்தை ஒட்டியே கௌதம, யக்ஞுவல்கிய, ஆபஸ்தம்ப, போதாயந தரும சாத்திரங்கள் இயற்றப்பட்டனவாகக் கருதப்படுகின்றன. மற்ற தரும சாத்திரங்கள் யாவும் கி. பி. 400க்கும் கி. பி. 1000க்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டனவாக ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளனர்.[5]

## தரும சாத்திரங்கள் உணர்த்தும் செய்திகள்

மேற்கண்ட தருமசாத்திரங்கள் யாவும், பலதிறப்பட்ட பொருள்களைப் பற்றிய விதிமுறைகளை வகுத்து அளிக்கின்றன. பலவகையான புதிய செய்திகள், அவற்றில் இடம்பெற்றுள்ளன. பல்வேறு வர்ணங்கள், நால்வகை ஆசிரம நிலைகள், அவர்களுக்குரிய சலுகைகள், கடமைகள், பொறுப்புகள்; தனிமனிதன் பிறப்பு முதல் இறந்தோர்க்குச் செய்யும் நீர்க்கடன் முதலிய புனிதக் கடமைகள்; நால்வகை ஆசிரம நிலையினரின் அன்றாட வாழ்க்கை, கல்விநிலை, திருமணம், சமயச் சடங்குகள்; இல்வாழ்வோனின் இனிய கடமைகள்; உடல் தூய்மை, ஐவகை வேள்வி, தானம், பிறப்பு இறப்புகளில் உண்டாகும் தூய்மையற்ற

4. P. V. Kane, op. Cit., Vol. I, Pt. I: P. 242
5. Ibid. p. 304

தன்மை; மகளிர் அறம், கணவன் மனைவியர்க்குரிய அறங்கள்; அரசனுக்குரிய அறங்கள், சத்திரியனுக்குரிய ஒழுகலாறு, வழக்குகள், நீதி நிர்வாகம், குற்றமும் தண்டனையும், ஒப்பந்தங்கள், பாகப்பிரிவினை, சொத்துரிமை, மகண்மை ஏற்றல், சூதாடல்; நால்வகைச் சாதியினர், கலவைச் சாதியினர், அவர்கள் தொழில்கள்; ஆபத்தருமம், பாவச் செயல்களும் கழுவாயும், சாந்தி செய்யும் சடங்குகள், வானப்பிரஸ்தரின் கடமைகள், சந்நியாசிகள் வாழ்க்கை, தவம், நல்வினை, தீவினை போன்ற பல்வேறு பொருள்களைப் பற்றிய விதிமுறைகளும், அவற்றோடு தொடர்புடைய பல செய்திகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவை ஓரளவிற்கு முறைப்படுத்தப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்குகின்றபொழுது, அறம் என்பதை தருமசாத்திரக்காரர்கள் 'ஒரு வாழ்க்கை நெறியாகவே' கருதியமை புலனாகின்றது. அது மனித வாழ்க்கை முழுவதையும் தழுவியதாகத் தோன்றுகிறது. 'தருமம்' என்பதை அவர்கள் ஒரு கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதாமல், ஒரு வகை வாழ்க்கை முறையாக - நெறியாகப் போற்றியுள்ளனர்: மனித நடத்தையின் விதிமுறைத் தொகுப்பாகத் தருமம் போதிக்கப்பட்டது. அவை, ஒரு மனிதனின் செயல்களையும் வாழ்க்கையையும் தனிமனித நிலையிலும், சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்னும் நிலையிலும் நெறிப்படுத்தியும் முறைப்படுத்தியும் இயக்குவதாகக் கருதினர். படிப்படியாக மனிதனின் மனம் வளர்ச்சி அடைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து, மனித வாழ்க்கையின் முடிந்த பயனாகிய பிறப்பு அறுத்தலை - வீடுபேற்றை - அடைய உறுதுணையாக விளங்கும் வகையில், தருமத்தை அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இவை யாவற்றையும் நாம், தருமசூத்திரங்களின் நோக்கையும் போக்கையும் ஆய்ந்தபொழுது கண்ட வர்ண தருமம், ஆசிரம தருமம், வர்ணாசிரம தருமம், குண தருமம், (அரசனுடைய இயல்பு போன்ற) நைமித்திக (கழுவாய) தருமம் எனும் ஐவகை தருமத்தில் அடக்கிவிடலாம். அவற்றில் இடம்பெறாத அன்புடைமை, இன்சொல் கூறல், பொறையுடைமை, இன்னா செய்யாமை போன்ற ஒழுகலாறுகள், மனிதனை மனிதனுக்கும் இயல்புகள் - இத்தரும சாத்திரங்களில் ஓரிரு இடங்களில் சுட்டப்படுகின்றன. இவற்றை ஆறாவது வகையான 'சாதாரண தருமம்' என்பர்.

### மனுதரும சாத்திரத்தின் தனிச்சிறப்பு

இந்து சமய அறநூல்களில், சம்ஸ்கிருத மொழி தரும சாத்திரங்களுள் தலைசிறந்தது மனுதரும சாத்திரமாகும். இதை அற

நூலாக மட்டும் அல்லாமல், சட்ட நூலாகவும், சமூகவியல் நூலாகவும் போற்றுகின்றனர்.[6] 'மனுதரும சாத்திரமே முதன்மையானது; தொன்மையானது; வேதத்தின் ஒப்புதல்பெற்ற சிறப்புடையது' என்பர்.

**ஆசிரியர்**

'முதற்பெரும் தரும சாத்திரமான இம் மனுதரும சாத்திரத்தை இயற்றியவர் யார்?' என்பதைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் ஓயவில்லை: உண்மை இன்னும் புலப்படவில்லை! 'தருமம்' என்பதைப் போலவே, மனு என்னும் பெயரும் மிகவும் பழமையானது. இருக்கு வேதத்தில் நான்கு மனுக்கள் குறிப்பிடப்படுகின்றனர். பிரஜாபதியாகப் போற்றப்பட்டவர் ஒரு மனு. மனித குலத் தோற்றத்திற்குத் தலைவராக விளங்கியவர் மற்றொரு மனு. அவரை ஆதி மனு என்பர். அவர், உயிர்களை எல்லாம் கடல் கோளிலிருந்து காப்பாற்றினார் என்பர். அவருடைய வழி வந்தமையால், மக்கள் 'மனிதர்' எனச் சுட்டப்படுவதாகக் கூறுவர். பகவத்கீதை, நான்கு மனுக்களைக் குறிப்பிடுகிறது. இந்த அறநூலோ, மனுக்கள் எழுவர் என்றும், நாம் ஏழாவது மனுவின் காலத்தில் வாழ்வதாகவும் தெரிவிக்கிறது. மனித இனத்தின் பழக்க வழக்கங்களையும், சமுதாய அமைப்பையும் அமைத்துத் தந்தவர் ஒரு மனு. அவர் வழிவந்த வேறொரு மனுவே, இத்தரும சாத்திரத்தை இயற்றியதாகத் தெரிகிறது. அவரே, 'மனித இனத்தின் பிதாமகன்' எனப் போற்றப்படுகின்றார். இவற்றால், மனு என்பவர் தொன்மைச் சிறப்பும் தெய்வத் தன்மையும் வாய்ந்தவர் என்பது அறியப்படுகிறது.

மனுவைப் பற்றிப் பன்னெடுங்காலமாக வழங்கி வரும் கதைகளை எல்லாம் மானிடவியல் ஆய்வுக் கண்கொண்டு நோக்கினால், 'மனு' என்பவர் ஒரு தனி மனிதர் அல்லர் என்பதும், அறநெறிகளை வகுத்துரைப்போர்க்கு - தரும சாத்திரத்தை வழங்குவோர்க்கு உரிய பதவி அல்லது பட்டத்திற்குரிய பெயரே, மனு என்பதும் புலனாகும். இதைக் குலப் பெயராகக் கூறுவாரும் உளர்.

**இன்றைய வடிவம்**

பழைய தரும சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டோ, பழைய தருமசாத்திரத்தின் திருத்தப்பெற்ற புது வடிவமாகவோ இன்றைய மனு தரும சாத்திரம் காணப்படுகிறது என்பர் மாக்ஸ்

6. K. Motwani, Manu Dharma Sastra, A Sociological and Historical Study, p. xi

மூல்லர்[7] ஜி. புகலரும் எவ்வாறு இந்நூல் இன்றைய வடிவத்தைப் பெற்றது என்பதைத் தெளிவுறுத்தியுள்ளார். சரணங்களில் உள்ள சட்ட இலக்கிய மாணவர்கள் இந்தப் பணியைச் செய்தது இருக்கவேண்டும். மாணவ சூத்திர சரணம் மைத்திராயாந (Maitrayana) எண்ணப் போக்கினரால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் யசுர் வேதத்தின் இருள் பகுதியைத் திருத்தி, புது வடிவம் கொடுத்தவராவர்".[8] மனுதரும சாத்திரத்தில் பிற தரும சாத்திரங்களைப் பற்றிய குறிப்பு வருகிறது (3:232). வசிஷ்டர், அத்திரி, கோதம, சௌநகர் ஆகிய முனிவர்களின் அறநூல்கள் மனுவில் சுட்டப்படுகின்றன (3: 16).

இன்றைய வடிவத்தில் நமக்குக் கிடைத்துள்ள மனு ஸ்மிருதியில் 2665 செய்யுள்கள், பன்னிரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. முனிவர்கள், மனுவை அணுகி "ஞான நிறைவும், வல்லமையும், செல்வமும், வீறும், திறனும், ஒளியும் பெற்றுத் திகழும் பெருமானே! நால்வருணத்தாரும் மற்றோரும் கடைப் பிடிக்கத்தக்க தருமத்தை எங்களுக்கு உணர்த்துவீராக! (1:2)" என்று வேண்டுகின்றனர். மனு அவ்வாறு அருள் புரிவதாக உடன்பட்டு, இப்பேரண்டத்தின் தோற்றத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறார். ஆனால், இடையிலே விட்டுச் சென்று விடுகிறார். எஞ்சிய பகுதியைத், தம் மாணவரான பிருகு முனிவரைச் சொல்லுமாறு பணித்துச் செல்லுகிறார். பிருகு, நூல் முழுவதையும் உபதேசிக்கிறார். இவ்வாறு, இப்பொழுதுள்ள மனு தரும சாத்திரம், பிருகு முனிவரால், மானவ சாத்திரத்தைத் திருத்திய பதிப்பாகச் செய்யப்பட்டதாகும்.[9]

'மானவ' குழுவைச் சேர்ந்த பிருகு முனிவரின் மகனான சுமதி என்பவரே மனுதரும சாத்திரத்திற்கு இன்றைய இறுதி வடிவத்தைக் கொடுத்தவர் என்று நாரத ஸ்மிருதி கூறுகிறது.[10] இந்த வடிவத்தை மனுதரும சாத்திரம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் அடைந்தது என்றும், கி. பி. ஆறும் நூற்றுண்டிற்குப் பிறகு எத்தகைய மாற்றமும் இல்லாமல் இருந்து வருகிறது என்றும் கூறுவர்.[11]

---

7. G. Buhler, Op. Cit., p. xviii
8. ஷை Intro. XIX
9. ஷை 12; 126; 5: 3
10, Jolly (Tr.): Institutes of Narada, P. 4.
11. P. V. Kane, OP. Cit. Vol. I; Pt. I, PP. 330-332.

**இடைச்செருகல்**

மனு ஸ்மிருதியில் இருவேறு காலக்கட்டத்திற்குரிய செய்திகள் உள்ளன. அதாவது முரண்பட்ட கருத்துகள் விதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. 'ஒரு பிராமணன் சூத்திரப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ளலாம்' என்பது ஒரு விதி (3: 12–13). ஆனால், 'சூத்திரப் பெண் பிராமணன் மனைவியாக ஆகவே முடியாது' என்பது மற்றொரு விதி (3: 14-19). ஜி. புகலர் இதைப் போன்ற முரண்பாடுகள் பலவற்றைச் சுட்டி, மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.[12] அவருடைய ஆய்வின் முடிவாகச் சில உண்மைகள் புலனாகின்றன. மனுதரும சாத்திரத்தின் முதல் இயலான 'அண்டப்பகுதியின் தோற்றமும்', முடிவு இயலான 'வினைப்பயனும் மெய்யுணர்தலும்' பிற்காலச் சேர்க்கைகளாகும். இரண்டாம் இயலில் இடம்பெறும் தத்துவ ஆராய்ச்சி (89–100), மூன்றாவது இயலில் உள்ள பிதுர்க்களின் வகைப்பாடு (193-201), நான்காம், ஐந்தாம் இயல்களில் கூறப்படும் வயிற்றுப் பிழைப்பிற்காகப் பிராமணர் செய்யக்கூடிய தொழில்கள் (4: 1-24, 5: 1-4), பத்தாம் இயலில் காணப்படும் கலவைச் சாதியினரின் கடமைகள் (10: 101-7), நால்வகைச் சாதியினரின் கடமைகளாக மீண்டும் திரும்பக் கூறப்படுபவை (10: 101-131) ஆகிய அனைத்தும், இடைச்செருகல்களாக இருக்கவேண்டும் என்று ஜி. புகலர் கருதுகிறார்.

இதனை முழுமையாக ஒப்புக்கொள்ள மனம் வாராத இந்திய அறிஞர்களும், "பழைய நூலில் காலத்தின் தேவைக்கு ஏற்ற கருத்துகளைப் புகுத்தியுள்ளனர். மக்களுடைய மனப் போக்கில் புலால் உண்ணுவதை வெறுக்கும் நிலையும், கணவனை இழந்த பெண் மகப்பேற்றுக்காகக் கணவனுடைய சகோதரரையோ, நெருங்கிய உறவினரையோ கூடி, பிள்ளை பெறலாம் எனும் விதியை (நியோகம்) அருவருக்கும் நிலையும், விதவை மறுமணம் வெறுக்கப்படும் நிலையும் உண்டானமையால், அக்கால அறிஞர்கள் புதியதாகச் சில விதிகளைச் சேர்த்துள்ளனர். ஆனால், இப்புதிய சேர்க்கைகள் யாவும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்[13] என்று அமைதி கூறுவது காணலாம்.

**தோன்றிய இடம்**

மனுதரும சாத்திரத்தில் விந்தியமலைக்கு வடக்கே வாழ்ந்த மக்களைப் பற்றிய குறிப்புகளே காணப்படுகின்றன. பாஞ்சால

---

12. G. Buhler, OP. Cit; PP. LXVI—LXXIII.
13. P. V. Kane, OP. Cit; P. 332.

நாட்டு மக்களுக்காகவே இத்தரும சாத்திரம் முதன்முதல் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. பின்னர் ஆரியவர்த்தம் முழுவதும் வாழ்ந்தோரால் பின்பற்றப்பட்டதாக அறிகிறோம். ஆரியர்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற இடம் 'திராவிட மக்கள் வாழும் நாடு' எனவும், உண்மையான பிராமணன் யாரும் அங்கு வாழமாட்டான் எனவும் மனுதரும சாத்திரம் தெரிவிக்கிறது.[14]

**புகழ்மாலை**

'மனுவின் கருத்து மனித இனத்திற்கு மருந்து' என்று மனு தரும சாத்திரத்தைப் போற்றுவர். "மனுவின் கருத்திற்கு முரண்பட்ட எந்த ஸ்மிருதியையும் ஏற்றுக்கொள்ள இயலாது. மனு சொன்னவை எல்லாம் மனித இனத்தின் நோய்களைப் போக்கும் நன்மருந்தாகும்" என்பது தைத்திரேய சம்மிதையின் துணிவாகும் (II: 2: 10 - 2).

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர்ஜெனரலாக இருந்தபொழுது, சர். வில்லியம் ஜோன்ஸ் எனும் அதிகாரி—கீழ்க்கலை ஆர்வலர்—கி. பி. 1776இல மனுதரும சாத்திரத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பை வெளியிட்டார். 'இந்து சட்டத்தைப் பற்றிய மிகப் பழமையான நூல்' என்று அவர், இதனைப் பாராட்டியுள்ளார். பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனியார் அதிகார பூர்வமாகப் பயன்படுத்துவதற்கு இதை, ஆங்கிலத்தில் தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற நூற்றாண்டில் நீட்சே எனும் ஜெர்மானிய நாட்டு அறிஞர்,

"விவிலியத்தை மூடுங்கள்!
மனுவின் நூலைத் திறந்து படியுங்கள்!"

என்று அறிவுறுத்தியதோடு அமையாது, உலகில் 'தன்னம்பிக்கை ஊட்டும் தனிப்பெரும் நூல் மனுதருமம்' என்று மொழிந்துள்ளார்.[15]

பன்னிரண்டிற்குக் குறையாதப் பழைய உரைகள், இந் நூலிற்கு வரையப்பட்டுள்ளன. பதினைந்திற்கு மேற்பட்ட உலக மொழிகளில் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

14. V. S. Agarwala, India as Described by Manu PP. 5-6.
15. Nietzsche, The will to Power, Vol. I; P. 126

"மகாபாரதத்தையும் புராணங்களையும் போன்று மனுவின் அற நூல், மக்களிடையே பெருவழக்குடையதாக விளங்குகிறது. மூல ஊற்றுகிய வேத, உப நிடதங்களை அடைய முடியாத (படிக்க இயலாத) மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. சமயத்திற்கும் சட்டத்திற்கும் இடையே உள்ள நெருக்கமானத் தொடர்பினை இந்நூல் காட்டுகிறது. இதனுடைய முதன்மை நோக்கம் மெய்ப்பொருளை உணர்த்துவது அன்று"[16] என்பர் டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன்.

### மனுவின் அறக்கொள்கை

#### தருமம்—விளக்கம்

தருமம் எனும் சொல், சம்ஸ்கிருத மொழியில் விரிந்த பொருளுடையதாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், மனு தரும சாத்திரத்தில், ஒரு மனிதனுக்குரிய தனியுரிமைகள், கடமைகள், கட்டுப்பாடுகள் ஆரிய சமூகத்தின் உறுப்பினன் எனும் முறையிலும், குறிப்பிட்ட ஒரு சாதியைச் சேர்ந்தவன் எனும் முறையிலும், வாழ்க்கையின் குறிப்பிட்ட ஓர் ஆசிரம நிலையின் உறுப்பினன் எனும் முறையிலும், அவனுடைய ஒழுகலாற்றிற்கு உரிய மேல்வரிச் சட்டங்கள் ஆகியவற்றின் தொகுதியாகத் தருமம் போற்றப்படுகிறது.

கடவுள் இவ்வுலகைப் படைத்தார்; உயிர் இனங்களைப் படைத்தார்; பல்வேறு சாதியினருக்கு உரிய கடமைகளையும் தொழில்களையும் அவரே வரையறுத்தார்; தாம் படைத்த உயிர்களின் பாதுகாப்பிற்காகவே இறைவன் இவற்றை எல்லாம் செய்தார்.[17] தாம் வகுத்துக் கூறும் கடமைகளும், கட்டுப்பாடுகளும் தெய்விகத் தன்மையுடையன எனவும், வினையின் பல்வேறு இயல்புகளையும் நன்குணர்வது தலையான கடமை எனவும் மனு குறிப்பிடுகிருர்.[18] மனிதன் ஒரு சமூக விலங்கு. எனவே, தனித்திருந்து அவன் வாழ்க்கையை நடத்தவோ, அனுபவிக்கவோ, புரிந்து கொள்ளவோ இயலாது. அவனுடைய இருப்புக்கு ஏற்ற நிலையிலும், அவனுடைய சமுதாயச் சூழலுக்குப் பொருந்திய வகையிலும் அவன் வாழ்ந்தாகவேண்டும். தாம் விரித்துரைக்கும் பொருள்களுள், நிலைபேறுடைய நாடு, சாதி, குடும்பம், பிராமணர், வணிகர் பற்றிய நெறிமுறைகள் சிறப்பிடம்

---

16. S. Radhakrishnan, Indian Philosophy, Vol. I; P. 516.
17. மனு. 1: 87
18. ஷை, 1: 102
19. ஷை, 1: 118

பெற்றுள்ளதாக மனு தெரிவித்துள்ளார்.[19] ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவனுடைய தேவைகளுக்கும், அவன் உறுப்பினனாக உள்ள சமுதாயத்தின் தேவைகளுக்கும் ஏற்ப ஒழுங்குபடுத்தப் படவேண்டும் எனும் எண்ணப்போக்குடையவராக மனு இருந்தா லும், தனிமனித வாழ்க்கைக்கு அவர் முக்கியத்துவம் தரத் தவற வில்லை.

இந்த தருமசாத்திரம், நல்ல- தீய செயல்கள், நால்வகை வருணத்தாரின் ஒழுகலாறு, பொதுவாக மனிதனுடைய இலட்சிய ஒழுகலாறு முதலிய அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்தே அற நெறி விதிகளை வகுத்துச் செல்கிறது.[20] சுருங்கச் சொல்லுவ தானால், மனு, 'தருமம்' எனும் சொல்லைப் பெரிதும் கடமை என்ற பொருளிலேயே கையாண்டுள்ளார்; ஒருசில இடங்களிலேயே 'அறம்' (Righteousness) எனும் பொருளில் அதனை, அவர் பயன் படுத்தியுள்ளார். மனிதன் உண்பதற்காக மட்டும் வாழவில்லை. பல்வேறு கடமைகளைச் செம்மையாகச் செய்து, அதன் மூலம் அறவாழ்வை—ஆன்மிகப் பேற்றை அவன் அடைவதே வாழ்க்கை யின் குறிக்கோளாகச் சுட்டப்படுகிறது. முதல் அதிகாரத்தில் உணர்த்தப்படும் அறக்கொள்கைத் தனிமனிதன் எனும் முறை யில் வருணத்தோடும் ஆசிரமத்தோடும் கொண்டுள்ள தொடர் புக்கும் ஏற்ற நிலையில் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தைப் பற்றிய தாகும்.[1] அவ்வொழுக்கத்தின் மூலம் சமுதாயத்திற்கும் நாட்டிற் கும் ஆற்றவேண்டிய கடமைகளைத் தெளிவுறுத்துகிறார். விருப்பு வெறுப்பு இல்லாமல், கல்விநலமும் சான்றாண்மையும் வாய்ந்த பெரியோர்கள் கடைப்பிடித்து ஒழுகுவதே இலட்சிய தருமமாகும் என்பது மனுவின் கருத்தாகும்.[21] இந்த அறம், மனிதனுடைய மனச்சான்றினால் மதித்துப் போற்றப்படும் தகுதியைப் பெறும் பொழுதே, அது உண்மையானதும் குறிக்கோளியல்பு வாய்ந்தது மான பண்பைப் பெறுகிறது.[23] உலகியல் அனுபவத்திலிருந்து சான்றோர்களாகவும், கற்றோர்களாகவும், பண்பாளர்களாகவும் உள்ள மனிதர்கள், பெரிதும் தங்கள் கடமைகளைப் பற்றியே கவலைப்படுவர்; உரிமைகளில் அதிக அக்கறை காட்டமாட்டார்கள் என்பதை உணரலாம். கற்றறிந்த அறிவாளன், ஸ்மிருதி நூல் களில் கூறப்பட்ட எதையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும், வேதத்தின் மேலாதிக்க உரிமை உள்ளதா என்பதை அறிய

20. மனு. I: 108
21. ஷை, 1: 111-118
22. ஷை, 2: 1
23. ஷை, 2: 2, 1-3

வேண்டும், எப்பொழுதும் அதிகமாக உரிமைகளைப் பற்றி கவலைப் படாமல், தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்வதில் கருத்தாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தும் பகுதியில் மனு, கடமைக்கே பெரிதும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.[24] உரிமைகள் சில மனிதனுக்கு உண்டு என்பதை அவர் மறுக்கவில்லை. அவற்றை, நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால், அவர் பெரிதும் வலியுறுத்திக் கூறுவது கடமையே யாகும். 'தருமம் என்றாலே அது கடமையைச் செய்வதே ஆகும்' எனும் எண்ணம் மனுதரும சாத்திரத்தில் மேலோங்கி நிற்கிறது. இதனை, 'ஆசாரமே அடிப்படை தருமம்; அதனை இருபிறப்பாளர், என்றும் மறவாது கடைப் பிடிக்கவேண்டும்' என்று அவர் உரத்த குரலில் முழங்குவதால் தெளியலாம்.[25] தருமம் என்பதற்கு 'ஆசாரம்' என்பது பொருள்; ஆசாரம் என்பதற்குக் கடமை என்பதைத் தலையாயப் பொருளாக அவர் கொள்ளுகிறார். அழிவில்லாத ஆசாரங்கள் யாவை என்பதைத், தம் நூலில் மனு விரித்துரைத்துள்ளார்.

> இதில் (மனுதரும சாத்திரத்தில்) எல்லாத் தருமங்களும், ஆசாரங்களின் இயல்புகளும், நான்கு வருணத்திற்கும் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிற ஆசாரங்களும் கூறப் பட்டுள்ளன.[26]

என்பதனால் இதனை அறிகிறோம். அறமும் தவமும் ஆசாரத்தில் ஆழ வேரூன்றியுள்ளன.[27] அவை மனிதனுடைய கடமைகளைப் போன்ற இயல்புடையன என்கிறார்.

### பிராமணரின் சிறப்பு

மனிதரிடையே பிராமண சாதியே உயர்ந்ததும் சிறந்ததுமாகும் என்று அவர் அறிவிக்கிறார். பிராமணர் முதலில் தோன்றியவர்; உயர்ந்தவர்; அவர்களே பிரமத்தைப்[28] போற்றுபவராவர். தெய்விக ஆணையின்படி, மண்ணுலகில் உள்ள அனைத்திற்கும் பிராமணரே தலைவராவர்.[29] மற்றச் சாதியினர் எல்லாம், பிராமணருடைய சலுகையாலும், தாராள மனப்பான்மையாலும்,

24. மனு, 2: 8
25. ஷை 1:108
26. ஷை 1: 107
27. ஷை 1: 107—109
28. ஷை 1: 93
29. ஷை 1: 93

கருணை உள்ளத்தாலுமே உலகில் உள்ளவற்றை அனுபவித்து வருகின்றனர்.[30] இங்கு, நாம் மனுவைத் தவருகப் புரிந்து கொள்ளக் கூடாது. உலகச் செல்வங்கள், சொத்துகள், இன்பங்கள் அனைத்திற்கும் பிராமணனே உரிமையாளன்;[31] பிறப்பு முதலே இவ்வுலகை ஆளப்பிறந்தவன் பிராமணன் என்பது தெய்வ நியதி.[32] ஆனல், அவை யாவும் பிராமணனுவடைய தனியுடைமை அல்ல; அவன் மட்டும் அனுபவிப்பதற்கு அல்ல! ஆனல், அவன் படைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்தையும் காப்பதற்காகவும்,[33] மண்ணுலகில் தருமம் எனும் புதையலைப் போற்றிக் காப்பதற்காகவும்,[34] சாத்திரங்களைக் கற்பதோடு, பிறருக்கு அவற்றைப் போதிப்பதற்காகவும்[35] அவற்றை எல்லாம் அவன் அனுபவித்துக் கொள்ளலாம் என்பது மனுவின் துணிவாகும். பிராமணர்களில் மிகச் சிறந்தோராக உள்ளவர் பிரமத்தைக் கண்டவராவர்.[36] எண்ணற்ற கடமைகளும் பொறுப்புகளும் பிராமணன்மீது சுமத்தப்பட்டிருப்பதால், அவன் ஒருவனே உலகப் பொருள்களை எல்லாம், இன்பங்களை எல்லாம் அனுபவிப்பதற்கு முழு உரிமையுடையவனுவான் என்பர். இங்கும் மனு, தருமம் என்பது கடமைகளே' எனும் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

## தருமத்தின் செயல்நிலை

செயல்பட்டால்தான் கடமைகளைச் செய்ய இயலும். உலகம், அதனுடைய போக்கிலே முன்னேற்றம் அடையவேண்டுமானல், மனித வாழ்க்கைச் செயல்கள் நிறைந்ததாக இருக்கவேண்டும். செயல்புரிதல் என்ருல், அங்கே முதலாவதாக அவா தோன்றும். அவா எனும் சிறப்புமிகு மன உணர்வே, மனிதனைச் செயல்படுமாறு தூண்டுகிறது. அவா இல்லையானல், உலகில் எந்தச் செயல்களும் நடைபெற இயலாது.[37] வேள்விகள்கூட அவாவின் உந்துதலாலேயே செய்யப்படுகின்றன.[38] உலகில் அவா மட்டும் இல்லாமல் எச்செயலும் நடைபெறு. 'காமம்' என்பது தீயது அன்று என்பதை மனு சிறப்பாகத் தெரிவித்துள்ளார். ஆனல்,

---

30. மனு 1: 101
31. ஷை 1: 100
32. ஷை 1: 99
33. ஷை 1: 94
34. ஷை 1: 98
35. ஷை 1: 103
36. ஷை 1: 97
37. ஷை 2: 4
38. ஷை 2: 3

மனிதன் இழிந்த உணர்வுடன் அதோடு தொடர்பு கொள்ளுகிற பொழுதுதான், அது தீயதாக மாறுகிறது என்பது அவருடைய கருத்து. மனிதன், எப்பொழுது தன்னுடைய செயல்களின் நன்மை தீமைகளை ஆராயாது, குருட்டுப்போக்கில் தனக்கே எல்லாப் பயனும் வந்து சேரவேண்டும் என நினைக்கின்றானோ,[39] ஆன்மாவின் வளர்ச்சிக்கோ அறத்தின் வளர்ச்சிக்கோ அது தேவையற்றது எனக் கருதுகின்றானோ,[40] இந்த வாழ்க்கையின் உண்மையான வெற்றிக்கோ, அடுத்துவரும் வாழ்க்கையின் இன்பத்திற்கோ அது தேவையற்றது என எண்ணுகின்றானோ[41] அப்பொழுதே, அது தீயதாகி விடுகிறது. காமத்திடத்து கண்மூடித்தனமாகக் கொள்ளும் பற்று ஆசாரமாகாது. எனவே, அறத்திடத்து அது நம்மைக் கொண்டுபோய் சேர்க்காது. உண்மையாகக் கடமைகளைச் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்தால் இயக்கப்படாத, சிந்தனையற்ற, தன்னலமிக்க ஆசைகளையும் அவாக்களையும் அறவே ஒழிக்க வேண்டுமென மனு அறிவுறுத்துகிறார். மனிதனுடைய ஆசைகளுக்கு அளவு இல்லை! ஆசைகளால் அறிவை இழந்தவன், எளிதில் அவற்றிற்கு, அவன் அடிமையாகிவிடுகிறான். இதனால், அவன் பாவத்தைப் பெருக்கிக்கொண்டு போகிறான் என்பதைக் கருத்தில்கொண்டே, இவ்வாறு மனு அறிவுறுத்துகிறார். எனவே தான், சரியான செயல்களையும் நல்ல விருப்பங்களிலிருந்து தோன்றும் நல்ல செயல்களையுமே செய்யவேண்டுமென அவர் வற்புறுத்துகிறார்.

இதுவரை, மனிதனிடமிருந்து தன்னல உணர்வையும், பற்றையும், அறியாமையையும் தருமம் (தருமவுணர்வு) விரட்டுவதை விரித்துரைத்தார். பின்னர், சாமானிய மனிதனுக்கு உதவக்கூடிய அறத்தைப் போதிக்கின்றார். அறிவுக்குகந்த, எல்லைக்குட்பட்ட நிலையில், சாமானிய மனிதன் அவாவின் வழிப்பட்டு செயல்களைச் செய்யலாம் என்று மனு விதிவிலக்கு தருகிறார், வாழ்க்கையைக் குறிக்கோளியல்பு உடையதாக ஆக்கவும், அவனுடைய ஆளுமை எல்லாவகையிலும் வளர்ச்சி அடையவும், இவ்வுலகில் இன்பத்தையும், அடுத்துப் பேரின்பத்தையும் அடைவதற்கும் மனிதன் ஒழுக்கத்தோடு வாழவேண்டும். வெறும் இவ்வுலகத்து வெற்றிக்காக மட்டும் - இன்பத்துக்காக மட்டும் ஒழுக்கத்தோடு வாழ்வது சிறந்ததன்று என்பது அவருடைய கருத்தாகும்.[42] மேற்கண்ட இன்பத்தைவிட உயர்ந்தது மனநலம். அது அறத்தினல்

39. மனு 2: 2
40. ஷை 2: 2
41. ஷை 2: 9
42. ஷை 2: 9

வருவதேயாகும். அறநெறியைக் கடைப்பிடிப்பதால், உடனடியாகப் பயன் உண்டாகாமல் போனாலும், அதருமநெறியில் வாழ்வதால் நம் கண்களுக்கு முன்னாலேயே இன்பம் வந்து அடையுமானாலும், ஒருவன் அறத்தைக் கைவிட்டு அதருமத்தை மேற்கொள்ள வேண்டா என அவர் வேண்டுகின்றார்.[43] என்றாகிலும் ஒரு நாள், இந்த வாழ்க்கையிலேயே, தருமமும் அதருமமும் பயன் கொடுத்தே தீரும்; அம்மனிதனுக்கு இப்பிறவியில் பயன் தரவில்லையானால், அவனுடைய கால்வழியினருக்கு உறுதியாகப் பயன்தரும்.[44] இவ்வகையில் நடைமுறைக்குகந்த முறையில், நடப்பியல் தன்மையோடு, தம் கருத்துகளை மனு தெரிவித்துள்ளார். நல்வினை, தீவினை ஆகியவற்றின் பயன் இப்பிறவியிலேயே வந்தடையும் என்பதில் அவர் அசைக்கமுடியாத நம்பிக்கைக் கொண்டுள்ளார்.

### சிறப்புமிகு அற இயல்புகள்

அறத்தின் தலைசிறந்த இயல்பு தானம் (ஈகை). தானத்தின் மூலம் மனித உள்ளம் பிறருடைய துன்பத்தை உணர, அதற்காகக் கசிந்துருக, அத்துன்பத்தைத் துடைக்க முயலுகிறது.[45] இவற்றின் மூலம் அது விரிவடைகிறது. கடை மூவகைச் சாதியினருக்குரிய கடமைகளுள், தானம் சிறப்பிடம் பெறுகிறது.[46] ஆனால், மன நிறைவுக்காகவும், அன்பின் அடிப்படையிலுமே தானம் செய்யவேண்டும்; வெறும் வெளிப்பகட்டிற்காகச் செய்யக் கூடாது என்கிறார்.[47] ஓரிடத்தில் நீரையே தானமாகக் கொடுப்பதானாலும், கொடுப்பவனுடைய வசதியைக் கருத்தில்கொண்டு கொடுக்கவேண்டும்[48] என்று சொல்லுகின்ற மனு, மற்றோர் இடத்தில் தகுதியுடையவருக்கே தானம் வழங்கவேண்டுமெனவும் அறிவுறுத்துகிறார்.[49] பெறுகின்றவனுக்கும், கொடுப்பவனுக்கும் மனநிறைவு அளிக்குமானால், தானம் இருவகைப் பயனை விளைவிக்கிறது.[50] தானம் கொடுக்கும் பொருளின் அளவு முக்கியமன்று; கொடுப்பதற்குத் தூண்டும் உள்ள உணர்வே சிறப்புடைய

---

43. ஷை 4: 171 - 2
44. ஷை 4: 173 - 4
45. ஷை 4: 88 - 90
46. ஷை 4: 227 - 8
47. மனு. 4: 227
48. ஷை 4: 229, 237
49. ஷை 4: 227
50. ஷை 4: 237

தாகும்[51] என்று மனு தெரிவிக்கிருர். மீண்டும், 'தருமம் என்பது கடமையே' எனும் மனுவின் கொள்கை, 'தானம் கடமையுணர் வோடும் தியாக உணர்வோடும் செய்யப்பட வேண்டும்'[52] எனும் விதியில் வெளிப்படுவதைக் காணலாம்.

'தானங்களுள் சிறந்தது பிராமணனுக்குக் கொடுக்கப்படும் தானமே' என்பது மனுவின் கருத்தாகும்.[53] ஏனெனில், அவன் பிரமத்தைத் அறிந்தவனுவான்.[54] தருமத்தை நிலைநாட்டுவதற்கே பிராமணன் பிறந்திருக்கிருன், எனவே, அவனுக்குக் கொடுக்கும் தானமே தலைசிறந்தது.[55] அவனே, பிரமஞானத்தைப் பெற்று மோட்சத்தை அடையப் போகிருன் என்கிருர்[56] பிரமஞானத் தைப் பெறுவதே கல்வி பயிலுவதன் குறிக்கோள் என்றும் அவர் கூறுகிருர். இவை யாவற்றையும் ஒருங்கு இணைத்து நோக்கு கின்றபொழுது, ஆன்மாவைச் செம்மைப்படுத்தி, கடைத்தேறச் செய்வதே - பிரமஞானத்தைப் பெறச் செய்வதன் மூலம் கடைத் தேறச் செய்வதே-தருமத்தின் முதன்மையான நோக்கம் என்பது புலனுகின்றது.[57] இதனுல், 'வாழ்க்கையின் செயல்முறைகள் மூலம் ஆன்மாவைக் கடைத்தேறச் செய்வது' தருமம் எனும் பொருள் வலிவும் பொலிவும் பெறுகிறது.

### அறத்தின் இருவகைப் பயன்

அறத்தினைக் கடைப்பிடிப்பதால், இப்பிறவியில் புகழும், அடுத்த நிலையில் பேரின்பப் பெருவாழ்வாகிய வீடுபேறும் கிடைக் கும் என்று மனு அறிவிக்கின்ருர்.[58] பெரும்பாலான இந்தியத் தத்துவ ஞானிகளைப் போன்றே மனுவும், கடவுள் நம்பிக்கை யுடையவராவார். எனவே, அவர் வினைப்பயன், நரகம், மறுபிறவி ஆகியவற்றில் நம்பிக்கைக் கொண்டுள்ளார். இவற்றிலிருந்து விடுதலைபெற மனிதன் தன் ஆற்றல் எல்லாவற்றையும் ஒருமுகப் படுத்தி, எப்பொழுதும் அறத்தை நிலைநாட்ட வேண்டும் எனத் தெரிவிக்கின்ருர். அறத்தைக் கடைப்பிடித்து வாழுமாறு மனிதனை அவர் வேண்டுகின்ருர். அறநெறியில் ஒழுகுகின்றபொழுது பிற

51. ஷை 4: 234
52. ஷை 4: 233—234
53. ஷை 4: 233
54. ஷை 1: 97
55. ஷை 1: 103
56. ஷை 1: 98
57. ஷை 2: 9
58. ஷை 4: 238

உயிர்களுக்குத் தீமை உண்டாகாமல் வாழவேண்டும் என்கிறார்.[59] இங்கும் தருமம் என்பது கடமையையும் நல்வினையையும் சுட்டுகிறது. நல்வினையும் கடமையில் அடங்கிவிடும். "மனிதன் உலகில், உதவியில்லாத நிலையில் பிறந்திருக்கிறான். அவனுக்கு உதவியாகக் கூடியது அறம் ஒன்றே. எனவே, அவன் ஒல்லும் வகையெல்லாம் ஓயாது அறம் செய்தல்வேண்டும்" என மனு தெரிவிக்கிறார்.[60] பெற்றோர், மனைவி, மக்கள் அடுத்த பிறவிக்கு உதவக் கூடிய உண்மையான உறவினர் அல்லர்.[61] அறமே விழுத்துணையாவது. காரிருள் சூழ்ந்த நரகத்தை மனிதன் கடப்பதற்கு அறமே உறுதுணையாவது.[62] என்று அறத்தின் ஆற்றலையும். அதைக் கடைப் பிடிப்பார் அடையக்கூடிய சிறப்பையும், பயனையும் பலநிலைகளில், பல்வேறு வகையாக எடுத்துரைக்கின்றார். இவ்வாய்வுரையின் மூலம், விதிமுறைகள், கடமைகள், நல்வினைகள், ஆசாரம், ஒழுக்கம், ஆன்மாவினை உயர்த்துவதற்குரிய முயற்சி எனும் அறுவகைப் பொருள்களின் வாயிலாகத் தருமம் பற்றிய கோட்பாடு மனுவினால் உருவாக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது. எனினும், ஒழுக்கநெறி விதிகளாகிய ஆசாரத்தினையும் வாழ்க்கைக் கடமைகளையும் அவர் உயர்ந்த அறமாகக் கருதுகிறார் என்பதும் தெளிவாகிறது.

## மனுதரும சாத்திரமும் திருக்குறளும்

சம்ஸ்கிருத தருமசாத்திரங்களுள் மனுதரும சாத்திரம் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது; கருத்து வளத்தால் ஒரு கலைக் களஞ்சியமாகத் திகழ்வது; இது வெறும் அறநூல் அன்று; சட்ட நூலும் அன்று. வழக்காற்று ஒழுக்கவியல், சமூகவியல், உளவியல், உயிரியல், பொருளியல், அரசியல், வாழ்வியல், ஆன்மிகவியல் போன்ற பலதுறைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறும் தருமசாத்திரம்.

மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுந்த - மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்த—உயர்த்த—முயலுவது திருக்குறள்: தமிழில் அறம் பாடவந்த அறவோராகிய திருவள்ளுவரின் அறநெறிக் கருத்துகளுள் சில, அக்காலத்திய இந்தியாவின் வட பகுதியில் தோன்றிய மனுதரும சாத்திரக் கருத்துகள் சிலவற்றோடு ஒத்த இயல்புடையனவாகத் தோன்றுவதில் வியப்பு

59. மனு. 4: 240
60. ஷை 4: 243
61. ஷை 4: 239
62. ஷை 4: 242

இல்லை. வேறுவகையான இரண்டு பண்பாட்டுச் சூழல்களில் அவை தோன்றியனவாக இருந்தாலும், அடிப்படையில் அவை இரண்டும் அறநூல்கள். எனவே, மனிதன் மனிதனாக வாழ வழி வகுப்பதில், அறத்தைப் புகட்டுவதில் அவற்றிடையே பல ஒத்த கருத்துகள் காணப்படுவது இயல்பேயாகும்.

| வ. எண் | மனு தரும சாத்திரம் | திருக்குறள் |
| --- | --- | --- |
| 1. | சுருதி. ஸ்மிருதிகளில் சொல்லப்படுகின்ற அறங்களை மேற்கொண்டு ஒழுகுபவன் யாரோ, அவனே இம்மையில் புகழையும் மறுமையில் அளவிட்டுரைக்க இயலாத இன்பத்தையும் அடைவான் (2: 9) | சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு (31) |
| 2. | தன் வழிபடு தெய்வம், விருந்தினர், பணியாள், பெற்றோர். தனது உயிர் எனும் ஐவருக்கும் உணவு முதலியன படைத்து நிறைவு செய்யாதவன் நடைப்பிணம் (3:72) | தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்(து) ஆறு ஓம்பல்தலை (43) |
| 3. | அனைத்து உயிர்களும், உயிர்க் காற்றால் வாழ்ந்து வருவதைப் போன்று, பிரமச்சாரி. வானப்பிரஸ்தன், சந்நியாசி எனும் மூவரும் இல்வாழ்வானைச் சார்ந்து வாழ்கின்றனர் (3: 77), (6: 89) | இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை (41) |
| 4. | பிறன் மனைவியைக் கூடுவதைப்போல் இவ்வுலகில் ஒருவனது வாழ்நாளைக் | விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில் தீமை புரிந்து ஒழுகுவார் (143) |

குறைக்கும் செயல் வேறு ஒன்று இல்லை (4: 134)

5. தீயிலிட்ட பொன் மாசு அகன்று ஒளிர்தல்போல், உடல் குறைகள் அனைத்தும் பிராணாயாமத்தால் போகும். (6: 71)

சுடச்சுடரும் பொன்போல் ஒளி விடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

6. தெய்வத்தன்மை வாய்ந்த திக்குபாலர்களின் கூறாக விளங்குபவனாதலால், அரசன் வயதில் சிறியனாக இருப்பினும் அவனை அவமதிக்கலாகாது. (7: 8)

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப்படும் (698)

7. தன்னிடம் இல்லாத அரிய பொருள்களைத் தேடுவதும், தேடியவற்றைக் காப்பதும் காத்துவைத்ததைப் பெருக்குவதும், பெருக்கிய பொருளைப் பாத்திரம் அறிந்து வழங்குவதும் அரசர் அறம். (7: 99)

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு (385)

8. ஓடும் நீரில் உறுமீன் வரும் அளவும் வாடி இருக்கும் கொக்கைப் போன்று, பகை வெல்லும் வழியை நாடி நிற்கவேண்டும். (7: 106)

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்(று) அதன்
குத்தொக்க சீர்த்த இடத்து (490)

9. செய்யும் பாவத்தை யாரும் காணவில்லை என்று பாவிகள் தங்களை ஏமாற்றிக் கொள்ளுகின்றனர். அவர்களைப் பின்வரும் தெய்வங்களும் மனச்சான்றும் பார்த்துக் கொண்டே இருக்கும்.

வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் 271)

வான், மண், காற்று, நீர், மனம், சூரியன், சந்திரன்,

இரவு, அந்திசந்திகள், அறம் போன்றவை மனிதரின் எல்லாச் செயலையும் அறியும்.
(8: 85, 86)

10. பிறனுக்குத் தீங்கு வராமற் காக்கும் பொருட்டு, தான் உண்மை அறிந்தவனுயினும், அதனை மாற்றிக் கூறுவோன் சுவர்க்கத்திலிருந்து நழுவமாட்டான்.

உண்மையைச் சொன்னுல், மற்ற ஒருவருடைய உயிருக்கு இறுதி நேரிடும் போல் இருந்தால், பொய்யே கூறலாம். அப்பொய் மெய்ம்மையினும் சிறந்தது.
(8: 103, 104)

பொய்ம்மையும் வாய்மை
இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்
(292)

11. தமது கற்பைத் தாமே காத்தல் மகளிரின் கடமையாகும். அக்காப்பே அவர்களுக்கு நல்ல காப்பாகும். அவர்களை வலிய, காவலரைக் கொண்டு வீட்டுக்குள்ளே பூட்டிவைப்பதால் என்ன பயன்? (9: 14)

சிறைகாக்குங் காப்புஎவன்
செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை
(57)

---

இவற்றைத் தவிர, வேறு ஒத்த கருத்துகள் இவ்விரு நூல்களிடையே இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஒத்த கருத்துகள் அனைத்தும் முழுமையாக ஒப்புமை உடையவை எனக் கூற இயலாது; பல ஒருபுடை யொற்றுமை உடையனவாகத் தோன்றுகின்றன. இவற்றிலிருந்து, இந்தியச் சிந்தனையாளர்களுக்குத் தலையூற்றாக நடைமுறைப் பழக்க வழக்கங்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றிலிருந்து தங்களுக்குத் தேவையானவற்றையும் தங்கள் கருத்திற்கு ஊற்றம் தரத் தக்கனவற்றையும், தேர்ந்து எடுத்து, அவற்றிற்கு அவர்கள் புத்தொளியூட்டியுள்ளனர் எனலாம்.

இந்த ஒற்றுமைப் பண்புகள் சிலவாகவே உள்ளன. ஆனால், இவ்விரு நூல்களின் நோக்கிலும் போக்கிலும் காணப்பெறும் வேற்றுமைகளே மிகப்பலவாக உள்ளன. முதலாவதாகப் பிறப் பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் **வருண தருமங்களே** இந்நூல் முழுவதிலும் பேசப்படுகின்றன. மனிதராகப் பிறந்தவரை, நால் வகைச் சாதியினராகப் பாகுபடுத்தி, அவருள் குறிப்பிட்ட ஒரு சாதியினருக்குத் தலைமையும் சிறப்பும் கொடுப்பதோடு மனு அமையவில்லை. நாலாம் வருணத்தோனை இழித்தும் பழித்தும் பேசுகிறார். 'நாலாம் வருணத்தோன் அரசனாய் இருக்கும் நாட்டில் வாழக்கூடாது' (4: 61); 'நாலாம் வருணத்தான் இருபிறப் பாளரைக் கொடுமையாக வைதால், அவன் வாயில் பத்து அங்குலம் நீளம் உடைய எஃகுக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சி இடுக' (8: 271) என்றும் மனுதரும சாத்திரம் கூறும் அறிவுரை யும் தண்டனையும், அறிவுலகம் ஏற்கத்தக்கது அன்று. 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' (972), 'மேலிருந்தும் மேலல்லார்' (973) எனும் திருக்குறளின் எண்ணப் போக்கிற்கு, இவ்வருண தருமம் முற்றிலும் நேர்மாறானது. இறைவன் படைப்பில், இத்தகைய வேறுபாட்டை, முரண்பாட்டைக் கற்பித்து, அதை நிலைநாட்ட மனுதரும சாத்திரம் முயலுகிறது. இதனால்தான்,

> வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்
> உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி?

என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை முழங்கினார்.

இதையடுத்து **நால்வகை ஆசிரம தருமங்கள்** மிக விரிவாக மனுதரும சாத்திரத்தில் வலுத்துரைக்கப் பட்டுள்ளன. திருக் குறளில் இல்லறமும் துறவறமுமே போற்றப்படுகின்றன. இவற் றுள்ளும் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை!' என்பதன் வாயி லாக 'இல்லறமே நல்லறம்' என்பது நிலைநாட்டப்படுகிறது.

மூன்றாவதாக மனுதரும சாத்திரம் கூறும் தருமம், **ஆசாரங்களை** அடிப்படையாகக் கொண்டது; அதாவது 'வழக் காற்று ஒழுக்கநெறிக்கே' முக்கியத்துவம் தருவதாகும். இதைவிட உயர்ந்த அறவாழ்வைப் பற்றி அது யாதொன்றும் அறிந்திருந்த தாகத் தெரியவில்லை. 'மனிதனின் மனமே-மனச்சான்றே அறம்! தெய்வம்!' எனும் உயர்ந்ததும் சிறந்ததுமான அறக்கொள்கை யைப்பற்றி அது கவலைப்படவில்லை. 'எந்தப் பாவத்தைச் செய் தாலும் அதற்குக் கழுவாய் உண்டு; யாதாகிலும் பிராயச்சித்தம் செய்துகொள்ளலாம்' என்பது மனுதரும சாத்திரத்தின் கடைப் பகுதியால் புலனாகின்றது. இதனை, மனிதனை மேலும் மேலும்,

தவறு செய்து - பாவத்தைச் செய்து தப்பித்துக்கொள்ள மனு வழி காட்டுவதாகத் தோன்றுகிறது.

பெண்ணைப்பற்றி முரண்பட்ட செய்திகள் சொல்லப்படுகின்றன. 'எந்தப் பருவத்தினளாயினும், தனது இல்லத்திலே கூட எந்தப் பெண்ணும் தன் விருப்பப்படி எச்செயலும் செய்யலாகாது' (5: 147) எனவும், 'இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையான பின் மக்கள் ஆகியோர் காவலிலேயே பெண்கள் இருக்கவேண்டும். அவர்கள் தம் விருப்பம்போல் இயங்கக் கூடாது' (5:148, 9: 3) எனவும் பெண்களை உரிமையற்றவர்களாக - ஆணின் அடிமைகளாக மனுதரும சாத்திரம் ஒதுக்கி விடுகிறது. 'ஒரு பெண்ணிற்கு இரு கணவர் உண்டு. ஒருவன் மணம்புரிந்து கொண்டவன்; மற்றொருவன் கருவுறுமாறு செய்பவன்' (9: 32) எனக் கூறுவது கற்பு நெறிக்கு முரணாகிய கருத்தாகும். மற்றும், கணவனை இழந்த மகளிர், நெருங்கிய உறவினரான ஆண்களோடு சேர்ந்து பிள்ளை பெற்றுக் கொள்ளலாம் (நியோகம்) என ஓரிடத்தில் அனுமதி அளித்தும் (9: 68—76), மற்றோர் இடத்தில் மறுத்தும் (5: 160—163) முன்னுக்குப் பின் முரணாக, மனுதரும சாத்திரம் பேசுகிறது. திருக்குறளில், 'பெண்ணை இழிவுபடுத்தும்' இத்தகைய அறவிதிகளை இடம் பெறவில்லை.

'தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற பறவைகளையும் விலங்குகளையும் கொன்று தின்னலாம்' (5: 22), 'பிராமணன் புலாலை உண்ணலாம்' (5.27) என்று கொலை செய்தலையும் புலால் உண்ணுதலையும் மனுதருமம் உடன்படுவதோடு, இவ்வாறு செய்வதனால் பாவம் உண்டாகாது எனச் சொல்லுகிறது. திருக்குறளோ 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்று அறிவுறுத்துவதோடு, 'கொல்லான், புலாலை மறுத்தானை எல்லா உயிருந் தொழும்' (260) என்று தெரிவிக்கிறது.

உழவுத்தொழிலை இழிவானதாக மனுதருமம் கருதுகிறது. 'அது இழிந்தோர் செய்யும் தொழில்' என வெறுத்து ஒதுக்குகிறது (10:34—35). திருக்குறளில் 'உழவு' எனும் ஓர் அதிகாரம் உழவுத் தொழிலின் பெருமையைப் பேசுகிறது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்!' என உழவுத்தொழில் செய்வோரை வானளாவப் புகழ்கிறார் வள்ளுவர்.

இவை யாவற்றையும்விட, முக்கியமானவை மனுதரும சாத்திரத்துள், 'ஆபத்துத் தருமம்' எனும் பகுதியில் கூறப்படும் செய்திகளாகும். தனது உயிரைக் காக்கவும், தன்னைச் சார்ந்தவர்கள் உயிரைக் காக்கவும் வன்முறைச் செயல்களில் ஒருவன்

ஈடுபடலாம் (8: 347—350) எனவும், "மூன்று நாள்கள் பட்டினி கிடப்பவன் மறு நாளைக்கும் அதே நிலைதான் என்பதை அறிந்தால், அவன் திருடலாம்' (11:16) எனவும் மனு உரிமை அளிக்கின்றார்.

ஆனால், திருவள்ளுவரோ, 'தன்னுயிர்க்கு இன்னாமை தானறி வான் என்கொலோ மன்னுயிர்க்கு இன்னாசெயல்?' என வினவு வதோடு நிற்காமல், 'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை!' என அறிவுறுத்துகின்றார். இத்தகைய அடிப்படைக் கொள்கை வேறுபாடுகள் திருக்குற ளுக்கும் மனு தருமசாத்திரத்திற்கும் இடையே நிறைய உள்ளன.

மனுதரும சாத்திரத்தை ஆராய்ந்த அறிஞர்கள் சிலர் மொழிந்துள்ள கருத்துகள், மேற்கண்ட கூற்றுகளை அரண் செய்வனவாக உள்ளன.

> சூத்திரர்களை அடக்கியொடுக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு இந்த விதிமுறைகளை மனு வகுத்ததைப் போலத் தோன்றுகிறது

என்பர் கே. பி. ஜெயசுவால்.[63]

> மனுதரும சாத்திரத்திலும் பிற தரும நூல்களிலும் பெண் எப்பொழுதுமே, அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டும் எனும் கொள்கை நன்கு உருவாக்கப்பட்டுள்ளது. பெண் துன்பத்திற்குரிய செடி. அதைக் கருத்தோடு ஆடவர் பேணி வளர்க்கவேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாகும்

என்பது டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் துணிவுரையாகும்.[64]

> பிராமணின் மதிப்பை உயர்த்தவேண்டும் எனும் முடி வோடு, மனு இந்தத் தரும சாத்திரத்தை எழுதி இருப்பதாகத் தோன்றுகிறது

என்று அவரே (டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனே) வருத்தத் தோடு குறிப்பிடுவதும் இங்குக் கருதத்தக்கதாகும்.[65]

**இந்து சமய அறநூல்களின் அறக்கொள்கை**

இத்தரும சாத்திரங்கள், அறவியல் கொள்கையை மிக நுட்பமாகவோ, விரிவாகவோ ஆராயும் பணியில் ஈடுபடவில்லை.

63. K. P. Jayaswal, Manu and Yajnavalkiya p. 156
64. S. Radhakrishnan, Religion and Society, p. 145
65. ஷை p. 156

மற்றும் அறநிலைத்தகுதி—அறத்தின் தரம்—என்னவென்பதை வரையறுத்து உணர்த்தவும் முயலவில்லை; கடமை, மகிழ்வு, இன்பம், மனநிறைவு போன்ற இன்றைய ஐரோப்பிய அறவியலின் உயிர்நாடியான கொள்கைகளைத் தொடுவதும் இல்லை. எனவே, அறக்கொள்கை வளர்ச்சியின் இரண்டாம் படிநிலையிலேயே இந்துசமய அறக்கொள்கை நின்றுவிடுகிறது என்பர்.[66]

நாம் கண்ட விளக்கங்களிலிருந்து, இந்துசமய அறவோர் ஒழுக்கநெறிப் பண்புகளுக்கே, முக்கியத்துவம் கொடுத்தனர். எல்லாரும் அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். "அவர்கள் நோக்கம் எல்லாம் தருமம் நடைமுறையில் கடைப்பிடிக்கத் தக்கதாக அமையவேண்டும் என்பதிலேயே தோய்ந்து இருந்தது. அன்றாட வாழ்வில், மனிதன் ஒழுங்கான நடத்தையுடையவனாக இருக்கவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டே ஒழுகலாறுகள், சடங்குகள், பண்டிகைகள் ஆகியவற்றை, ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தில் தன்னுடைய நிலைமைக்கேற்பக் கடைப்பிடிக்கத்தக்க வகையில் வகுத்தளித்தனர். இக்காரணத்தால்தான், அவை 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' போதிக்கும் வருணாசிரம தருமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன; அனைவருக்கும் உரிய சாதாரண தருமத்திற்கு முக்கியத்துவம் தரவில்லை"[67] என்று காணே அமைதி கூறுவர்.

தருமசூத்திர, சாத்திரங்களால் அறியப்படும் அறக்கொள்கை நம் நாட்டில், தொல்பழங்காலத்தில் வாழ்ந்த மக்களின், வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக் கொண்டு, காலத்திற்கேற்ப மாறியும் வளர்ந்தும் வந்துள்ளது. இதனால், இன்றைய நிலையில், அவற்றின் பயன்பாட்டை நம்மால் எளிதில் உணர்ந்து கொள்ள இயலவில்லை. காலத்தால் மிகவும் முந்திய நிலையினை அறிவுறுத்துவதால், அவை மங்கிய நிலையில் ஒளிகுன்றியனவாக நமக்குத் தோன்றுகின்றன.

ஆனால், அவை பெரிதும் செயல்முறைக்கு உகந்த நடப்பியல் பாங்குடையனவாக உள்ளமை இங்குக் கருதத்தக்கது. மற்றும், தருமசாத்திரங்கள் உணர்த்தும் அறவியல் கொள்கை அப்பாலைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மெய்ப்பொருள் இயல்புடையதாக விளங்குகின்றது. அவற்றின் மிகச்

66. John Mackenzie, Hindu Ethics, PP. 39-66
67. P. V. Kane, Op. Cit; Vol. 2; Pt. I, P. 11.

சிறந்த, உயர்ந்த குறிக்கோள் வீடுபேற்றை அடையுமாறு மனிதனைத் தூண்டுவதேயாகும். கொள்கை நிலையில் அது முழு நிறைவையும், நடைமுறையில் இன்பதுன்பம், புகழ்பழி, நல்லது கெட்டது, நல்லவை தீயவை முதலியவற்றிடையே உள்ள முரண் பாடுகளை எல்லாம் கடந்து, மேம்பட்டு விளங்குவதையும் சுட்டும், மனித இயற்கையின் ஆன்மிக இயல்பு, அதில் உறையும் தெய்வத் தன்மையை மலரச் செய்வதாகும். அழிவின்மை, முழு நிறைவுத் தன்மை, வரப்பற்ற இருப்பு, வரம்பற்ற தன்னுணர்வு, வரம்பற்ற இன்பம் ஆகிய அனைத்தின் முழுநிறை வடிவ மாகவே, இந்துதரும அறவோர்கள் தெய்வத் தன்மையைப் போற்றி வருகின்றனர். அதை மலரச் செய்வதன் மூலம் அறம், ஆழ்ந்த பொருளுடையதாகி விடுகிறது. எனவே, தரும சாத்திரங்கள் உணர்த்தும், அறக்கொள்கை கட்டுப்பாடில்லாத முழுநிறைவான, நம் மனப்போக்கிற்கு உகந்த அறவியலாகும். இத்தகைய அறவியலில், 'ஆன்மிக முழுநிறைவு' மிக உயர்ந்த குறிக்கோளாக அமைந்து இருப்பதில் வியப்பு இல்லை!

"தருமம் என்று வழங்கப்படும் சொல் மிகவும் சிக்கலான பொருளுடைய சொல். ஒரு மனிதன் ஒரு சமூகத்தைச் சேர்ந்து வாழ்வதற்கும், அல்லது தனியே நின்று செயல்படுவதற்கும், அத்தகைய மனிதனின் பண்பு நலனை உருவாக்கி வைக்கும் எல்லா இலட்சியங்களுக்கும், நோக்கங்களுக்கும், செல்வாக்குகளுக்கும், நிறுவனங் களுக்கும் அப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. நேர்மை பொருந்திய வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டம்தான் அது! அதை வாழ்க்கையில் கடைப்பிடித்தவிடத்து, இந்த உலகத்திலேயே இன்பம், பேரின்பம் அதாவது மோட்சம் ஆகிய இரண்டு நன்மைகளையும் பெறலாம்."

**எஸ். இராதாகிருஷ்ணன்**

("இந்தியாவின் இதயவொலி" பக். 45)

# சமண சமய அறநூல்கள்

**சமணத்தின் தொன்மை**

இந்தியச் சமயங்களில் வைதிக சமயம்போலத் தொன்மையான வரலாற்றை உடையது சமணசமயம். இதனை 'ஜைந தருமம்' அல்லது 'அகிம்சா தருமம்' எனக் குறிப்பிடுவது மரபு. இத்தொடரில், 'தருமம்' என்பது 'அறநெறி' அல்லது 'அற வாழ்வு' எனும் பொருளை யுணர்த்துவதாகக் கொள்ளலாம். 'ஜைநம்' என்பது 'ஜி' என்றும் வேர்ச்சொல் அடியாக அமைந்தது. 'ஜி' எனும் வேர்ச்சொல்லிற்கு, 'அடக்கி வெற்றி பெறுவது' என்பது பொருளாகும். எனவே, 'ஜைந தருமம்' என்பதற்கு 'ஐம்பொறிகளை அடக்கி வெற்றிபெறும் அறநெறி' அல்லது 'அறவாழ்வு' என்பதே பொருளாக இருத்தல் கூடும். இதனால், ஜைநர் என்பவர் 'புலன்களை அடக்கி வெற்றி கொள்ளுபவர்' என்பது தெரிகிறது. புலனடக்கத்தின் மூலம் அவர்கள் மிகச் சிறந்த தூய்மையை அடைகின்றனர் என்பதும், இதன் வழி வரம்பில் ஞானத்தை, வரம்பில் இன்பத்தை, வரம்பில் ஆன்மிக ஆற்றலை அளிக்கும் வீடு பேற்றையும் அடைவர் என்பதும் இச்சமய நூல்களில தெளிவுறுத்தப் படுகின்றன.

ஜைந சமயம் தொடக்ககாலத்தில் துறவிகளின் சமயமாகவே இருந்தது. துறவிகளை 'ஸ்ரமணர்' என்பர். இச்சொல் திரிந்தே 'சமணர்' எனவும் 'அமணர்' எனவு தமிழில் வழங்கலாயிற்று. இச்சொல் தமிழ்நாட்டில் சைநத் துறவிகளைக் குறிப்பதாகிப், பின்னர்த் துறவினை வற்புறுத்தும் சைநர்க்கே பொதுப் பெயராக வழங்கி வருகிறது. கடவுள்நிலை அடைந்த ஜீநரை **அருகர்** எனச் சுட்டுவது வழக்கம். இதனால், சைநரை 'ஆருகதர்' என வழங்குவதும் உண்டு. நாளடைவில் சமணம் தழுவிய இல்லறத்தாரைச் 'சிராவகர்' எனும் சொல்லால் சுட்டினர். தமிழில், அச்சொல் 'சாவகர்' ('சாவகநோன்பிகள்') என வழங்கலாயிற்று.

> பாகவத புராணம் பகவான் விருஷப தேவர் ஜைந தருமத்தை நிறுவியர் என்பதை ஒப்புக்கொள்ளுகிறது. யசுர் வேதம் பகவான் விருஷபநாதர், அஜிதநாதர், அரிஷ்டநேமி ஆகிய தீர்த்தங்கரர்களின் பெயர்களைச் சுட்டுகின்றது. வேதங்கள் எழுதப்படுவதற்கு முன்னரே, சமணசமயம் வளர்ந்து இருந்தது எனில், அது தவறாகாது.[1]

என்பர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன். இதனால், சமண சமயத்தின் தொன்மைச் சிறப்பு புலனாகின்றது. இச்சமயத்தின் இருபத்து நான்காம் தீர்த்தங்கரரே பகவான் மகாவீரராவார்.

### அறநூல்கள்

சமண சமயம் அறநெறிச் சமயமானமையால், அறத்தைப் பற்றிச் சிறப்பாகத் - தனியாக - எடுத்துரைக்கும் அறநூல்கள் பண்டைக் காலத்தில் இயற்றப்படவில்லை. இச்சமயத்தின் திரு மறைகள் அனைத்தும், ஆகமங்கள் எனப்படும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவனாகிய முதல்வனின் வாக்கு' என்பது இதற்குப் பொருளாகும். ஆகமங்களைச் சித்தாந்தங்கள் எனவும் கூறுவர். இவை மகாவீரரின் திருவாய்மொழிகளைக் கருவாகக்கொண்டு வளர்ந்தவை. அவருடைய திருவாக்குகளைக் கொண்ட பழைய நூல்கள் அனைத்தும் 'அங்க நூல்கள்' எனப்படும். அவை

(1) பகவான் மகாவீரரின் உபதேசங்கள்

(2) (அவற்றைக் கேட்ட தலைமைச் சீடர்களான) கணதரர் விளக்கியவை,

(3) மரபுவழி வந்தவை

என்பன.

கி. பி. 454 அளவில், கத்தியவாரிலுள்ள வல்லபி எனும் இடத்தில் கூடிய ஜைந சங்கப் (சுவேதாம்பர) பேரவையே, முதன் முதல், இவற்றை வகுத்தும் தொகுத்தும் முறைப்படுத்தியது. அதாவது, முதன்முதல் அர்த்தமகதி எனும் பிராகிருத மொழியில் எழுதிவைத்து, ஆராயத் தலைப்பட்டனர். அப்புனித நூல்கள் ஆறு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டன. அவை

> (1) அங்கங்கள், (2) உப அங்கங்கள், (3) மூல சூத்திரங்கள், (4) சேத சூத்திரங்கள், (5) சூலிகா சூத்திரங்கள், (6) பிரகிருணகாக்கள் என்பன.

1. S. Radhakrishnan, Indian Philosophy, Vol, I, P. 238.

இவற்றுள் அங்கங்கள் பன்னிரண்டாகும். ஆசார அங்கம் முதல் திருஷ்டிவாத அங்கம் முடிய பன்னிரண்டு என்பர். இவற்றுள் திருஷ்டிவாத அங்கம் மறைந்து போயிற்று. எஞ்சியுள்ள பதினோர் அங்கங்களுள் ஆசார அங்கம் துறவிகளுக்குரிய வாழ்க்கை நெறியை - விதிமுறைகளை வகுத்துரைக்கிறது. மூல சூத்திரங்கள் (1) ஆகாராங்க சூத்திரம் (ஆசார - சாருயிகா), (2) உத்தர அத்தியயன சூத்திரம், (3) கல்ப சூத்திரம், (4) சூத்திர கிரிதாங்க சூத்திரம் (5) பகவதி சூத்திரம் என்பனவாகும்.

ஆகாராங்க சூத்திரம் சமணத்துறவிகளின் அன்றாட ஒழுக லாற்றைக் கூறுவது. மிகவும் பழமையானது; மகாவீரரின் போதனைகள் அப்படியே எழுதிவைக்கப் பட்டவை. உத்தர அத்தியயன சூத்திரம் நீதிக்கதைகளும் அறவுரைகளும் நிறைந் தது. முப்பத்தாறு இயல்களையுடையது; துறவு வாழ்க்கை, ஒழுக்கம், இறப்பு, கருமம், அப்பாலைத் தத்துவம், கதைகள், தவம், சடங்குகள் போன்ற பல பொருள்களை விரித்துரைப்பது. கல்ப சூத்திரம் **பத்திரபாகுவால்** இயற்றப்பட்டது. தீர்த்தங்கரரின் வாழ்க்கை, துறவிகளின் பட்டியல், துறவிகளுக்குரிய ஒழுக்க விதிகள் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன. சூத்திரகிரிதாங்க சூத்திரம், உத்தர அத்தியயன சூத்திரத்தின் நோக்கும் போக்கும் உடையது. நான்கு பூதங்கள், ஆன்மா, கொல்லாமை, கருமவினை ஒழிப்பு, துன்பங்கள், நரகம், உண்மை, பாவங்கள், துறவு போன்ற செய்திகள் இதில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. பகவதி சூத்திரம் வியாகப்பண்ணத்தி எனப்படும். மகாவீரரின் வாழ்வும் தொண்டும், பிறவிப்பிணி, கருமம், நியதிவாதம், உயிரினவகைகள் போன்றவை அறிவியல் கண்ணோட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன. இவையாவும் உபதேசங்களாக (சொற்பொழிவுகளாக)ப் பெரி தும் அமைந்துள்ளன. இவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

இவையல்லாமல், தென்னாட்டுத் திகம்பர சமண சமயக் கிளைக் குரிய புனித நூல்கள் பல உள்ளன. அவற்றுள், கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று நம்பப்படும் குந்தகுந்தாசாரியர் பிராகிருதத்தில் இயற்றிய நூல்கள் குறிப்பிடத்தக்கன. அவை (1) பிரவசன சாரம், (2) சமயசாரம், (3) பஞ்சாஸ்திகாய சாரம், (4) நியமசாரம் முதலியன.

இவற்றுள் பிரவசனசாரம், சமணசமய அறநெறிக் கொள் கைகளை விரித்துரைக்கின்றது; ஓரளவிற்குப் பொதுவான அறங் களையும் எடுத்துரைக்கிறது. ஆன்மாவின், இயல்பை விளக்குவது சமயசாரம் - ஆன்மா, சடப்பொருள், இயக்கம், அமைதி, விண்

வெளி ஆகியவற்றிற்கு உரிய மூலம் ஆகிய ஐந்தும் பஞ்சாஸ்தி காயசாரத்தில் பேசப்படுகின்றன. நியமசாரம் சமண சமய மடங்களின் ஒழுக்க விதிகள் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றது. இந்நூல்களை இயற்றிய குந்தகுந்தாசாரியரே திருவள்ளுவராவார் என்பது சமண சமயத்தவரின் துணிபாகும்.[2]

**சமணசமயத்தின் அறவியல்**

சமணசமயம் அறியாமையின் அடிப்படையில் உண்டாகும் மூடநம்பிக்கைகளை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. அவற்றை மூவகை மூடம் என்பர். முதல் மூடம் (உலக மூடம்) யாத்திரை செய்வதை, பல்வகைத் தீர்த்தங்களில் மூழ்கிப் பாவத்தைப் போக்குவதாக நம்புவதைக் கண்டிக்கிறது. இரண்டாவது மூடம் (தேவ மூடம்) சிறுதெய்வ வழிபாட்டைக் கண்டிக்கிறது. மூன்றுவது மூடம் (பாசண்டி மூடம்) போலித் துறவிகளை உண்மை ஞானிகளாகக் கருதி, மக்கள் வழிபடுவதைக் கண்டிக்கிறது.[3] தனி மனிதனின் சலியாத முயற்சியினாலேயே, தன்னை உயர்த்திக்கொள்ள—செம்மைப் படுத்திக்கொள்ள இயலும் எனும் கொள்கையை மிக உறுதியாய் எடுத்துரைக்கிறது.[4] இதனுடைய எதிரொலியை,

> பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல் (திருக். 505)

எனும் திருக்குறளில் நாம் கேட்கின்றோம். இன்பதுன்பங்களுக்கு மனிதன் இரையாகிவிடக்கூடாது. புறப்பொருள்கள் அனைத்திலும் இருந்து பெறும் விடுதலையின் வாயிலாகவே, நிருவாண நிலையை அடைய இயலும். அப்பேரா இயற்கைப் பெருநிலையை அடைவதற்கு மும்மணிகள் (இரத்தினத்திரையம்) உதவுகின்றன. அவை 'நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம்' என்பனவாகும். இம்மூவகை நெறியும் ஒன்றோடொன்று இணைந்த ஒருமைப்பாடுடையன. இவற்றை ஒருங்கே கடைப்பிடித்தால்தான், வீடு பேற்றை எய்த முடியும் என்று சமணசமயம் அறிவிக்கிறது.

---

2. அனந்தநாத நயினார்: திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும், (சென்னை, 1932), முன்னுரை
3. H. Jacobi: (Tr.) Gaina Sutras, (Clarenden, Oxford, 1895), Pt. 2, Lec. 12; V. 45-48
4. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானு நிலையினு
மேன்மேலும் உயர்த்து நிறுப்பானுந்
தன்னைத் தலையாகச் செய்வானும் தான் (நாலடியார் 248)

"தனக்குத்தானே மிகவும் நெருங்கிய நண்பன் மனிதன். இவ்வாறிருக்க, அவன், ஏன் தனக்கு அப்பால் ஒருவனைத் தேடுகிறான்?"[5] என்று மனிதனை நோக்கி பகவான் மகாவீரர் வினவுகிறார். உடல் நலத்தை ஆன்மிக நலத்தோடு ஒப்பிட்டு "மனிதனுக்கு நோய்தீரவேண்டும் என்றால், மருத்துவரிடமும் மருந்திடமும் முழு நம்பிக்கைக் கொள்ளவேண்டும்; எப்பொழுது எவ்வாறு மருந்து உட்கொள்ளவேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கவேண்டும்; இவற்றிற்கு மேலாக, மருந்தினை உட்கொள்ளவேண்டும்; பத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் உடல்பிணியும், பிறவிப்பிணியும் தீரும்" என்று அவர் அறிவிக்கிறார். உடல் நோய்க்குப் பத்தியம் எத்துணை இன்றியமையாததோ, அத்துணை அளவிற்குப் பிறவிப்பிணியை அறுப்பதற்கு, அறநெறியில் ஒழுகுதல் இன்றியமையாததாகும் என்பது விளக்கப்படுகிறது. இக்கொள்கையைப் பின்பற்றினால், எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும் கவலை இல்லையாம். "ஒருவன் சுவேதாம்பர ஜைனனாகவோ, திகம்பர ஜைனனாகவோ இருந்தாலும் பரவாயில்லை; பௌத்தனாகவோ, வேறு மதத்தவனாகவோ கூட இருக்கலாம். ஆனால், அவன் உயிர்கள் ஒத்த இயல்புடையன என்பதை உணர்ந்து, 'எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணியுள்ளே ஒத்துரிமை' உடையவனாக இருப்பானாயின், அவன் உறுதியாக நிர்வாணத்தை அடைவான்"[6] என்பது சமணசமயத்தின் துணிவாகும்.

சமண சமய அறநெறிக் கோட்பாடே ஐந்து உறுதிகளை (பஞ்ச வர்த்தரம்) அடிப்படையாகக் கொண்டது. அவை இன்னா செய்யாமை (அகிம்சை), உண்மை (சத்தியம்), கள்ளாமை (ஆஷ்தேயம்) பிரமசரியம், பற்றின்மை (அபரிகிரகம்) என்பன. இவை ஒவ்வொன்றையும் இல்லறத்தார்க்கு (அநுவிரதம்) உரியன, துறவறத்தார்க்கு (மகாவிரதம்) உரியன என்று பிற்காலத்தில் பாகுபாடு செய்துள்ளனர்.

இவை அல்லாமல், பத்து அறங்கள் (தசதருமம்) என்று அன்றாட வாழ்க்கையில் ஐம்பொறிகளைக் கட்டுப்படுத்தி, உணர்ச்சி நிலையிலிருந்து அறிவு நிலைக்கு முன்னேறுவதற்குரிய ஒழுகலாற்றை வகுத்துள்ளனர்.[7] அவை பொறையுடைமை, பணிவு, நேர்மை, தூய்மை, உண்மை, அடக்கம் (யோகம் உட்பட)

5. Jacobi: Op.-Cit. Lec. 9; V. 34. (Acaranga Sutra, SBE XXII, P. 165)
6. H. Jacobi, Op. Cit. Lec. 6; V. 6
7. A. Chakravarti: The Religion of Ahimsa, p. 140

உடைமை, தவம், தியாகம், பற்றின்மை, பிரமசரியம் (கற்பு) என்பனவாகும்.[8] இவற்றையும் இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் உரியனவாக விரித்துரைப்பர்.

பெண்ணினை வெறுத்து ஒதுக்கும் இயல்பு தொடக்க காலத்திய சமண அறக் கொள்கையில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

> உலகில், மனிதன் இயல்பாகவே பெண்களிடம் பேரீடுபாடு கொண்டுள்ளான். அவர்களால், உண்டாகக் கூடிய கேட்டை உணர்ந்து, எவனொருவன் பெண்ணைத் துறக்கின்றானோ, அவனே சிரமணனுக்குரிய கடமைகளை எளிதில் செய்பவனாவான்.[9]

இதைவிடக் கடுமையாகப் பெண்ணை இழித்துரைக்கும் இடங்களும் உண்டு.[10] உண்மையான துறவி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

> மரவுரியோ ஆட்டுத்தோலோ ஆடையாக உடுக்கத் தேவை இல்லை. அதற்காக ஆடையின்றிக் 'கையது கொண்டு மெய்யது பொத்தி' அலங்கோலமாக அலையவும் வேண்டா! சடைமுடியோ, மொட்டைத் தலையோ தேவை இல்லை! இவை எல்லாம் பாவச் செயல்கள் புரியும் துறவியைக் காப்பாற்றா[11]

என்று மகாவீரர் இடித்துரைக்கின்றார்.

'இந்திரனுக்கும் நமிக்கும்' இடையே நடந்த உரையாடல் ஒன்று. ஒன்பதாவது உபதேசத்தில் இடம்பெறுகிறது. 'துறவு உள்ளம் எப்படி அமையவேண்டும்?' என்பதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து கண்ட முடிவு, "எவனொருவன் எல்லாவற்றையும் துறந்து, நமக்குரியவை ஒன்றும் உலகில் இல்லை எனும் பற்றற்ற உள்ளத்தைப் பெறுகின்றானோ, அவன் மகிழ்வுமிக்கவனாவான். மிதிலை நகரம் தீப்பற்றி எரிந்து சாம்பலாகப் போவதைப் பார்த்து 'எனக்கு உரியவை ஒன்றும் எரிந்து போகவில்லை' எனும் பற்றற்ற மனநிலை உடையவனாக இருப்பவனே உண்மையான துறவியாவான்"[12] என்னும் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்க ஒன்றாகும்.

---

8. ஷை p. Cit. op. 146
9. H. Jacobi: op. Cit; The Uttaradhyayana Sutra, 16
10. ஷை Lect. 8 V. 18, Lec. 16; ப. 1—10
11. ஷை op. cit; Lec. 5; v. 21
12. ஷை Lec 9; v. 14.

இந்த நோக்கில், 'ரோமாபுரி தீப்பற்றி எரிந்ததைக் கண்ட நீரோ மன்னன் 'வயலின் வாசித்தது' தவறுகா; அவன் மாபெரும் துறவியாகவே காட்சி தருவான்.

பதினோராவது உபதேசத்தில், திருக்குறளில் 'ஆமையில்' முடியும் எதிர்மறை அறங்களான "இடுக்கண் அழியாமை, இன்னா செய்யாமை, கல்லாமை, கள்ளாமை கள்ளுண்ணாமை, கொல்லாமை சிற்றினம் சேராமை, பயனில சொல்லாமை, பிறனில் விழையாமை புறங்கூறாமை, பெரியாரைப் பிழையாமை, பொச்சாவாமை, வெகுளாமை, வெஃகாமை, வெருவந்த செய்யாமை என முடிவுறும் அறங்களும், மடியின்மை போன்ற 'அன்மையில்' முடியும் அறங்களும் விரித்துரைக்கப் படுகின்றன.[13]

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டல் வேண்டா' என்று சமண சமயம் அறிவுறுத்துகிறது. அதேசமயத்தில், அந்த வேள்வியை விட மிகச்சிறந்த வேள்வி ஒன்றைப் பற்றிப் பேசுகிறது:

> தவமே தீ: உயிரே வேள்விக்குண்டம்; நேர்மையான முயற்சியே நெய்சொரியும் அகப்பை; உடலே காய்ந்த பசுஞ் சாணம்; கருமமே சமித்து; தன்னடக்கம், உண்மை முயற்சி, சாந்தநிலை ஆகிய மூன்றுமே முனிவர்களால் போற்றப்படும் ஆகுதியாகும். நான் அவற்றை இவ்வேள்வியில் இடு கிறேன்.[14]

இத்தகைய அறங்களைக் கூறிச் செல்லும் மகாவீரர், 'தருமம் அதருமம், அண்டம், ஆன்மா ஆகியவற்றிற்குத் தோற்றமும் முடிவும் இல்லை[15] என்று அறிவுறுத்துவது, சமணசமயக் கொள்கையின் ஊற்றத்தை வெளிப்படுத்துகிறது.

'அகிம்சா பரமோதர்மா' ('ஒன்றாக நல்லது கொல்லாமை'— திருக். 323) என்னும் சமணசமயத்தின் அடிப்படைக் கோட்பாடு, சூத்திர கிரிதங்காத்தின் மூன்றாவது பகுதியில் மிக விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.[16]

வேள்வியைக் கண்டிக்கும் மற்றொரு கருத்து, நம் சிந்தனை யைத் தூண்டுவதாக அமைந்திருக்கிறது.

---

13. Ibid; Lec 11; v. 4-5.
14. Ibid; Lec, 12; v. 44
15. Ibid; Lec 36; v. 8; 66.
16. H. Jacobi, op, cit, p. 247

> தீயை மூட்டுவதால் மோட்சம் கிடைக்கும் என்றால், நாள்தோறும் தீமூட்டி பணிபுரியும் கருமானுக்கு என்றோ மோட்சம் கிடைத்திருக்க வேண்டுமே[17]

எனும் கருத்தில், ஏளனமே மேலோங்கி நிற்கிறது.

"கொல்லாமையை ஏன் ஒருவன் மேற்கொள்ளவேண்டும்?" என்பதற்கு மகாவீரர் கூறும் காரணம் அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறது. அவர் கூறுகிறார்:

> எல்லா உயிர்களும் துன்பத்தை வெறுக்கின்றன. எனவே, யாரும் எந்த உயிரையும் கொலைசெய்தல் கூடாது.[18]

என்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

இதுவரை நாம் கண்ட சமணசமய அறக்கொள்கை துறவிகளுக்காகவே, முதலில் வகுக்கப்பட்டது; காலப்போக்கில், மக்களாகப் பிறந்த அனைவருக்கும் பொருந்தக்கூடிய வகையிலே போற்றப்பட்டு வருகின்றது என்பது நினைவுகூர்தற்குரியதாகும்: கொல்லாமை, இன்னா செய்யாமை, உண்மை (வாய்மை) என்பன தலைசிறந்த அறங்களாகக் கருதப்படுவதும் புலனாகின்றது. இவற்றோடு 'சடங்குநெறி' பலவாறு கண்டிக்கப் படுகிறது.

இவற்றுள் 'கொல்லாமை, இன்னா செய்யாமை' என்பன, 'எவ்வுயிரையும் தம் உயிரைப் போல' உணர்ந்து போற்றும் மிகச் சிரிய அறத்தினை உலகிற்கு உணர்த்துகின்றன. "இறைவன் எல்லா உயிர்களிடத்தும் இரண்டறக்கலந்து 'அந்தர்யாமி' யாக உள்ளான்" எனக் கூறும் வைதிக சமயம் அறிவுறுத்த மறந்துவிட்ட, தவறிவிட்ட இப்பேரறத்தை, உலகிலேயே, முதன்முதல் எடுத்துரைத்த அறவியல் கோட்பாடு சமணருடையதே என்பதில் சிறிதும் ஐயமில்லை! இத்தகைய அறக்கொள்கை வள்ளுவருடைய உள்ளத்தைக் கவர்ந்து இருக்கிறது. இதனால், திருக்குறளில் கணிசமான அளவிற்குச் சமண சமயத்தின் தாக்கம் இடம்பெற்று இருப்பதைக் காணுகின்றோம்.

---

17. Ibid; p. 295
18. Ibid; p. 311. இதனை வள்ளுவர்,

> தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
> மன்னுயிர்க்கு இன்னா செயல் (திருக். 518)

எனத் தெரிவிக்கின்றார்.

## ஜைந ஆகமங்களும் திருக்குறளும்

ஜைந ஆகமங்களுள் தனிப்பட்ட அற நூல்கள் காணப்பெற வில்லை! எனினும், அவற்றில் பெரிதும் துறவிகளுக்குரிய ஒழுக லாற்று விதிமுறைகளும் நீதிபோதனைகளும் இடம் பெற்றுள்ளன. பிறப்பறுத்தலுக்குரிய—பேரா இயற்கைப் பெருவாழ்வை அடை வதற்குரிய—வழிவகைகளை வகுத்துரைக்கும் இடத்து, ஜைந ஆகமங்கள் அறவாழ்விற்குரிய நெறிமுறைகளையே பலவகையாக எடுத்தியம்புகின்றன. இவ்வகையில், அவை அற நூல்களின் இயல்புகளைப் பெற்றுள்ளன. ஜைந ஆகமங்கள் அறிவுறுத்தும் அறநெறிக் கருத்துகளுள் சில, திருக்குறள் கருத்துகளோடு ஒப்புமை யுடையனவாக உள்ளன. அவற்றுள் முதன்மையான சிலவற்றைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| வ. எண் | ஜைந ஆகமங்கள் | திருக்குறள் |
|---|---|---|
| 1. | புறப்பொருள்கள் அறிவைக் கெடுக்கும்; மனத்தை மயக் கும்; அவாவைப் பெருக்கும்; அழுக்காற்றை உண்டாக் கும்; அதனால் வெகுளி தோன் றும்; அதன் விளைவாகக் கடுஞ்சொல் பிறக்கும். என வே, மனத்தைத் தூய்மை யாக வைத்துக்கொள்! அந் நிலையில் அறவுணர்வு நிலை பெறும். (உத்தர. 4:12) | அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் (35)<br><br>மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற (34) |
| 2. | மரவுரியையோ, ஆட்டுத் தோலையோ ஆடையாக அணியத் தேவை யில்லை. அல்லது ஆடையின்றித் திரி யவும் வேண்டியது இல்லை. சடைமுடியால், மொட்டைத் தலையால் என்ன பயன்? பாவம் செய்த துறவியை இவை காப்பாற்ற (உத்தர. 5:21) | மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின் (280) |

| | |
|---|---|
| 3. துறவி ஓர் உயிரையும் கொலை செய்தல் கூடாது; பிறர் கொலை செய்ய அனுமதிக்கவும் கூடாது. இவ்வாறு கொல்லாமை அறத்தைப் போற்றுபவன் எல்லாத் துன்பத்தி லிருந்தும் விடுதலை அடைவான். (உத்தர. 8:8) | கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல் செல்லாது உயிருண்ணும் கூற்று (326)<br><br>மன்னுயிர் ஓம்பி அருளாள் வாற்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை (244) |
| 4. இன்பத்தை அடையத் துடிக்கும் அவாவே எல்லா வகையான துன்பங்களுக்கும் மூலகாரணம். அவ்வவாவினை அழித்துவிட்டால் எல்லாமே இன்பமயமாகத் தோன்றும். (உத்தர. 32:19) | இன்பம் இடையறாது ஈண்டும் அவா வென்னும் துன்பத்துள் துன்பம் கெடின் (369) |
| 5. கொல்லாமையே தலையாய அறம். இதுவே ஞானத்தின் சாரமாகும். (சூத்திரா. 4:10) | ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று அதன் பின்சாரப் பொய்யாமை நன்று (323) |
| 6. ஆமை, தன் கால்களை ஓட்டினுள் அடக்கித் தற்காத்துக் கொள்ளுவதைப் போல, அறிவுடையோன் தன் ஐம்பொறி வாயிலாக உண்டாகும் வேட்கையை அடக்கி, மனத்தைத் தீய வழியில் செல்லாமல் தற்காத்துக் கொள்க! (சூத்திரா. 8:16) | ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்(பு) உடைத்து (126) |

இவ்வொப்புமைகளைக் கருத்தில் கொண்டு நோக்குகின்ற பொழுது, "கொல்லாமை, இன்னாசெய்யாமை, போலித்துறவு, தூய்மையான உள்ளமே அறத்தின் நிலைக்களம், புலனடக்கம்" என்ற அறவாழ்வுக்குரிய கொள்கைகளில், திருக்குறளின் கருத்துகள் ஜைந ஆகமக் கருத்துகளோடு பெரிதும் ஒப்புமை யுடையனவாக உள்ளமை தெரியவருகிறது. இந்நூல்களிடையே

காணப்படும் வேற்றுமைகளும் கடுமையானவையாக உள்ளன. சமணசமயத் திருநூல்கள், துறவிகளுக்குரிய அறத்தையே போதிக்கின்றன. திருக்குறளில் இல்லறத்தாருக்குரிய அறங்களும், சமுதாய வாழ்க்கையில் இல்லறத்தாருக்குரிய ஒழுகலாற்று முறைகளும் விரித்துரைக்கப்படுகின்றன. அவற்றோடு துறவு நெறியில் செல்வோருக்குரிய அறங்கள் வகுத்துரைக்கப் பட்டுள்ளன. தொடக்க காலத்திய சமணசமய ஆகமங்கள் 'மகாவிரதமாகிய, துறவுநெறிக்குரிய அறங்களையே, போற்றி வளர்த்து வந்துள்ளதைக் காணுகின்றோம். கி. பி. முதல் நூற்றாண்டை ஒட்டியே பொதுமக்கள் (இல்லறத்தார்) மேற்கொண்டு ஒழுகக்கூடிய பொது அறங்களான அனுவிரதங்கள், ஐவகை நோன்புகள், பத்துவகை அறங்கள் சமணசமயச் சான்றோர்களால் சிறப்பாகப் பேசப்படுவதைக் காணுகின்றோம். குந்தகுந்தாசாரியரின் பிரவசன சாரம், சமயசாரம், பஞ்சாஸ்தி காயசாரம் போன்ற தத்துவநூல்களே சாமானிய மக்களுக்குப் பயன்படக் கூடிய அறங்களையும், துறவறத்திற்குரிய ஒழுக்கவிதிகளையும் வகுத்துரைக்கின்றன.

இரண்டாவதாக, 'வாழ்வே துன்பமயமானது' எனும் கொள்கை சமணசமயத்தின் தலையாய கொள்கையாகத் தோன்றுகிறது. "பிறப்பே துன்பம்; மூப்பு துன்பம்; அவற்றைப் போன்றே நோயும் இறப்பும் துன்பம் நிறைந்தவை. வாழ்க்கை என்பது துன்பத்தைத் தவிர வேறொன்றும் இல்லை;"[19] என்னும் சூத்திரமே வாழ்க்கை மறுப்புக் கொள்கைக்குப் போதிய சான்றாகும். திருவள்ளுவர் வாழ்க்கையில் துன்பம் உண்டு என்பதை உடன்படுகிறார். ஆனால், அதற்காகத் துன்பத்தைக் கண்டு அஞ்சி, எல்லாவற்றையும் துறந்து, காட்டிற்கு ஓடிவிடுமாறு அவர் சொல்லவில்லை. வாழ்க்கையை நலமுடையதாக—வளமுடையதாக—பயனுடையதாக ஆக்கிக்கொள்ளுவதற்கு அவர் வழிகாட்டுகின்றார். இல்வாழ்க்கை என்பதே, பிறருக்குப் பயன்பட வாழ்வதாகும். பிறருடைய துன்பத்தைக் களைய அன்போடும் பரிவோடும் செயலில் ஈடுபடுமாறு அவர் தூண்டுகிறார். "அன்பு சமூக சேவையாகப் பரிணமிக்க வேண்டும் என்ற கருத்து, திருக்குறளிலேதான் வற்புறுத்தப்படுகிறது...........நெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலே வேரூன்றி வளர்ந்த கருத்துகளை வள்ளுவர் குறள்வெண்பா வடிவில் எடுத்துரைத்தார்......'செயல்மூலமாகவும் சேவை மூலமாகவும் மற்றவர்களுக்கு நன்மைசெய்ய முடிகிறதே: ஆகையினால் செயலில் ஈடுபடு!' என அவர் அறிவுறுத்துகிறார்." செயலில் ஈடுபடுவதன் மூலம் மனிதனுக்கு மகிழ்ச்சி

19. உத்தர. 18: 15

உண்டாகிறது' என்னும் கருத்தினை இந்திய இலக்கியத்திலேயே, வேறெங்கும் காண இயலாது. இந்தக் கருத்தை வள்ளுவர் பல இடங்களிலே வற்புறுத்தியுள்ளார்[20] எனும் சுவைட்சரின் விளக்கம் திருக்குறளின் நோக்கினையும் போக்கினையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

மூன்றாவதாகப் 'பெண்கள் பேரின்ப வாழ்க்கைக்குத் தடைக் கற்கள்' எனும் கருத்தில், பெண்களை இழித்தும் பழித்தும் சமண ஆகமங்கள் பேசுகின்றன. "அந்தப் 'பெண்' எனும் அரக்கிகளை விரும்பாதே. அவர்களுடைய மாரிலே திரண்டெழுந்துள்ள தசைப் பிண்டங்களைக் கண்டு மயங்காதே! அவர்களுக்கு நிலையான மனமோ, எண்ணமோ கிடையாது! அவர்கள் மனிதரை மயக்குவர், விளையாட்டுப் பொம்மைகளாக உருட்டுவர்; அடிமைகளைப்போல நடத்துவர்!"[21] எனபன போன்ற பல இழிவுரைகளும், இதைவிடக் கடுமையான 'பெண்பழிப்புரைகளும்' சமண ஆகமங்களில் நிறைய உள்ளன.

திருக்குறளில் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. அறத்துப் பாலில் 'பெண்ணின் பெருந்தக்கயாவுள?' (54) என்று வினவும் வள்ளுவர், பொருட்பாலில் 'பெண்ணே பெருமை யுடைத்து' (907) எனவும், காமத்துப்பாலில், 'பெண்ணின் பெருந் தக்கது இல்' (1137) எனவும் விடை இறுத்துள்ளதைக் காணு கின்றோம். 'மங்கலம் என்ப மனைமாட்சி' (60) என்றும், 'கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள' (1101) என்றும், 'தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால் அம்மா அரிவை முயக்கு' (1107) என்றும் மங்கை நல்லாள் தரும் இன்பத்தை வள்ளுவர் பேற்றிப் புகழ்ந்துள்ளார். இவ்வாறு, அறநெறியில் நின்று முறையாக/அளவாக வாழ்வில் இன்பத்தை மனிதன் நுகர்வதை வள்ளுவர் வெறுக்கவும் இல்லை! கண்டிக்கவும் இல்லை! 'அறத்தான் வருவதே இன்பம்' என்பது வள்ளுவர் வாய்மொழி. திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறி 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து' அதன் பயனை வீடு பேற்றை அடையும் நெறியாகும். இவ்வகையில் திருக்குறளின் வாழ்க்கைத் தத்துவம், சமண ஆகமங்களின் கொள்கைகளி லிருந்து வேறுபடுவதை யாரும் எளிதில் புறக்கணிக்க இயலாது!

---

20. A Schweitzer, Op.Cit., PP. 199-201
21. உத்தர. 8: 18

# பௌத்த சமய அறநூல்கள்

## பௌத்தசமயக் கொள்கை

கிறித்துவம், இஸ்லாம் சமயங்களைப் போன்றே, பௌத்தம் போதிக்கும் சமயமாகவும், ஒருவகைப் பண்பாட்டுச் சமயமாகவும், வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஓர் இயக்கமாகவும் விளங்குகிறது. பௌத்த சமயம் அனைத்து உலக நோக்குடன், அன்பு கனிந்த அறவியல் கொள்கையை உலகிற்கு வழங்கியுள்ளது. தொடக்க காலத்தில் உபநிடதங்களினுடைய துன்பியல் நோக்கின் சாயலை, நாம் அதில் காணுகின்றோம். அதனுடைய நான்கு அடிப்படைக் கொள்கைகள் "துக்கம்; துக்ககாரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம்" என்பன. வாழ்க்கை தவிர்க்க இயலாத வகையில் துன்பமயமானது; அத்துன்பத்திற்கு மூலகாரணமாக இருப்பது அவா.[1] அவாக்களை வேரோடு அறுத்து ஒழித்தலே துக்கத்திலிருந்து நீங்கும் வழி; நிருவாண நெறியில் அறத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதாகும். அதற்கு விழிப்பும் முயற்சியும் வேண்டும். இவ்வடிப்படையில் மறுபிறப்பும், பிறவிச் சுழற்சியும் பௌத்த சமய அடிப்படைக் கொள்கையில் இடம்பெற்றுள்ளன. 'அருகத்து' நிலையை எய்துதலே ஈனயான சமயத்து அறக் கோட்பாட்டின் குறிக்கோளாகும். அருகத்து நிலையை அடைந்தவன் உலகம் துன்பமயமானது என்பதை உணர்ந்து, உள்ள வுறுதி குலையாமல், உள்ளத்தூய்மையோடு அறநெறியில் நின்று ஒழுகுபவனாவான். அவன்,

> பாவங்கள் அனைத்தையும் களைந்து எறிவான்.
> நற்செயல்களையே கடைப் பிடிப்பான்
> மனமாசற்ற உள்ளத்தோடு வாழமுயல்வான்
> உலகில் எவ்வுயிரும் இன்புற்றிருக்க
> கருணையும் அருளும் உடையோனாவான்[2]

---

1. அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
   தவாஅப் பிறப்பீனும் வித்து (திருக். 361)
2. ஆனந்த குமாரஸ்வாமி : கோதம புத்தர், பக். 202-4.

இவ்வாறு ஒழுகுகின்றவன், பிறவிப் பெருங்கடலை நீந்தி, ஆளுமையை அழித்தலாகிய நிருவாண நிலையை அடைவான். ஆனால், மகாயான பௌத்தம் உருவெடுத்தவுடன் இந்த நோக்கத்தில் கடுமையான வேறுபாடு உண்டாகி இருக்கிறது. இந்நிலையில், பௌத்த சமயத்து அறவியல் இலட்சியமும் மாற்றம் அடைந்துள்ளது. போதிசத்துவரே, மகாயானத்தின் அறவாழ்வு வாழும் இலட்சிய மனிதராவார். நிருவாணக் கொள்கையும் உடன்பாட்டு வகையான் உணர்த்தப் பெறுகிறது; ஆன்மாவின் விடுதலைக்கு உதவும் வாய்ப்பாகவே மகாயானம், வாழ்க்கையைப் போற்றுகிறது. மனித இனத்தின் துன்பத்தைத் துடைப்பதற்குமகிழ்வோடு அதனுடன் பற்றுகளைப் பெருக்கி, 'வாழ்க்கையைப் பயனுடையதாக' ஆக்குவதன் மூலமே, நிருவாணத்தை அடைய இயலும் எனும் புதுக்கொள்கை, "வாழ்க்கை வாழ்வதற்கே அன்போடும் பண்போடும், அறத்தோடும், தொண்டு உள்ளத்தோடும் வாழ்வதற்கே!" என்பதைப் பறைசாற்றுகிறது. ஈனயானக் கொள்கைகள் அனைத்தும் பாலிமொழி நூல்களில் வளர்ந்து வந்துள்ளன; மகாயானக் கொள்கைகள் வடமொழி வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளன.

## தருமத்தின் பொருள்

'தருமம்' எனும் சொல் பௌத்த சமயத்தில் புதுமைப் பொலிவுடன் காணப்படுகிறது. தருமம் என்பது (1) போதிமாதவரின் அறவுரைகள் அனைத்தையும் சுட்டுவதாக அமைகிறது; (2) சடப் பொருள், மனம், இயற்கைச் சக்திகள் ஆகியவற்றை இயக்கும் ஆற்றலே தருமம் என்பது மற்றொரு பொருளாகும்; (3) ஒழுகலாறு அனைத்தையும் தருமம் எனச் சுட்டும் பொதுமரபும் உண்டு; இவற்றுடன், (4) பௌத்த சமயத்தவரின் வாழ்க்கை நெறி எனும் பொருளிலும் தருமம் பயன்படுத்தப்படுகிறது.[3]

தருமம் எனும் சொல், தம்மபதத்திலேயே பத்து வகைப் பொருள்களில் பயன்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

மனநிலை (தம்ம. 1), சட்டம் (தம்ம. 5), அறம் (தம்ம. 24), கொள்கை (தம்ம. 38), தலைசிறந்த உண்மை (தம்ம. 64), சான்றோராகிய புத்தர் பெருமானின் அறவுரை (தம்ம. 79), அறவுரை (தம்ம. 82), ஒளிமிகு வாழ்க்கை நெறி (தம்ம. 87), கொள்கையின்

3. Stacherbatsky; The Central Conception of Buddhism P. V.
Junjiro Takaksu: The Essentials of Buddhist Philosophy, p. 6

ஓர் அசை (தம்ம. 100), நற்பண்புகள் (தம்ம. 107) எனும் பத்தையும், நாம் முதலில் கண்ட நான்கு வகைப் பொருளில் அடக்கிவிடலாம். இதிலிருந்து பௌத்த தருமம், ஆன்மிகப் பண்பும், அப்பாலைத் தத்துவ இயல்பும் வாய்ந்ததாக உள்ளமை புலனுகிறது. எனவே, வைதிக சமய அறநூல்கள் போற்றும் வருண தருமம், ஆசிரம தருமம், வருணுசிரம தருமம், நைமித்திக தருமம், குண தருமம் எனும் ஐந்து வகைப் பொருளில் பௌத்த சமயம், தருமத்தைப் போற்றவில்லை என்பது தெளிவாகிறது. அவை உணர்த்தும் சாதாரண தருமங்களோடு, ஓரளவிற்குத் துறவிக்குரிய அறநெறிகள் புத்த சமயத்தில் அறமாகப் போற்றப்படுவதைக் காணுகின்றோம். இதே கொள்கை அடிப்படையில், சமண சமயத்தின் ஐந்து சீலங்களும் பத்துவகை தருமங்களும் போதிக்கப்படுவதைக் கண்டோம். இவை வழக்காற்று ஒழுக்கநெறிக்கு அடிமையாகாமல், எல்லாருக்கும் எக்காலத்திற்கும் (Universal) பயன்படத்தக்க அறங்களையே ஓதுகின்றன. இதனுல, இவ்வறக் கோட்பாடு காலத்தால் கறைபடாது, இடத்தால் இடருருது, காலத்தையும் இடத்தையும் வென்று, இன்றும் வீறுடன் விளங்குகின்றது.

## அடைக்கல மும்மணிகள்

பௌத்த சமயத்தைத் தழுவுபவர் துறவியாக இருந்தாலும், இல்லறத்தாராக இருந்தாலும் புத்தரையும், தருமத்தையும், சங்கத்தையும் அடைக்கலம் அடையவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. இவ்வடைக்கல மும்மணிகளுள் நடுநாயகமாக இருப்பது தருமம். இங்குத் தருமம் என்பது, பௌத்த சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக விளங்கும் புத்தர் பெருமானின் "போதனைகளைச்" சிறப்பாக உணர்த்துகிறது. இதிலிருந்து, 'தருமம்' என்பது பௌத்த சமயத்தினரின் உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றிலும் உறைவது; ஊனிலும் உயிரிலும் இரண்டறக் கலந்தது என்பதை நாம் அறிகிறோம். எனவேதான், இந்தியச் சமயங்களுள் 'தருமநெறி' என்னும் தொடரால் சிறப்பாக பௌத்த தருமத்தையே சுட்டும் மரபு தோன்றலாயிற்று.

## பௌத்த சமயத்தின் அறநூல்கள்

ஈனயான பௌத்த சமயத்தின் திருமறைகள் பாலி மொழியில் 'திரிபிடகம்' (முக்கூடை) எனும் பெயரால் தொகுக்கப்பட்டுள்ளன. அவை விநய பிடகம் (ஒழுக்க இயல்பு), சுத்த பிடகம் (உபதேசங்கள்), அபிதம்ம பிடகம் (சமயக் கொள்கை) என்பனவாகும். ஒவ்வொரு பிடகமும், பல சிறுசிறு நூல்களைத்

தன்னகத்தே கொண்டுள்ளன. சுத்த பிடகத்தில் குத்தகநிகாயம் (குறுகிய வடிவுடையவை) என்பது ஒரு தொகுதி. அதில் பதினைந்து நூல்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் இரண்டாவதாக உள்ளது **தம்மபதம்** எனும் அறநூலாகும். அபிதம்ம பிடகத்தில் ஏழு நூல்கள் உள்ளன. அவற்றுள் முதலாவதான 'தம்மசங்கணி', 'சங்கத்திற்குரிய விதிமுறைகளை - அறநெறிகளை, வகுத்துரைப்பதாகும்.

வாய்மொழி வாயிலாக ஓதப்பட்டு வந்த இந்தத் திருநூல்கள் அனைத்தும், கி. மு. 400க்கும் கி. மு. 300க்கும் இடையில், பெரிதும் அசோகன் காலத்தில் (கி. மு. 273—232) எழுத்து வடிவம் பெற்றுத், திருமறைகளாகப் போற்றப்படும் நிலையை அடைந்தன.

**தம்மபதத்தின் அமைப்பும் அழகும்**

தருமம் எனும் வடமொழிச் சொல், பாலிமொழியில் தம்மம் என்று திரிந்து வழங்குகிறது. புத்தர் பெருமானின் உபதேசங்கள், ஒழுக்க விதிகள், வாழ்க்கைநெறி எனும் முப்பொருளும் இணைந்த ஒன்றாகவே அறம், தம்மபதத்தில் காட்சி தருகிறது. 'பதம்' எனும் சொல் 'பாத' எனும் வடசொல்லின் திரிபு எனக்கொண்டு 'தம்மபதம்' என்பதற்கு 'அறவழி' என விளக்கம் தருவர். மற்றொரு சாரார் 'பதம்' என்பது சம்ஸ்கிருதத்தில் 'சொல்லை', 'முதுமொழிகளை'க் குறிக்கும். எனவே, முதுமொழிகளைக் கொண்ட அறநூலைக் குறிக்கிறது என்பர். தங்கள் கருத்திற்கு அரணாக அமையும் வகையில்,

> அறிவுமிக்க ஒருவன் நல்ல மலரை அறிவதைப்போல,
> நன்கு அறிவுறுத்தப்பட்ட தம்மபதத்தை அறிபவன் யாரோ?
> (தம்ம. 44)

என்னும் அறவுரையும்,

> பொருளற்ற சொற்களை (பதங்களை)த் தொகுத்து நூறு பாடல்களை ஒப்புவிப்பதைவிட, பொருள் பொதிந்த ஒரு பாடலின் பொருளைத் தெளிவது போதும்
> (தம்ம. 100)

என்னும் அறவுரையையும் காட்டுவர்.

மற்றொரு சாரார், 'பதம்' எனும் சொல் 'அடி, அடிப்படை' எனும் பொருள் பயக்கும் என்பர். இந்நோக்கில் 'தருமத்தின் அடிப்படையை உணர்த்துவது தம்மபதம்' என்பர். பிறிதொரு சாரார், பதம் என்பது செய்யுளின் 'அடி'யை (பாதத்தை)ச் சுட்டும். எனவே, தம்மபதம் என்பது 'தருமத்தைப் பற்றிய

பாடல்களின் தொகுதிக்கு' வழங்கும் பெயர் என்பர். இவையாவும் அவரவர்களுடைய மதிநுட்பத்தையும் சிந்தனைத் திறனையும் புலப் படுத்துவனவாக உள்ளன. நாம் புத்தரின் போதனையாகிய **அற வழியையே, தம்மபதம்** உணர்த்துவதாகக் கொள்ளுவது பொருத்த மாகும்.

தொகை நூலாகிய தம்மபதத்தின் காலத்தை நாம் திட்ட வட்டமாகச் சொல்லுவதற்கு இயலவில்லை. புத்தர் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய அறவுரைகள், இந்நூல் வடிவில் எக் காலத்தில் தொகுக்கப்பெற்றன என்பதை அறிய முடியவில்லை. ஆரிய தரும ஆதித்தர் என்பவர் தம்மபதத்தை இயற்றியதாகச் சீனமரபு கூறுகிறது.[4] ஆனால், இதனை மற்ற நாட்டு பௌத்த அறிஞர்கள் ஒப்புக் கொள்ளுவது இல்லை.

அசோகருடைய பாபரா (Babara) கற்பாறைக் கல்வெட்டில், தம்மபதத்தின் வாசகங்கள் மேற்கோளாக எடுத்தாளப் பட்டுள்ளன. எனவே, கி. மு. மூன்றும் நூற்றுண்டிற்கு முன்பே, தம்மபதம் இன்றைய வடிவத்தைப் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பாலிமொழியில் முதன்முதல் எழுதப்பெற்ற இந்நூலின் சீன மொழிபெயர்ப்பு, கி. பி. 972இல் அச்சிடப் பெற்றதாகக் கூறுவர்.[5]

தம்மபதம் வடிவிலே சிறிய நூல். திருக்குறள் அறத்துப் பாலைவிடச் சிறிது அளவில் பெரியது. இருபத்தாறு இயல்களை யும், 423 பாக்களையும் பாலிமொழியில் கொண்டதாக உள்ளது; சீனமொழியில் முப்பத்தொன்பது அதிகாரங்களையும், 760 பாக் களையும் கொண்டதாக விரிந்துள்ளது. சீன மொழிபெயர்ப்பில் கதைகள், விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இயல் ஒன்றுக்குக் குறைந்தது பத்துப் பாக்களும், அதிகப்படியாக முப்பத்தைந்து பாக்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் அமைப்பிலிருந்து, இந்நூல் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்நூலில் "இரட்டைச் செய்யுள்கள், கருத்து உடைமை, சிந்தனை மலர்கள், அறிவிலி, ஞானி, துறவி, ஆயிரம், தீயொழுக் கம், தண்டனை, முதுமை, ஆன்மா, உலகம், புத்தர், களிப்பு, இன்பம், சினம், குற்றம், சான்றோர், வழி, பலவகை நரகம், யானை, அவா, பிக்கு, பிராமணன்" எனும் இருபத்தாறு இயல்கள் உள்ளன. இவற்றிலிருந்து சில இயல்களுக்கு நுவலும் பொருளை

4. S. Radhakrishnan, (Tr.), Dhammapada, p. 2
5. P. L. Vaidya & R. D. Shrikanele, (Tr.) Dhammapada, Sect. 20

யும், மற்றவற்றிற்கு உவமை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் தலைப்புகள் தரப்பட்டுள்ளமை புலனாகின்றது. சில பாக்கள், பல இயல்களில் அப்படியே திரும்பத்திரும்ப கூறப்படு கின்றன.

**உணர்த்தும் முறை**

*நீரை நெறிப் படுத்திச் செலுத்துபவர் சிற்பக் கலைஞர்*
*அம்பை நேராக நிமிர்த்துபவர் வில்லாளிகள்*
*மரத்தில் சிற்பங்களைச் செதுக்குபவர் தச்சர்கள்*
*தம்மைத் தாமே அடக்கியாளுபவர் அறிஞர்* (தம்ம. 80)

இதே பாடல், 143வது தம்மபதமாகவும் வந்துள்ளது. இதைப் போன்று வேறு சில பாடல்கள் இரண்டு மூன்று இடங்களில் திரும்ப இடம்பெற்றுள்ளதைக் காட்டலாம்.

ஒரே கருத்தை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு உணர்த்தும் திறன் பல பாடல் களில் சிறப்பாக வெளிப்படுகிறது.

கூரை செம்மையாக வேயப்படாத வீட்டினுள் மழைநீர் பாய்வதுபோல, நன்னெறிப் பயிற்சி இல்லாத மனத்தினுள் ஆசைகள் புகுந்துவிடுகின்றன. (தம்ம. 13)

என்பது உடன்பாட்டு வாய்பாட்டால் அமைந்தது. ஆனால், அடுத் துள்ள தம்மபதத்தில் (14)

கூரை செம்மையாக வேயப்பட்ட வீட்டினுள் மழைநீர் இறங்காததுபோல், நன்னெறிப் பயிற்சியுள்ள மனத்தினுள் ஆசைகள் நுழைய முடிவதில்லை

என எதிர்மறை முறையால் கருத்துகள் உணர்த்தப்படுகின்றன.

தம்மபதம் கருத்துகளை எடுத்துரைப்பதில் வரையறுக்கப் பட்ட முறைகள் எதையும் பின்பற்றவில்லை; பெரிதும் விளக்க இயல் போக்கிலேயே அமைந்து இருக்கிறது. பொதுவாக அற நூல்கள், விதிமுறை வாய்பாட்டால் அமைந்து இருக்கும். ஆனால், இந்நூல் இதற்கு ஓர் விதிவிலக்கு. விதிமுறை வாய்பாடு இந் நூலில் அருகிய ஒன்றாகவே காணப்படுகிறது.

**தம்மபதத்தில் புத்தமதம்**

தம்மபதத்தில் பௌத்த சமயக் கொள்கைகள் பல விளக்கப் பட்டுள்ளன. அவற்றுள், சிறப்புமிகு சிலவற்றைக் காண்போம்.

*இவ்வுலகில் எக்காலத்தும் பகைமை, பகைமையால் தணிவதில்லை; பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே தொன்மைமிகு அறநெறி* (தம்ம. 5)

*புத்தரையும் சங்கத்தையும் தருமத்தையும் அடைக்கலம் அடைவதனால், நான்கு உயர்ந்த உண்மைகளைத் தெளிந்த ஞானத்தால் அவன் தேர்ந்து கொள்ளுகிறான்* (தம்ம. 188)

*துக்கம், துக்க காரணம், துக்க நீக்கம், துக்கநீக்க நெறியாகிய நால்வகை வழி - இவையே பாதுகாப்பான புகலிடம். இந்த அடைக்கலத்தை அடைந்த பிறகு, மனிதன் எல்லா வகையான துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறான்* (தம்ம. 189—190)

*ஒருவன் தனக்குத்தானே தலைவன்; வேறு யார் தலைவனாய் இருக்க இயலும்? தன்னை நன்கு அடக்கிவைத்துக் கொண்டால், ஒருவன் பெறுவதற்கரிய தலைவனைப் பெற்றவனாவான்* (தம்ம. 158)

**இலக்கிய நயமிகு பாக்கள்**

சொற்செறிவும், பொருட்செறிவும் வாய்ந்தது தம்மபதம். சுருங்கச் சொல்லுதல், கற்பனைவளம், உவமைநயம் போன்ற சிறப்புமிகு இலக்கியப் பண்புகள் பல இந்த அறநூலை, நீதி இலக்கியமாக வலிவும் பொலிவும் பெறச் செய்துள்ளன.

*இரும்பு விலங்கையும் மரக்குட்டையையும், கயிற்றுக் கட்டையும் அறிஞர் பலமான 'தளை' என்று கூறுவது இல்லை! ஆனால், பொன்னாலும், மணிகளாலும் செய்யப்பெற்ற அணிகளிலும், மனைவி மக்களிடத்தும் வைக்கும் பாசமே ஆற்றல்மிகு 'தளை' என்பர்.* (தம்ம. 343)

*ஆசைக்கு ஒப்பான அனல் வேறில்லை!*
*வெறுப்புக்கு ஒப்பான நோய் வேறில்லை!*
*உடலோடு வாழ்வதற்கு ஒப்பான துன்பம் வேறில்லை!*
*அமைதிக்கு மேலான மகிழ்ச்சி வேறில்லை!* (தம்ம. 200)

இவற்றைப்போன்ற பல பாடல்கள், கருத்து ஆழமும். சொற்செறிவும் வாய்ந்தனவாக உள்ளன.

*புதிதாகக் கறந்த பால்போல பாவச் செயல் உடனே புளிப்பது இல்லை! நீறுபூத்த நெருப்பைப்போல், கனன்று கொண்டே இருந்து அது மூடனைத் தொடர்கிறது* (தம்ம. 71)

*கையில் புண் இல்லாதவன் விஷத்தைக் கையால் தொடலாம்; புண் இல்லாதவனை விஷம் பாதிப்பது இல்லை! தீயசெயலைச் செய்யாதவனை தீவினை பாதிப்பது இல்லை* (தம்ம. 135)

என்பன போன்ற பல பாடல்களைக் கற்பனை நயத்திற்குச் சான்றாகக் காட்டலாம்.

சங்ககால ஔவையார் பாடியுள்ள,

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே! (புறநா. 187)

என்னும் பாடலை நாம் நன்கு அறிவோம். ஏறக்குறைய இதே கருத்தமைந்த

நாடே ஆயினும் காடே ஆயினும்
பள்ளமே ஆயினும் மேடே ஆயினும்
அறிவர் (அருகத்து) இன்புற்று வாழும்நிலமே
அனைத்து உயிரின் மகிழ்வுக்கு உரித்தாம்! (தம்ம. 98)

எனும் பாடல் தம்மபதத்தில் இடம்பெற்றிருக்கிறது.

**தம்மபதமும் திருக்குறளும்**

இவ்விரு நூல்களும் அறம்பாட வந்த அறநூல்கள். எனவே, இவற்றின் நோக்கிலும் போக்கிலும் ஒத்த இயல்புகள் காணப்படுவது இயற்கை. தம்ம பதமும் திருக்குறளும், இருவெல்லைகட்குப் போகாமல், நடுவழியான அறநெறிகளையே மிகுதியாக வகுத்துரைக்கின்றன. மனிதனே முயற்சி செய்து - அறவாழ்வு வாழ்ந்து - விடுதலையைப் பெறவேண்டும் என்பதை இவ்விரு நூல்களும் அறிவுறுத்துகின்றன; வைதீக வேள்விச் சடங்குகளை இரு நூல்களும் எதிர்க்கின்றன.

இவற்றிடையே காணப்படும் ஒத்த கருத்துகளுள் சிலவற்றைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| வ. எண் | தம்மபதம் | திருக்குறள் |
|---|---|---|
| 1. | மனிதன் தீய எண்ணத்தோடு பேசினாலும், செயல்புரிந்தாலும் வண்டி சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வது போல, துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும் (1) | தீயவை செய்தார்கெடுதல் நிழல்தன்னை வீயாது அடிஉறைந்து அற்று (208) |

மனிதன் நல்ல எண்ணத்துடன் பேசினாலும் செயல் புரிந்தாலும் நிழல் தொடர்ந்து செல்வது போல், இன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்

2. என்னை இழித்துப் பேசினான்; அடித்தான்; வென்றான்; கொள்ளையிட்டான்; துன்புறுத்தினான் — இத்தகைய எண்ணங்களை உடையவரிடம் துன்பம் நீங்காது நிலைத்திருக்கும். (3)

நோய்எல்லாம் நோய் செய்தார் மேலவாம்;
நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் (320)

3. செல்வத்தை அடையும் வழி வேறு; நிருவாணத்தை அடையும் வழி வேறு. (75)

இருவேறு உலகத்து
இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு (374)

4. ஞானி மனமாசுகளை அகற்ற வேண்டும். அந்நிலையில் அவன் இன்பத்தை அடைவான் (88)

மனத்துச்கண் மாசிலன் ஆதல்
அனைத்து அறன் (34)

5. பூமியைப் போன்ற பொறுமையுடன் வாழ்தல் வேண்டும். (95)

அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (151)

6. மனிதன் பாவத்தைச் செய்துவிட்டால், அதே பாவத்தைத் திரும்பத் திரும்பச் செய்யாது இருப்பானாக. (115)

எற்றென்று இரங்குவ செய்
யற்க! செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று (655)

7. தண்டனைக்கு எல்லாரும் அஞ்சுகின்றனர். இறப்பைக் கண்டு எல்லாரும் நடுங்குகின்றனர். மற்ற உயிர்களையும் தன்னைப் போல் எண்ணி, ஒருவன் கொலை செய்தல் கூடாது; கொலைக்கு உடன்படவும் கூடாது. (127)

இன்னா எனத்தான் உணர்ந்
தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல் (316)

தன்னுயிர்க்கு இன்னாமை
தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் (318)

| | |
|---|---|
| 8. சொல்லால் வரும் சினத்தை அடக்கிக் காக்கவும். நாவினை அடக்கிப் பழகவேண்டும். சொல்லால் உண்டாகும் தீமையை ஒழித்து, ஒழுக்கத்தைப் பேணி வளர்க்க! | யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (127) |
| 9. முற்காலத்தில் எனது மனம் தன்விருப்பம்போல் சுற்றித் திரிந்து கொண்டிருந்தது. யானை மதம் கொள்ளும் பொழுது பாகன் அங்குசத்தால் அதை அடக்குவது போல, இப்போது என் மனத்தை நான் அடக்கியாள்வேன். (324) | உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்<br>வரனென்னும் வைப்பிற்கோர் வித்து (24) |
| 10. பிறர் குறையைக் காண்பது எளிது; ஆனால் தன் குற்றத்தை அறிதலே அரிது. (250) | தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்<br>என்குற்றம் ஆகும் இறைக்கு (436) |

அன்பு நெறியை அனைத்துலகிற்கும் காட்டி, மண்ணகத்தில் விண்ணக வாழ்வை அடைய முயலுமாறு மக்கள் எல்லாரையும் போதிமாதவர் தூண்டினார். அவருடைய அறவுரைகள் தம்மபதத்தில், எளிமையும் இனிமையும், செறிவும் தெளிவும் வாய்ந்தனவாக உள்ளன. பௌத்த சமயத் திருநூல்களில், தம்மபதத்திற்குத் தனி இடம் கொடுக்கப்பட்டுள்ளது; உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலக அறிஞர்கள் இதன் அருமை பெருமைகளை அறிந்து போற்றுகின்றனர்:

> பௌத்த சமயத்தைப்பற்றித் தெளிவாய்த் தெரிந்து கொள்ளுவதற்கும், பௌத்த தருமத்தை உள்ளவாறு உணர்ந்து கொள்ளவும் உதவும் புனித நூல் தம்மபதம். அது தன்னிகரற்ற அழகு உடையது; பொருள் நிறைந்த பழமொழிக் களஞ்சியம்; பௌத்த சமயத்தைப் புரிந்துகொள்ள விரும்புவோர், திரும்பத்திரும்பப் பார்த்துத் தெளிவு பெற வேண்டிய திருநூல் அது[6]

எனும் ஜெர்மன் நாட்டு அறிஞரின் துணிவுரை உண்மையுரையாக நின்று நிலவுகிறது.

---

6. Hermann Oldenberg, Buddha: Life, His Doctrine, His Order, PP. 195—196

# திருக்குறளின் சிறப்பியல்புகள்

அனைத்துலக மனிதனைப் பாடியவர் வள்ளுவர். மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு முப்பால் வழி, சிறப்பு மிகு வாழ்வியல் அறத்தை அவர் வகுத்து அளித்துள்ளார். அவ்வறத்தின் பெரும்பகுதி, இன்றைக்கும் பயன்படத்தக்கதாக - வழிகாட்டத் தக்கதாக உள்ளது. சாதி, சமய, இன, இட, மொழி வேறுபாடற்ற மனித சமுதாயத்தை அவர் காண விழைந்தார். அதற்கேற்ற வகையில், தம் அறநூலைப் படைத்துள்ளார். அவருடைய வாய்மொழியான 1330 குறட்பாக்களில் 'தமிழ், தமிழர், தமிழ்நாடு' எனும் சொற்களோ, அவற்றின் பொருளைத் தரும் பிற தொடர்களோ இடம்பெறவில்லை. இதனால், தமிழ் நாட்டில் தோன்றி, தமிழரிடையே வாழ்ந்து, தமிழிலே தம் நூலைப் படைத்த தெய்வப் புலவர், குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்து, உலகளாவிய நோக்குடன் 'வழிகாட்டும் வான் பொருளாக'த் திருக்குறளைப் படைத்துள்ளமை புலனாகின்றது.

## திருவள்ளுவரின் அறக்கொள்கை

திருவள்ளுவருடைய அறக்கொள்கை மிகவும் பரந்துபட்டது; என்றைக்கும் பயன்படும் சிறப்புடையது. இதனால், ஓரளவிற்கு இலட்சிய நோக்குடையது. அறம் எனும் சொல்லை, "வழக்கம், ஒழுக்கம், முறைமை, நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறநூல், அறக்கடவுள்" எனும் ஒன்பது பொருள்களில் அவர் பயன்படுத்தியுள்ளார்.[1] ஆயினும் அறத்தை 'ஒரு வாழ்க்கை நெறியாக' மட்டும் போற்றவில்லை; பொருளையும், இன்பத்தையும் அடைவதற்குரிய கருவியாக மட்டும் அறத்தை அவர் வகுத்துரைக்கவில்லை.

---

1. காண்க: க. த. திருநாவுக்கரசு: திருக்குறள் நீதி இலக்கியம், பக். 23—48

**அறம் கருவியா? இலட்சியமா?**

இவ்வாறு கூறுகின்றபொழுது, "மக்கள் தங்கள் வாழ்க்கையில் பொருளைப் பெறுவதற்கும், இன்பத்தைத் துய்ப்பதற்கும் அறம் கருவியாகப் பயன்படுவது அல்லாமல், அதற்கெனத் தனிப் பண்போ, பயனோ உண்டா?" எனும் ஐயம் நம்மிடையே எழலாம். அறத்திற்குத் தனிப்பட்ட குறிக்கோள் ஒன்றும் கிடையாது. குறிப்பிட்ட குறிக்கோளினை அடைவதற்குப் பயன்படும் கருவியேயொழிய, அதற்கொன்றும் தனிச்சிறப்பு கிடையாது என்பர் சிலர். இதற்கு,

> சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு (திருக். 31)
>
> அறத்தான் வருவதே இன்பம் (திருக். 39)

எனும் குறட்பாக்களைச் சான்றாகவும் அவர்கள் காட்டுவர்.

ஆனால், சிறிது கூர்ந்து நோக்குவோமானால், திருவள்ளுவரின் அறவியல் எத்தகையது என்பது எளிதிற் புலனாகும். ஒல்லும் வகையெல்லாம் ஓயாது அறம் செய்வதன் மூலம், அறத்தின் தன்னியல்பும், பிறவற்றிற்குக் கருவியாகப் பயன்தரும் கருவி இயல்பும் ஒருவனுக்கு இவ்வுலக வாழ்க்கையில் செல்வத்தையும் புகழையும் தேடித் தருவதோடு, மறுபிறவியிலும் அவனுக்குப் பயனை - வீடு பேற்றை - அளிக்கிறது என்பது உண்மை.

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினைக் காட்டிலும் சிறந்த நன்மையைத் தரத்தக்க ஒன்று உலகில் இருக்கிறதா?" என்று வினவுகிறார் வள்ளுவர். இங்குக் குறிப்பிடப்படும் 'நன்மை' உலகியல் இன்பமாக இருந்தாலும், 'அந்தமில் இன்பத்து அழிவில்' வீடுபேறாக இருந்தாலும் பொதுவாக 'இன்பம்' என்றே குறிப்பிடப்படும். மேலும், 'இன்பமெனும்' அந்தக் குறிக்கோளினை அடைவதற்கு, அறம் நம்மை அழைத்துச் செல்லுவதோடு நின்றுவிடவில்லை. அவ்வின்பத்தை, அவ்வறமே நமக்கு அளிக்கிறது. மற்ற இருவகைப் பேறுகளான பொருளையும், இன்பத்தையும் காட்டிலும், அறத்திற்குத் தலைமைப் பண்பு அமைந்திருப்பதற்கு ஒரு காரணம் உண்டு. பொருளீட்டுவதிலும், இன்பம் துய்ப்பதிலும் ஒருவன் அல்லும் பகலும் அயராது முயன்றாலும், அவற்றில் அவன் எப்பொழுதுமே வெற்றிபெறுதல் இல்லை; வெற்றி பெறுவது, அதாவது அவற்றை அடைவது என்பது உறுதியென்று சொல்லுவதற்கும் இல்லை. ஆனால், அறநெறியில் ஒழுகினால் அல்லது அறச்செயல்களை அயராது செய்து வந்தால், அதன் பயனை அடைவது உறுதி. ஆனால், அறத்தின்

பயனை அடைவதற்கு ஒருவன் நெடுங்காலம் காத்திருக்கவேண்டும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும் முதலில் பல்வேறு இடையூறுகளும் இன்னல்களும் உண்டானாலும், இறுதியில, அதனுடைய பயனை அடைந்தே தீருவோம் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அறத்தைப் பற்றிய மற்றொரு கருத்து மிகச் சிறப்புடையதாகப் போற்றப்படுகிறது. அறம் உள்ளுறு பயன்மதிப்பினை உடையது. எனவே, அது கருவியன்று; அதுவே இலட்சியமாகும் என்பது அறத்தைப் பற்றிய மாண்புமிக்க மற்றொரு கருத்தாகும். தமிழகத்தில் திருவள்ளுவரும், வேறு சில சான்றோர்களும் இக் கருத்துடையவர்களாகவே இருந்தனர் என்பதை அவர்தம் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. அறத்தைப் பற்றிய ஆராய்ச்சியில், வள்ளுவர் இத்தகைய இலட்சியநோக்கு உடையவராக இருக்கிறார் என்பதை ஆல்பர்ட் சுவைட்சர் (Albert Schweitzer) சுட்டிக் காட்டியுள்ளார். அவர்,

"குறளின் அறவியலில், மனுதரும சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளதைப்போன்று 'ஊதியம்' பற்றிய கருத்து இடம்பெற்றிருக்கிறது. நல்லதொரு மறுபிறவி கிடைக்கும் அல்லது பிறவிப் பெருங்கடலை நீந்த இயலும் என்பதற்காகவே அறநெறியைப் போற்றிப் பின்பற்றவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இத்தகைய கருத்துடன், மிகவும் எளிமையான, ஆனால், சிறப்புடைய மற்றொரு கருத்தும் திருக்குறளில் இடம் பெற்றிருக்கிறது.... 'நன்மையை நன்மைக்காகவே செய்ய வேண்டும்' எனும் கருத்து இந்நூலில் இடம் பெற்றிருப்பதை நாம் முன்னரே கண்டோம். இக்கருத்து பல்வேறு குறட்பாக்களில் பொதிந்து கிடக்கிறது"[2] என்று கூறியதோடு அமையாது, பின்வரும் குறட்பாக்களை அவர் மேற்கோளாகக் காட்டியுள்ளார்:

நல்லா றெனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (திருக். 222)

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்(டு)
என்னாற்றுங் கொல்லோ உலகு (திருக். 211)

அறம், உள்ளுறு பயன்மதிப்புடையது எனும் கருத்தினைச் சங்ககாலப் புலவர்கள் சிலரும் கொண்டிருந்தனர். புறநானூற்றில், மாண்புமிக்க வீரனும் வள்ளலுமாக விளங்கிய 'ஆய்' எனும் குறுநில மன்னனைப் புலவர் ஒருவர்

---

2. Albert Schweitzer, Op. Cit., P. 197

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிகன் ஆயலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே
(புறநா. 134)

எனக் குறிப்பிடுகிறார். இன்றைக்குச் செய்த ஒரு நற்செயல், பின்னொரு காலத்தில் அல்லது மறுபிறவியில் நமக்கு உதவியாக அமையும் என்று பிறகு கிடைக்கக்கூடிய ஊதியம் கருதி அறம் செய்கிறவன் ஆய் அல்லன்! அவன் கைவண்மை "சான்றோர் சென்ற அறவழியிலே தானும் செல்லுதல் வேண்டும் எனும் கடப்பாடு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டதாகும்" என்பது இப்பாடலின் பொருளாகும். இதனால், 'அறத்தை அறத்திற்காகவே' செய்வது சிறப்புடையதாகக் கருதப்பட்டமை தெளிவாகிறது. 'பிறிதொரு நன்மையை அடையவேண்டும்' என்னும் நோக்கத்தொடு, அறத்தைச் செய்வது 'அறத்தை விலைகூறி விற்பதாகும்' எனவும் அவர் கருதினர். அறத்துறையில், வாணிக நோக்கோடு செயலாற்றுவோரைப் புலவர் 'அறவிலை வாணிகர்' என்று கடிந்துரைக்கின்றார்.

சங்கப் புலவர்களுள் வரலாற்றாசிரியராகப் போற்றப்படும் **பரணர்** எனும் புலவர், கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனைப் பாராட்டிப் பாடியுள்ளார். பரணர், அவ்வள்ளல் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்பவன் என்பதைக் குறிப்பிடும் பொழுது,

எத்துணையாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே,
பிறர் வறுமை நோக்கின்றவன் கைவண்மையே
(புறம். 141)

என்று அவனைப் பாராட்டுகிறார்.

"அவனுடைய உதவியை நாடி, அவனைத் தேடி வருகின்றவர்களுக்கு அவன் வரையாது வழங்குகிறான். ஏனெனில், பிறருக்கு உதவிபுரிவதே நல்லது என்று அவன் நினைக்கின்றான். அவனுடைய அருள் உள்ளம் பொருந்திய வண்மை, வறுமையால் வாடுவோருக்கு உதவிசெய்ய வேண்டும்' என்னும் மனித இன அன்புப் பணியை - அருளற நெறியை அடிப்படையாகக் கொண்டதே ஒழிய, 'நல்ல மறுபிறவி கிடைக்கவேண்டும்' என்பதை நோக்கமாகக் கொண்டது அன்று என்று அவர் எடுத்துரைக்கின்றார். இதனால், பரணர் காலத்தில் (கி. பி. இரண்டாம் நூற்றாண்டில்) 'அறத்தை, அறத்திற்காக'ச் செய்யவேண்டும் என்ற எண்ணம்

தமிழ்ச் சமுதாயத்தில் எத்துணை அளவிற்கு வேரூன்றி வளர்ந்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

மேற்கண்ட சான்றுகளிலிருந்து, அறநெறிக் கொள்கைகள், நம்முடைய விருப்பு வெறுப்புகளோடு தொடர்பற்றனவாகவும் தனிச்சிறப்புடையனவாகவும் இருக்கவேண்டும் என்பது தெரிய வருகிறது. அறநெறிக் கொள்கைகளை, அவற்றிடத்துக் கொண்டுள்ள மதிப்பு ஒன்றிற்காகவே பின்பற்றவேண்டும். அது அறத்தின் இயல்பும் முடிந்த பயனுமாகும். அறத்தைப் பற்றிய இக்கொள்கை, அறநெறி ஒழுங்குமுறை ஒன்று முன்னதாகவே அமைந்திருப்பதைச் சுட்டுகிறது. எனவே, தன்னல ஊக்கிகளுக்கு அப்பாற்பட்ட அறவுணர்வு, மக்களிடையே நிலவ வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, அறம் முதலாகவும் முடிவாகவும் அதனுடைய நன்மைக்காகவே பயன்படுத்தப் பட வேண்டும் என்பதும், அறநெறியைக் கடைப்பிடிப்பவனுக்கு அதனால் விளையக்கூடிய நன்மைதீமைகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது என்பதும் இவற்றால் புலனாகிறது. கடமையைப் பற்றிய இத்தகைய உயர்ந்த கொள்கை, தனிமனிதனுடைய நலத்திற்கு மாறான புறநிலை உரிமையை வற்புறுத்தும் அறவியல் கொள்கையினரிடத்தே காணப்படுகிறது. கடமையைப் பற்றிய இத்தகைய கருத்தினை, உலகாயதத்தினருடைய கொள்கையிலும், ஹெடோனிஸ்ட்டு (Hedonists)கள் எனப்படும் 'மகிழ்வுநலக் கொள்கை' யினரிடத்திலும் காண்பது அரிது.

**கடமை கடமைக்காக**

திருவள்ளுவரின் இந்த இலட்சியக் கொள்கை, 'நல்லொழுக்கத்தை நல்லொழுக்கத்திற்காகவே கடைப்பிடிக்க வேண்டும்' எனும் கருத்தினை நினைவூட்டுகிறது. 'கடமையைக் கடமைக்காகவே செய்யவேண்டும்' எனும் காண்ட்டின் (Kant) கொள்கை[3] திருவள்ளுவரின் அறக்கொள்கையோடு பெரிதும் ஒப்புமை உடையதாகக் காணப்படுகிறது.

> கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
> சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (திருக். 981)

என்பது வள்ளுவர் வாய்மொழி. மனித இயற்கையின் இருவகைப் பண்புகளையும் திருவள்ளுவரின் மெய்யறிவு முற்றிலும் போற்றி

3. E. Kant, Critique of Practical Reason & Other Essays (Theory of Ethics), Tr. T. K. M. Abbot, (Longmans Green, London, 1909), pp. 279-280.

ஆதரித்தது. தன்னலமும், பகுத்தறிவும் மனித இயற்கையின் அடிப்படைப் பண்புகளாகும். 'தன்னலம்' எனும் உணர்வு, தன்னுடைய நன்மையையே எங்கும், எப்பொழுதும் நாடுமாறு மனிதனைத் தூண்டுகிறது. பகுத்தறிவு, பிறர்நலத்தைப் பற்றியும் சிந்திக்குமாறு மனிதனை நெறிப்படுத்துகிறது. இயற்கையிலேயே மனிதன் - ஒழுக்க நெறியினை அறியாத காலத்திலேயே - சமுதாய விலங்காக, பிறரோடு கூடி வாழ்பவனாக இருந்துவருகிறான் என்னும் கருத்து பழமையானது. தன்னலமாகிய ஈதன்மை யுணர்ச்சி மட்டுமல்லாமல், பிறர் நலம் பேணுதலாகிய இரண்டாம் நிலை உணர்ச்சியும் சேர்ந்துதான் அறவாழ்வின் அடித்தளத்தை அமைக்கின்றன. 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல்' எண்ணுகிற மெய்யுணர்வு பெற்றால், இதனை எளிதில் புரிந்துகொள்ள இயலும். அப்பொழுது ஒவ்வொரு மனிதனும் எல்லா உயிர்களிடத்தும் அருளுணர்ச்சியுடையவனாக ஒழுகுவான். இதனை,

> அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்(கு)
> என்புதோல் போர்த்த வுடம்பு (திருக். 80)

என்றும்,

> மன்னுயி ரோம்பி யருளாள்வாற்(கு) இல்லென்ப
> தன்னுயி ரஞ்சும் வினை (திருக். 244)

என்றும் வள்ளுவர் கூறியிருப்பதனால் அறிகிறோம்.

**எது நன்மை அல்லது அறம்?**

எனவே, உண்மையில், 'பிற மனிதர்களுக்கு எது நன்மை தருகிறதோ' அதுவே தனிமனிதனாகிய எனக்கும் நன்மை தருவதாகும். அவர்களுக்கு எது இன்பத்தைத் தருகிறதோ, அதுவே தனிமனிதனாகிய எனக்கும் இன்பம் தருவதாகும். தனிமனிதனின் வாழ்க்கை நீதியே - சட்டமே, சமுதாய வாழ்க்கையின் சட்டமாக - நீதியாக விளங்குகிறது. ஆகவே, தனிமனிதன் தன்னல நோக்கினைப் பையப்பையக் குறைத்து, 'நான் யார்? என் உள்ளமார்? எனது ஞானங்களார்? என்பதை உணர்வதால் மற்ற உயிர்களிடத்து ஆற்றவேண்டிய கடமைகளை அறிந்து, செயல்படுவதன் மூலம், தனிமனிதனின் அறநெறி உணர்வினை வளர்க்க இயலும். தனக்கு நல்ல முறையில் பணி புரியவேண்டும் அல்லது உதவிபுரிய வேண்டும் என்பதற்காக, ஒரு மனிதன் பிற மனிதர்களுக்கு உதவிபுரிவது உலக வழக்கு. அப்படி அவன் கருதுவானானால், பிற மனிதர்களைக் கருவிகளாகப்

பயன்படுத்திக் கொள்கிறான் என்பதே பொருளாகும். "மனித இனத்தில் உன்னை எவ்வாறு நடத்துவாயோ, பிற மனிதரை எவ்வாறு நடத்துவாயோ, அப்பொழுதெல்லாம் மனிதனைக் கருவியாகக் கொள்ளாமல், எப்பொழுதும் முடிந்த பயனாகவும் குறிக்கோளாகவும் கொண்டு ஒழுகு"[4] எனும் காண்ட்டின் புகழ்மிக்க கருத்துரை இங்குக் கருதத்தக்கதாகும். இதே கருத்தினைத்தான் திருவள்ளுவர்,

> தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
> மன்னுயிர்க்கு இன்னா செயல்? (திருக். 218)

என வினவுகிறார்.

### தனிமனிதனும் சமுதாயமும்

இப்பொழுது நாம் தன்னலத்தைக் காட்டிலும் சமுதாயத்தின் நலமே முதன்மையான உரிமையுடையது என்று கூறுவோமானால், "இது அறவாழ்வினை, தனியாள் பண்பற்றதாகச் செய்துவிடாதா? முன்னதாகவே நன்கு நிலவிவரும் 'சமுதாய நிலையைச்' சிர்குலையாதவாறு போற்றிக் காக்க தனிமனிதன் ஒருவன் முயல்கிறான் என்றால், என்னிடத்தில் உள்ள 'தனியாள்' தன்மை என்ன ஆகும்?" என்னும் ஐயம் எழலாம். 'சமுதாயம்' எனும் சொல்லினாலேயே, இத்தகைய ஐயம் எழுகிறது எனலாம். சிறந்த சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் 'சமுதாயம்' என்னும் சொல்லை, அது தனக்கெனத் தனிவாழ்க்கை உடையதைப் போன்று பயன்படுத்தியுள்ளனர்.[5] அவர்கள் சமுதாயம் என்பது ஓர் உயிருளி (Organism) என்று கூறுகின்றனர். தனிமனிதர்கள் எல்லாம் அதனுடைய உறுப்பினர்களாவர். இக்கருத்தினை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், இவ்வுவமையை நாம் நெடுந் தொலைவிற்குக் கொண்டு செல்லக்கூடாது. ஏனெனில், மக்கள், சமுதாயத்தைவிட்டு அப்பால் செல்லாமல், வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்திலிருந்து தனியே பிரித்தெடுக்கப்பட்ட மனிதன் 'வெற்றுநிலை'யினை அடைகிறான் என்பதை நாம் எல்லாம் நம்புகிறோம். ஆனால், அதைப்போன்றே, 'சமுதாயம்' என்பது, அதனுடைய உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டு விளங்குகிறது என்பது ஒரு கட்டுக்கதையாகும். இதனால்தான், நாம் சமுதாயத்தினை 'உயிருளி' என்பதைக் காட்டிலும், 'அமைப்பு' (System)

4. E. Kant, Op. Cit. p. 47
5. J. S. Mackenzie, Outlines of Social Philosophy, (George Allen, London, 1918), p. 50

எனக் கூற விரும்புகிறோம். ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும், பொதுவான 'உள்ளம்' ஒன்று இருப்பதை, நாம் கண்டறிய வேண்டும். எண்ணற்ற வகையில், ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் எல்லாருக்கும் பொதுவான உள்ளத்தோடு கட்டுண்டு கிடக்கிறது. எனவே, சமுதாயத்தின் நலனை நாடவேண்டும் என்று முயலுகிறபொழுது 'நான் உண்மையில் என்னை இன்மையாகச் செய்யவில்லை'. ஆனால், மற்றவர்களுடைய உள்ளங்களோடு ஒப்பிட்டு, என்னுடைய உள்ளம் ஒப்புமையுடையதாக இருப்பதைக் காணுகின்றேன். சமுதாயத்தின் முன்னேற்றம் என்பது, தனிமனிதனுடைய முன்னேற்றமாகும். ஆகவே, நல்லொழுக்க வாழ்க்கை என்பது எவ்வகையிலும் தனியாள் தன்மையற்றதாகப் போய்விடவில்லை.

இந்த மாபெரும் உண்மையைத் திருவள்ளுவர் நன்கறிந்திருந்தார். அதாவது அறவியலின் அடிப்படை அலகு (Unit), 'எப்பொழுதும் மனிதனே' என்பதையும், 'சமுதாயத்தின் முன்னேற்றம் என்பது அதனுடைய உறுப்பினர்களாகிய தனிமனிதர்களின் முன்னேற்றம்' என்பதையும் திருவள்ளுவர் நன்கு அறிந்தவராவர். இதனால்தான், பொதுமையான கடமைகளைக் கண்டறிந்து, அவற்றை இல்லறத்தினருக்கும் துறவறத்தினருக்கும் தனித் தனியே, அவர் வரையறுத்துள்ளார். வாழ்க்கையில், தனிமனிதனுடைய நிலை எத்தகையதாக இருந்தாலும், 'பொதுமை அன்பு' (அருளறம்) என்பது அறநெறிக் கடப்பாடாகும் என்பதை,

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (திருக். 80)

என அவர் அறிவிக்கின்றார்.

இந்தப் பொதுவான அன்பு எனும் ஒழுக்க நெறியைத் தற்காலத்தில், 'உயிர்களை மதித்துப் போற்றுதல்' (Reverence for life) எனும் கோட்பாடாக ஆல்பர்ட் சுவைட்சர் உலகிற்கு வழங்கியுள்ளார். தனிமனிதர், எல்லாருடைய நன்மையையும் கருத்தில் கொண்டும், சமுதாயம் ஒவ்வொருவருடைய நன்மையையும் கருத்தில் கொண்டும் செயலாற்றுவதே இக் கோட்பாட்டின் உட்பொருள் எனக் கூறுவர். தன்னைத்தானே செம்மையுடையவனாகச் செய்து கொள்ளுவதோடு தனிமனிதன், சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தம்முடைய பங்கினைச் செலுத்துகிறான். செம்மை நலம் வாய்ந்த மிகப்பெரும் மனிதர்களாகிய சான்றோர்களும், சமுதாயத்திற்குத் தாம் ஆற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாவர். ஏனெனில், 'செயற்படுவது' என்பது ஆன்மாவின் தனி இயல்பாகும். எம்மனிதனும்

கணப்பொழுதும் அமைதியாகச் செயலற்று இருக்க இயலாது. இதனைத் திருவள்ளுவர் 'அறச்செயல்' எனும் கருத்தின் மூலம் நிலைநாட்டுகிறார். செயலும், ஆதாயமும் ஒரு மனிதனை, நன்மையைச் செய்யுமாறு தூண்டுகின்றன. இதனைப்,

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது (திருக். 103)

என்று வள்ளுவர் கூறுகிறார். "இவருக்கு இது செய்தால் இன்ன பயன் கிடைக்குமென்று ஆராய்ந்து பாராது, செய்த உதவியாகிய அருளுடைமையை ஆராய்வோமானால், அதனால் உண்டாகும் நன்மை கடலினும் பெரிதாகும்" என்பதே இதன் பொருளாகும். 'ஆதாயம் கருதாது நன்மை செய்தல்' அறவினையின் பாற்படும். மேலும், "வறியவரது மிக்க பசியை அறத்தின் பொருட்டுத் தீர்க்க வேண்டும். பொருள் பெற்றான் ஒருவன், அதனைத் தனக்கு உதவி புரியுமாறு சேமித்து வைக்குமிடம் அவ்வயிறே" என்று அவர் அறிவுறுத்துவதனால், அறவினை எத்தகைய சிறப்புடையது என்பது புலனாகின்றது.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி (திருக். 226)

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள (திருக். 241)

என்றும் திருவள்ளுவர் மொழிந்துள்ளமை இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

உலகாயதர், 'மகிழ்வுநலக் கொள்கையாளர்' போன்ற தத்துவ இயலார் 'உள்ளத்தினை' ஓரளவிற்குத்தான் உணருகின்றனர். ஏனெனில், உள்ளத்தின் தனிநிலைப் பண்பினையே அக்கொள்கையினர் அனுபவத்தால் அறிந்துள்ளனர். ஆனால், திருவள்ளுவரோ 'உள்ளத்தின்' முழுநிலையைக் கண்டறிய முயலுகிறார். ஆன்மாவின் தனிநிலைப் பண்பினையும் சமுதாயநிலைப் பண்பினையும் கண்டறிந்து, அவர் குறளினை யாத்துள்ளார். தனிமனிதன், அறத்தினை ஒல்லும் வகையெல்லாம் ஓயாது கடைப்பிடித்தொழுகினால், அவனுக்கு இம்மை, மறுமை இன்பங்கள் கிடைப்பது உறுதி என்பது அவருடைய துணிவாகும்.

**மெய்யுணர்வு**

இறைவனின் படைப்பில் காணப்படும் உயிர்கள் அனைத்தும் ஒன்றாகவே ஒப்ப மதித்து வள்ளுவரால் போற்றப்படுகின்றன;

ஒருவனுடைய உற்றார், உறவினர்களுக்கு மட்டுமன்றி, விலங்கு களுக்கும் பிற உயிரினங்களுக்கும்கூட ஒருவன் ஆற்றவேண்டிய கடமைகள் பல உள்ளன என்பதைத் திருவள்ளுவர் உடன்படு கிறார். இவ்வாறு, எல்லாவற்றையும் அவருடைய அறவியல் தழுவிச் செல்லுவதால், தனிமனிதன் செம்மையான சான்றோனாக ஆவதற்கு வாய்ப்பு இருப்பதைக் காணுகின்றோம். அவனிடத்துப் பற்றின்மை வளர்ந்துள்ளமையால், எத்தகைய செருக்குக்கும் இடமில்லாமற் போகிறது. சமுதாய முன்னேற்றத்தினை அடிப் படையாகக்கொண்டே, தனிமனிதன் 'தன்னைத் தான் அறிதல்' எனப்பெறும் மெய்யுணர்வு பெறுதல் அமைகிறது. இதையே, திருவள்ளுவர் மக்கள் அடையவேண்டிய தலைசிறந்த நன்மை யாகக் கருதினார். இவ்வகையில் திருவள்ளுவருடைய அறநெறிக் கொள்கை அப்பாலைத் தத்துவத்தை அணுகுகிறது. இத்தகைய அறக்கொள்கையின் முடிமணியாக விளங்குவது

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது (திருக். 8)

எனும் குறட்பாவாகும். திருவள்ளுவர் உணர்த்தும் அறக்கோட் பாட்டின் அடிப்படைக் கருத்து இக்குறட்பாவால் விளக்கம் பெறுகிறது.

## திருக்குறளின் சிறப்பு இயல்புகள்

இந்திய அறநூல்களோடு, திருக்குறளை ஒப்பிட்டு நோக்கு கின்றபொழுது அறம், பொருள், இன்பம் பற்றிய மூன்று பகுதி களையுடையதாக அறத்தின் ஆட்சியையும், பொருளின் மாட்சி யையும், இன்பத்தின் ஏற்றத்தையும் ஒருங்கே எடுத்துரைக்கும் அறநூல், திருக்குறளைத் தவிர வேறில்லை என்பது எளிதிற் புலனாகின்றது.

இரண்டாவதாகத் திருக்குறள் உணர்த்தும் அறம், குறிப் பிட்ட எந்தச் சமயத்திற்கும் மட்டும் உரியது அன்று. அன்றைய இந்தியச் சமயங்களின் விழுமிய சிந்தனைகள் சில, திருக்குறளில் இடம்பெற்றுள்ளன. ஆயினும், 'குறிப்பிட்ட ஒரு சமயத் தவர்க்கே முப்பால் உரியது' என்று, யாரும் அறுதியிட்டு உறுதி யுடன் கூற இயலாது. இதனால்தான்,

ஒன்றே பொருளெனின் வேறென்ப; வேறெனில்
அன்றென்ப ஆறு சமயத்தார் - நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி (திருவள். மா. 9)

என்று திருக்குறளின் சிறப்பைப் பழம்பாடல் ஒன்று பேசுகிறது. இதனைத் தெளிவுறுத்தும் வகையில்,

> சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருள் இது என்ற
> வள்ளுவன்

என்று கல்லாடம் (14) அறிவுறுத்துகிறது.

மூன்றாவதாக மேற்கு நாடுகளில் பிளேட்டோவின் காலம் முதல் பெர்ட்ராண்ட் ரஸல் காலம் வரை வளர்ந்து வந்துள்ள அறவியல், சமயச் சார்பற்றதாகப் பெருவாழ்வு பெற்றுள்ளதைக் காணுகின்றோம். சமயத்தோடு தொடர்புடையவற்றைச் 'சமய ஒழுகலாறு' என ஒதுக்கிவிடுவர். திருக்குறளில் காணப்படும் அறக்கொள்கைக் குறிப்பிட்ட எந்தச் சமயத்திற்கும் உரியதன்று (Secular). இதனால்தான், இந்திய மண்ணில் அண்மைக் காலத்தில் வேரூன்றிய சமயங்களைச் சேர்ந்தவர்களும் 'திருக்குறளைத் தங்களுடைய சமய நூல்' என உரிமை கொண்டாட முடிகிறது. இந்தச் சமயச் சார்பற்ற தன்மை, புதுமைக்கால (Modren Age)த்தின் போக்கு என்பர். இந்தப் புதுமைக்காலப் போக்கும், பழங்காலத் தமிழ் நூலான திருக்குறளின் அடிப்படையாக அமைந்துள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

நான்காவதாகத் தருமசூத்திரங்கள், தருமசாத்திரங்கள் குறிப்பிட்ட ஒரு சாதியினரின் நலத்திற்காக - முன்னேற்றத்திற்காக - ஒழுகலாற்று விதிகளை வகுத்துரைப்பதைப்போல, திருக்குறள் அறத்தை உணர்த்தவில்லை; ஜைந ஆகமங்களும், தம்மபதமும் சிறப்பாகத் துறவிகளைக் கருத்தில் கொண்டே அறநெறிகளைப் போதிப்பதைப் போல, முப்பால் தனிப்பட்ட சாதியினருக்காகவோ, துறவிகளுக்காகவோ அறம் பாடவில்லை. சாமானிய மனிதன் மனிதனாக வாழ, இல்லறத்தில் ஈடுபட்டு ஏற்றமுற, துறவறத்தில் தோய்ந்து ஆன்மிக அனுபவத்தைப்பெற, சமுதாய வாழ்வில் தனிமனிதன் பிறரோடு நல்லதொரு மனித உறவைப் போற்றி வளர்க்கத் திருவள்ளுவர், தம் வான்மறையை வகுத்தளித்துள்ளார். அவர் பாடும் மனிதன் - தமிழகத்தில் வாழ்பவன் மட்டும் அன்று; கங்கைக் கரையிலும் காவிரிக் கரையிலும் வாழ்பவன் மட்டும் அன்று. அவன் அனைத்துலக மனிதன்! புகழ்மிக்க பண்டைக்கால மனிதன் மட்டும் அன்று; இன்னல் நிறைந்த இடைக்கால மனிதன் மட்டும் அன்று; பொலிவுமிக்கப் புதுமைக்கால மனிதன் மட்டும் அன்று; எதிர்கால விண்வெளி மனிதனும் ஆவான்! இந்த அனைத்துலக மனிதப் பண்பு, திருக்

குறளின் உயிர்மூச்சாகும். இதற்கு அடுத்த நிலையில், தம்ம பதத்தைக் கூறலாம்.

ஐந்தாவதாக "வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாக - நலமாக வாழ்வதற்கே! மகிழ்வுடன் வாழ்வதற்கே! அன்புடன் வாழ்வதற்கே! முயற்சியுடன் வாழ்வதற்கே!" எனும் அறக் கொள்கை திருக்குறளின் உயிர்நாடியாகும். "பண்டைக் காலத்திய இந்தியாவில் திருக்குறளில் காணப்படுவதைப் போன்ற அன்புவழிப்பட்ட செயல்முறை வாழ்க்கையும், வாழ்க்கை மறுப்பு இன்மைக் கோட்பாடும் பிராமண சமயத்திலோ, புத்த சமத்திலோ (சமண சமயத்திலோ), பகவத் கீதை வழி வளர்ந்த இந்து சமயத்திலோ இடம்பெறவில்லை! இவ்வறக் கொள்கை பையப்பைய இந்தியச் சிந்தனையில், கீழ்ச் சாதிகளில் தோன்றி, மக்களிடையே வாழ்ந்தும், உணர்ந்தும், சிறந்த சமயத் தலைவர்களான அருளாளர்களின் மூலம் ஊடுருவி மேலோங்கலாயிற்று"[6] எனும் ஆல்பர்ட் சுவைட்சரின் துணிவுரை, திருக் குறளின் அறக்கோட்பாட்டிற்குச் சூட்டப்பட்ட மணிமுடியாகும்.

ஆறுவதாகத் திருக்குறள் அச்சத்தின் வழிப் பிறந்த ஒழுக லாற்றையோ, வழக்காற்று ஒழுக்க நெறியையோ உலகிற்கு உணர்த்தவில்லை. வெறும் சாதி ஆசாரத்தையோ, கடமை களையோ, ஆசிரம நெறிகளையோ, துறவிகளுக்குரிய விதிமுறை களையோ திருக்குறள் வகுத்துரைக்கவில்லை. மனத்தூய்மை யையே - மனச்சான்றின் குரலையே அறமாகப் போற்றும்[7] - தெய்வமாகக் கருதும் மிக உயர்ந்த அறவியல் கொள்கையை, அண்ணல் காந்தியடிகள் இக்காலத்தில் போற்றிய 'மனச்சான்றே (அந்தராத்மாவே) தெய்வம்' எனும் கொள்கையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அறிவுறுத்திய பெருமை தம்மபதத் திற்கும் திருகுறளுக்குமே உரியதாகும். இது, பண்டைக் கிரேக்கத்தில் சாக்ரடிசால் போற்றி வளர்க்கப்பட்ட நெறி! ஆனல், இடைக்காலத்தில் மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டு, காண்ட் போன்ருேரால் புதியதாக மீண்டும் விளக்கப்பட்ட அறக் கொள்கை! இந்தியாவில் நெடுங்காலமாக வடக்கே தம்மபதத் தாலும், தெற்கே திருக்குறளாலும் போற்றி வளர்க்கப்பட்டு வரும் அறக்கொள்கை ஈதெனில் மிகையாகாது.

ஏழாவதாகத் திருக்குறள் தருமசூத்திரமாகவோ, 'ஆகம மாக'வோ, சொற்பொழிவுகளின் திரட்டாகவோ, இதிகாச மாகவோ, நீதிக்கதை நூலாகவோ உலகில் புகழ் பெறவில்லை. அறிவுறுத்துவதோடு இன்புறுத்தும் நீதி இலக்கியமாகத் திருக்

6. A. Schweitzer, Op. Cit: p. 201
7. திருக். 34, 271, 278, 456, 457.

குறள் பெருவாழ்வு பெற்றுள்ளது அதனுடைய தனிப்பெருஞ் சிறப்பாகும்.

எட்டாவதாகத் தனியொரு மனிதனால் திட்டமிட்டுத், தெளிவான ஒரு முறையை முதலிலிருந்து முடிவுவரை நன்கு பின்பற்றி இயற்றப்பட்ட திருக்குறளைப் போன்ற அறநூல், பண்டை இந்திய அறநூல்களிடையே வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை! திருக்குறளின் அமைப்பும் அழகும் பிற அறநூல்களிடையே இடம்பெறவில்லை.

ஒன்பதாவதாகக் குறட்பாக்கள் எல்லாம் சூத்திரத்தைவிட வடிவில் சிறியவை; சொற்செறிவும் பொருட்பொலிவும் வாய்ந்தவை; எளிதில் நினைவில் இருத்தத் தக்கவையாக உள்ளன.

**தொகுப்புரை**

ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருக்குறளை, அதற்குக் காலத்தால் சிலபல நூற்றாண்டுகள் மூற்பட்ட அறநூல்களோடு ஓரளவிற்கு ஒப்பிட்டு நோக்கினோம். இவ்வொப்பீட்டு ஆய்வின் பயனாக, இந்திய அறநூல்களிடையே உள்ளடக்கத்தாலும், புறத் தோற்றத்தாலும், உணர்த்தும் முறையாலும், இலக்கியத் திறத்தாலும் திருக்குறள் வீறுடன் விளங்குவதை நாம் கண்டு மகிழ இயலுகிறது!

# உதவிய நூல்கள்

## அ. தமிழ்


1. மூல நூல்கள்

(1) இதோபதேசம், புக்ஸ் இந்தியா, சென்னை, 1959.

(2) இராமனுஜாசாரியர், ம. வீ. (பதி.)
ஸ்ரீ மகாபாரதம், ஆதிபர்வம், சாந்திபர்வம், அநுசாஸன
பர்வம், சென்னை, 1916-1923.

(3) கதிரேசச் செட்டியார், மு. (மொழி)
கௌடலீயம் பொருணூல்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1955.

(4) கனகராஜையர், எஸ். (மொழி)
தம்மபதம் அல்லது அறவழி
எம். ஆர். அப்பாதுரை & கம்., சென்னை, 1952.

(5) திருக்குறள் உரைக்கொத்து
அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
காசிமடம், திருப்பனந்தாள், 1957-62.

(6) திருலோக சீதாராம் (மொழி)
மநுதர்ம சாஸ்திரம்
(வி. உ.) பாரிநிலையம், சென்னை, 1961.

(7) வேதகிரி முதலியார், க. (பதி.)
நாலாடியார் மூலமும் உரையும்
எஸ். இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை, 1939.

(8) ராமஸ்வாமி, ப. (மொழி)
தம்மபதம்
பாரிநிலையம், சென்னை, 1971.

## 2. ஆராய்ச்சி நூல்கள்

(1) **அனந்தநாத நயினார்**
*திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும்*
*சென்னை*, 1932.

(2) **ஆனந்த குமாரஸ்வாமி**
*கௌதம புத்தர் (மொழி)*
*நேஷனல் புக் டிரஸ்ட், புது தில்லி*, 1967.

(3) **இராகவையங்கார், மு.**
*ஆராய்ச்சித் தொகுதி*
*பாரி நிலையம், சென்னை*, 1964.

(4) **இராசமாணிக்கனார், மா.**
*தமிழ்மொழி இலக்கிய வரலாறு*
*பாரிநிலையம், சென்னை*, 1976

(5) **தண்டபாணி தேசிகர், ச.**
*திருக்குறள் அழகும் அமைப்பும்,*
*தொல்காப்பியர் நூலகம், சென்னை*, 1961.

(6) **தனிநாயக அடிகள்**
*திருவள்ளுவர்*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*, 1967.

(7) **திருநாவுக்கரசு, க. த.**
*திருக்குறள் நீதி இலக்கியம்,*
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை*, 1971.

(8) **மறைமலையடிகள்**
*பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்,*
*பல்லாவரம்*, 1930.

(9) **ஜெயலட்சுமி, எஸ்.**
*திருக்குறளும் தம்மபதமும்,*
*சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை*, 1975

## 3. இதழ்

*செந்தமிழ், தொகுதிகள்* 1-10.
*மதுரைத் தமிழ்ச் சங்கம்*, 1901-1910.

## ஆ. ENGLISH

### (a) Buddhist Ethical Literature

I. TEXTS

1. **Dhammapada,**
   (Tr.) C. Kunhan Raja, Theosophicai Publishing House, Adyar, 1956

2. **Dhammapada,**
   (Tr.) S. Radhakrishnan, OUP, Madras, 1968.

3. **Dhammapada,**
   (Tr.) P. C. Vaidya and Others, Orient Books Agency, Poona, 1923.

II. STUDIES

1. **Conze, Edward,**
   Buddhist Thought in India, George Allen and Unwin, London, 1962.

2. **Monier Williams**
   Buddhism, Chowkhamba, Varanasi, 1964.

3. **Ooldenberg, Hermann**
   Buddha: Life, His Doctriue, His Order, Williams & Norgate, London, 1882.

4. **Rhys David (Mrs.)**
   Outlines of Buddhism, Methuen, London, 1934.

5. **Saddha Tissa, R.**
   Buddhist Ethics, George Allen, London, 1974

6. **Stratcherbasky, T.**
   (1) The Central Conception of Buddhism, Cal-Cutta, 1961.
   (2) Conception of Buddhist Nirvana, Bharatiya Vidya Prakashan, Delhi, 1977.

7. **Takaksu, J.**
   The Essentials of Buddhism, University of Hawaii, Honolulu, 1947.

8. **Warder, P. R.**
   Indian Buddhism, Motilal, Delhi, 1970.

## (b) Hindu Ethical Literature


### I. TEXTS

1. The Hymns of the Rig Veda, 2 Vols.
   (Tr.) R. T. H. Griffith, Lazarus and Co., Benaras, 1926.

2. Apastamba Srauta Sūtra
   (Tr.) R. Garbe, Calcutta, 1882-1902.

3. Apastamba Dharma Sastra
   (ed.) Buhler, Bombay Sanskrit Series, 1892, 1898.

4. Baudhayāna Dharma Sūtra
   (Tr.) Hultzsch, Leipzig, 1898.

5. Sutra Literature
   (Tr.) H. Oldenberg, Sacred Books of the East, Vols. XXIX, XXX, Oxford, 1892-1900.

6. Gautama Dharma Sastra
   (Tr.) Staurfer, London, 1876.

7. The Laws of Manu
   (Tr.) G. Buhler, Clarendon Press, Oxford, 1886.

8. Manusmrthi, 5 Pts
   (Tr.) Ganganath Jha, University of Calcutta, 1924.

9. Institutes of Narada.
   (Tr.) J. Jolly, Asiabic Society, Calcutta, 1885.

10. Vāshista Dharma Sāstra
    (Tr.) Fuhrer, Bombay, 1886.

11. The Kautilya Artha Saśra
    A Study, 3 Pts; R. P. Kangle, University of Bombay, 1962, 1963, & 1965.

### II. STUDIES

1. Agarwala, U. S.
   India as described by Manu, Privithi Prakashan, Varanasi, 1970.

2. **Ananda K, Coomaraswamy**
Hinduism and Buddhism, Munshiram Manoharlal. New Delhi, 1957.

3. **Banerji, S. C.**
Dharma Sūtras: A study, Punthi Pustak, Calcutta, 1962.

4. **Betai, R. S.**
A Reconstruction of the Original Interpretation of the Manusmrti, Gujarat University, Ahmedabad, 1970.

5. **Crawford, S. C.**
Evolution of Hindu Ethical Ideals, Mukhopadhyaya, Calcutta, 1974.

6. **Creel, Austin B.**
Dharma in Hindu Ethics, Firma Mukhopadhyaya, Pt. Ltd. Calcutta, 1977.

7. **Jolly, Julius**
Hindu Law and Custom, Bharatiya Publishing House, Delhi, 1975.

8. **Kane, P. V.**
History of Dharma Sastras, Vols. I to 5. Bhandarkar Oriental Research Institute, Poona, 1941-1968.

9. **Mackenzie, John**
Hindu Ethics, OUP, London, 1922.

10. **Manorama Jauhari**
Politics and Ethics in Ancient India, Bharatiya Vidya Prakashan, Varanasi, 1968.

11. **Motwani, K.**
Manu Dharma Sastra (A Sociological and Historical Study), Ganesh and Co., Madras, 1958.

12. **Radhakrishnan, S.**
The Hindu View of life, Unwin Books, G. B., 1960.

13. **Ramaswami Sastri, K. S.**
The Dharma Sāstras and the Dharma Sūtras, Thirumalai Tirupati Devasthanam, 1952.

14. **Rangaswami Aiyengar, K. V.**
Aspects of the Social and Political System of Manusmrti, Lucknow University, 1949.

15. **Sastry, K. R. R.**
Manu and Tiruvalluvar, Sangam Publications, Madras, 1973.

16. **Shrirama**
Social Structure and Values in Later Smrtis, India Publications, Calcutta, 1977.

17. **Sivaswamy Aiyer, P. S.**
Evolution of Hindu Morals, Nag Publications, Delhi, 1976.

18. **Sukthankar, V. S.**
On the Meaning of Mahabharata, The Asiatic Society, Bombay, 1957.

19. **Vora, Dhairyabala, P.**
Evolution of Morals in the Epics, Popular Book Depot, Bombay, 1968.

## (c) JAINISTIC ETHICAL LITERATURE

### I. TEXTS

1. Bhagavati Sutra.
(Tr.) K. C. Lalwani, Jain Bhavan, Calcutta, 1973.

2. Kalpasutra and Nava Tatva
(Tr.) J. Stevenson, Oriental Translators, London, 1898.

3. Gaina Sutras, Pts. I and II
(Tr.) H. Jacobi, Clarendon Press, Oxford, 1884, 1895.

### II. STUDIES

1. **Ckakravarti, A.**
The Religion of Ahimsa, Ratnachand and Hiralal, Bombay, 1952.

2. **Desai, P. B.**
Jainism in South India and Some Jaina Epigraphy, Jaina Samskrti Samrakshaka Sangha, Sholapur, 1957.

3. **Mehta, Mohanlal**
Jaina Culture, Hindu University, Varanasi, 1967.

4. **Ramaswami Ayyangar, M. S.**
Studies in South Indian Jainism, Madras, 1922.

5. **Stevenson, S. (Mrs)**
The Heart of Jainism, Humphrey, London, 1915.

## (d) GENERAL STUDIES

1. **Basham, A. L.**
The Wonder that was India, Grove Press, Newyork, 1954.

2. **Dasgupta, Surma (Mrs.)**
Development of Moral Philosophy in India, Orient Longmans, Calcutta, 1951.

3. **Eliot, Charles**
Hinduism and Buddhism, 3 Vols., Routledge, London, 1971.

4. **Eliot, T. S.**
Notes Towards Definition of Culture, Faber, London, 1967.

5. **Hopkins, E. W.**
Ethics of India, Yale University Press, New Haven, 1926.

6. **Kant, E.**
Critique of Practical Reason and Other Essays, (Tr.) T. K. M. Abbot, Longmans Green, London, 1909.

7. **Krishna Chaitanya**
A New History of Sanskrit Literature, Mauoher, New Delhi, 1977.

8. **Mackenzie, J. S.**
Outlines of Social Philosophy, George Allen, London, 1918.

9. **Nietzsche**
The Will to Power, (Tr.) Walter Kaufman, R. S. Hollingdale, London, 1968.

10. **Radhakrishnan, S.**
Indian Philosophy 2 Vols., George Allen, London, 1971.

11. **Radhakrishnan, S.**
Eastern Religions and Western Thought, OUP, Newyork, 1969.

12. **Radhakrishnan, S.**
Religion and Society, George Allen, London, 1969.

13. **Radhakrishnan, S.**
(Ed.) The Cultural Heritage of India, 4 Vols. Calcutta, 1969.

14. **Schweitzer, Albert**
Indian Thought and Its Development, Wilco Publishers, Bombay, 1960.

15. **Sharma, I. C.**
Ethical Philosophies of Indla, George Allen, London, 1965.

16. **Sivaraja Pillai, K. N.**
The Chronology of the Early Tamils, University of Madras, 1932.

17. **Winternitz, M.**
History of Indian Literature, University of Calcutta, Vol. I, 1959, Vol. I pt. 2, 1963.

18. **Zimmer, H.**
Philosophies of India, Routledge and Kegan Paul, London, 1951.

## மனிதனைப் பாடிய மாண்புடையார்

"திருக்குறள் ஒருமைப்பாடும் செம்மைத் திறமும் வாய்ந்த கலைப் பெட்டகம். அதனுடைய ஆசிரியர் அரசனையோ, குடிமகனையோ, மதகுருவையோ விளித்துக் கூறும் வகையில் திருக்குறளை இயற்றவில்லை!

மனிதனுக்காக—மனிதனுடைய நலமிக்க வாழ்க்கைக்காக—மனிதனுக்கு அறிவுரை கூறும் வகையில், திருவள்ளுவர், திருக்குறளை இயற்றியுள்ளார்!

மனிதனைப் பாடுகின்றபொழுது சட்டத்தை வகுத்து அளிக்கும் சட்ட வல்லுநராகவோ, வழிகாட்டும் தீர்க்க தரிசியாகவோ அவர் தம்மைக் கருதவில்லை! ஆனல், அவர் மனித இனத்தின் நன்மையை—முன்னேற்றத்தை நாடுவோராகக் காட்சி தருகிருர்! இதனல், மனிதனுடைய நலனை நாடுவோராகவும், நண்பராகவும், ஆசிரியராகவும் அவர் அன்போடும் பண்போடும் மனித வாழ்க்கை மாண்புற அறவுரைகளைக் கூறுகிருர்"

—அலெக்சாண்டர் பியாதி கோர்ஸ்கி

# பொருளகராதி


அ

அகத்தியர் 7
அகம் 9, 10, 15
அகமகிழ்ச்சி 17
அகிம்சை 63, 67, 69
அங்க நூல்கள் 64
அசோகன் 78, 79
அத்திரி 44
அப்பாலைத் தத்துவம் 21, 61, 77, 94
அரச தருமம் 28, 31, 33, 36, 56
அரசியல் 15, 16, 29
அரிஷ்ட நேமி 64
அருத்த சாத்திரம் 15, 16, 27
அவஸ்தா 10
அறக் கடவுள் 14, 85
அறக் கொள்கை 32, 61, 62, 65, 70, 85, 94, 96
அறச்செயல் 86, 93
அறத்துப்பால் 4, 74
அறநூல் 14, 25, 31, 44, 52, 54, 55, 63, 64, 78, 81, 82, 85, 97
அறநெறி 65, 67, 74, 75, 81, 86, 89, 90, 92, 95
அறம் 2, 3, 5—10; 13—16; 20, 22, 23, 24, 26, 28—31; 42, 48, 49, 51, 52, 54, 55, 62, 71, 72, 75, 76, 83, 85, 86, 88, 89, 93, 94
அறவழி 78
அறவாழ்வு 30, 72, 82, 91
அறவாழி 23, 88, 94
அறவியல் 21, 24, 37, 60, 70, 92, 96
அறவிலை வாணிகன் 88
அறவினை 4, 93
அறன் 4, 10, 58, 75
அறிவு இன்பம் 16, 18, 19
அன்பு நெறி 16, 42, 84
அனுசாஸன பருவம் 31, 32
அனுபூதிக்கலை 21
அனுவிரதம் 63, 67

ஆ

ஆகமம் 64, 71 - 74; 96
ஆகாரங்க சூத்திரம் 65
ஆசாரம் 33, 34 - 37; 37, 49, 54, 58, 65, 96
ஆசிரம நிலை 31, 37, 41, 42, 47, 48
ஆட்சிக்கலை 16, 31
ஆதிமனு 43
ஆபத்து தருமம் 31, 32, 42, 59
ஆபஸ்தம்ப 34, 35, 41
ஆய் 86
ஆரிய தரும ஆதித்தர் 79
ஆல்பர்ட் சுவைட்சர் 87, 92, 96
ஆலமர் செல்வன் 5
ஆறு அங்கம் 34

ஆன்மா 21, 51, 53, 54, 65, 69, 79, 93
ஆன்மிக அனுபவம் 19, 20, 21, 62, 77, 95
ஆன்மிகப் பயன்மதிப்புகள் 2
ஆஸ்வமேதிக பருவம் 31

இ

இசுலாம் 75
இதோபதேசம் 29
இந்து சமயம் 24, 25, 26, 61
இந்தியச் சிந்தனை 57, 96
இந்திய 11, 24, 31, 96
இந்திரன் 7, 68
இந்து சமய அறநூல்கள் 42, 46, 62
இயமன் 14
இரத்தினத்திரையம் 66
இராகவையங்கார், மு., 9
இராதாகிருஷ்ணன், எஸ். 47, 60, 62, 64
இல்லறம் 13, 14, 29, 32, 58, 68, 69, 73, 77, 92, 95
இறைவன் 21, 22
இன்பம் 2, 3, 6, 7, 8, 10, 17 - 19; 22, 23, 28, 61, 62, 74, 83, 85, 86, 94

ஈ

ஈகை 14, 85
ஈனயானம் 75, 77

உ

உத்தர அத்தியயன சூத்திரம் 65
உப அங்கங்கள் 64
உபநிடதம் 10, 25, 26, 64
உலகமூடம் 66
உலகாயதம் 89, 93
உள்ளம் 92, 93
உள்ளுறு பயன்மதிப்பு 2, 3, 26, 87
உறுதிப் பேறுகள் 29
உறுதிப் பொருள் 2, 8

ஊ

ஊழ்வினை 29, 32

எ

எலியட், டி. எஸ். 15
எண்வகை மெய்ப்பாடுகள் 18

ஐ

ஐந்து உறுதி 67
ஐந்து சீலம் 77
ஐம்புலன் 19
ஐரோப்பிய அறவியல் 61
ஐவகை வேள்வி 41

ஒ

ஒழுக்கநெறி 54, 61, 85

ஔ

ஔவை 23, 82

க

கடமை 26, 49, 50, 54, 61, 85
கல்பசூத்திரம் 34, 40, 65
கல்லாடம் 95
கல்வி 15, 16, 53, 69
கழுவாய் 36
கற்பு 59, 68
காண்ட் 89, 91, 96
காணே 35, 61
காத்யாயனர் 41
காந்தி அடிகள் 30, 96
காமம் 19, 28, 50, 51
காமத்துப்பால் 18, 19, 74
கிரகிய சூத்திரம் 34, 40
கிறித்துவம் 75
குத்தகநிகாயம் 78
குந்தகுந்தாசாரியர் 65, 66, 73
குற்றவழக்கு 33
குறளின் அறவியல் 87
கூற்றம் 22
கொல்லாமை 65, 69, 70, 72
கௌசல பருவம் 31
கௌடில்யர் 27
கௌதம 34, 35, 41, 44

ச
சகிப்புத் தன்மை 26
சட்டங்கள் 33, 36, 43, 54
சடங்குநெறி 70
சத்திரியன் 42
சந்நியாசி 42, 55
சமண சமயம் 10, 11, 24, 25, 30, 62, 63, 64, 68, 69, 73, 96
சமய ஒழுகலாறு 21, 95
சமயக்கணக்கர் 95
சமயசாரம் 65
சமய மலர்ச்சி 65
சமுதாயம் 91, 92, 94
சமூக சேவை 73
சனகாதி முனிவர் 5
சாக்ரடிஸ் 96
சாணக்கியர் 27
சாதாரண தருமம் 42
சாதி 52, 58, 86
சாந்தி பருவம் 10, 31
சாகவர் 63
சிராவகர் 63
சிருங்கார சதகம் 29
சிரௌத்த சூத்திரம் 34
சிலப்பதிகாரம் 4
சிவன் 21, 22
சினம் 84
சினமொழி 79
சுக்தங்கர் 10
சுந்தரம்பிள்ளை 58
சுப்பிரமணிய பாரதியார் 23
சுருதி 55
சுவர்க்கம் 57
சுவேதாம்பரர் 64, 67
சுவைட்சர் 74
சூத்திர கிரிதாங்க சூத்திரம் 65, 69
சூல சூத்திரம் 34
சூலிகா சூத்திரம் 64
சொர்க்கா ரோகண 31
சௌநகர் 44

த
தம்மபதம் 30, 76, 78—84; 96
தரும சாத்திரம் 27, 29, 38, 40—42; 46, 60, 61, 95
தரும சூத்திரம் 27, 33, 34, 37—40; 43, 61, 95, 96
தருமம்
14, 24, 26, 27, 41, 42, 43, 47-51; 53, 54, 62, 69, 77, 81.
ஆசிரம தருமம் 77
குண தருமம் 37, 42,
தச தருமம் 67.
நைமித்திக தருமம் 37, 42.
வருண தருமம் } 77
வருணாசிரம தருமம் } 77
தவம் 32, 42, 49, 68.
தாயுமானவர் 13.
தானம் 41, 52
திகம்பரர் 65, 67
தியானம் 22
திரி சதகம் 30
திரிபிடகம் 77, 78
திரிவர்க்கம் 9, 10, 26, 27-30
திருஞானசம்பந்தர் 5
திருநாவுக்கரசர் 5
திருமங்கையாழ்வார் 5
திருவள்ளுவமாலை 8, 9
திருவள்ளுவர் 1, 2, 4, 6, 7, 15, 17-20; 22-25; 30, 32, 54, 60, 66, 73, 83, 85-87, 89, 91-95
திருஷ்டிவாத அங்கம் 65
திவாகரம் 5
தீர்த்தங்கரர் 64, 65
தீவினை 26, 42, 52
துக்கம் 75, 81

துறவறம் 13, 14, 58, 67, 68, 92
துறவி 71-73; 77, 79
துன்பம் 73
தெய்வம் 55
தென்புலத்தார் 55
தேவமூடம் 66
தைத்திரேய சம்மிதை 46
தொல்காப்பியர் 3, 7, 10, 19

ந

நடுவழி 82
நல்லொழுக்கம் 66
நல்வினை 52, 54
நற்காட்சி 66,
நன்ஞானம் 66
நாரதர் 29, 41
நாலடியார் 11, 66
நால்வகை ஆசிரமம் 58
நால்வகைப் பேறு 2, 4, 5, 6, 8, 9, 15, 16
நியமசாரம் 65
நியோகம் 59
நிருவாணம் 66, 67, 75, 83
நீட்சே 46
நீதி 42, 85
நீதி இலக்கியம் 81, 86, 96
நீதி சதகம் 29
நீரோ மன்னன் 69

ப

பகவத் கீதை 96
பகவதி சூத்திரம் 65
பஞ்சாஸ்திகாய சாரம் 65, 66
பத்திரபாகு 65
பயன்மதிப்பு 2, 12, 13
பர்த்ருஹரி 29
பரணர் 88
பராசர் 41
பரிப்பெருமாள் 19
பரிமேலழகர் 8, 9, 19
பாகவத புராணம் 64
பாசண்ட மூடம் 66
பாரத்துவாசர் 31
பிரகஸ்பதி 29, 41
பிரமசரியம் 68
பிரவசன சாரம் 65
பிராமணன் 50, 53, 59, 60
பிராயச்சித்தம் 35, 36, 39
பிருகுமுனிவர் 44
பிளேட்டோ 94
புகலர், ஜி. 39, 44, 45
புத்தர் 77-81
புருடார்த்தம் 8, 23, 29
புறத்துறு பயன்மதிப்பு 2
புறம் 10, 15
பெர்ட்ராண்ட் ரஸல் 94
பேகன் 88
பேராசிரியர் 5
பேரின்பம் 53, 62
பொருட்பால் 15, 16, 20, 74
பொருள் 2, 6, 7, 10, 15, 16, 22, 23, 30, 85, 94
பொருள் வழக்கு 33
பொருளியல் 15, 16
பொருளின்பம் 17
போதாயநர் 34, 35, 41,
போதிசத்துவர் 76
போதிமாதவர் 84
பௌத்தசமயம் 10, 24, 25, 67, 80, 84
பௌத்த தருமம் 77

ம

மகாபாரதம் 10, 27, 32, 47
மகாயானம் 76
மகாவிரதம் 69, 73
மகாவீரர் 64, 65, 67-70
மகிழ்வுநலக் கொள்கை 61, 89, 93
மணிமேகலை 4
மரீசி 39
மனு 28, 29, 39, 43, 47-54; 60

மனுதரும சாத்திரம் 27, 35, 39, 41-45; 47, 54, 58, 59, 60, 87
மாக்ஸ்முல்லர் 43
மானவ சூத்திர சரணம் 44
மானவ தரும சூத்திரம் 35, 41
மானிடப் பயன்மதிப்பு 2, 13
மிதிலை 68
முத்தி 20, 21, 26, 31, 32
முப்பால் 1, 2, 6, 8, 10, 23, 27, 30, 85, 94, 95
மும்மணிகள் 66, 77
மும்முதற் பொருள் 2, 3, 4, 6, 8, 9, 10, 12, 16, 18, 26, 30
மூல சூத்திரம் 65
மூவகை மூடம் 66
மோட்சம் 5, 19, 20, 31, 32, 53, 62, 70

ய

யக்ஞவல்கியர் 29, 41
யசுர் வேதம் 34, 44

வ

வசிஷ்டர் 34, 41, 44
வருணாசிரம தருமம் 37, 42, 58, 61
வல்லபி 64
வழக்காற்று ஒழுக்க நெறி 33, 37, 58, 77, 96
வள்ளுவர் 1, 9, 10, 20, 24, 59, 70, 74, 85-90; 93
வாரன் ஹேஸ்டிங்ஸ் 46
வானப்பிரஸ்தம் 42, 55
விண்டர் நீட்சு 33
வியாசர் 27, 31
விருஷப தேவர் 64
வில்லியம் ஜோன்சு, சர். 46
விவகாரம் 36, 39
வினைப்பயன் 53
வீடுபேறு 2-5; 7, 8, 15, 19, 20,-23; 42, 53, 62, 63, 66, 74, 86
வேதம் 25, 26, 34, 38, 47, 48, 64
வேள்வி 50, 69, 82
வைதிக சமயம் 63, 70, 77
வைராக்கிய சதகம் 29
ஸ்மிருதி 38, 39, 48
ஸ்ரமணர் 63
ஜெயசுவால் கே. பி. 60
ஜைநம் 36, 64, 95

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. **இலக்கிய ஆராய்ச்சி**
   - திருக்குறள் நீதி இலக்கியம்
     (சாகித்திய அக்காதமி பரிசு பெற்றது)
   - திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்
   - ஒளிவிளக்கு
2. **இலக்கியக் கட்டுரைகள்**
   - தமிழ் நிலவு
   - வாழ்வும் இலக்கியமும்
   - அறிஞர் அறவாழி
3. **உரையும் பதிப்பும்**
   - தனிப்பாடல் திரட்டு
   - திருக்குறள் மூலம்
4. **தொகுப்பும் பதிப்பும்**
   - தொல்காப்பிய நூலடைவு
   - திருக்குறள் நூலடைவு
   - தமிழ் இலக்கியக் கொள்கை : 2
5. **மொழி பெயர்ப்பு**
   - ஜி. எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு
   - ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாறு
   - இலட்சுமிநாத பெஸ்பருவா
   - இராசாராம் மோகன்ராய்
6. **மொழியியல்**
   - தொல்காப்பியரின் மொழிநூற் புலமை
7. **வரலாறு**
   - சிந்துவெளி தரும் ஒளி
   - வரலாறும் வாழ்வும்
   - தமிழர் நாகரிக வரலாறு
   - திராவிட இனத்தின் தோற்றம் : ஒரு மறு ஆய்வு
   - இனமரபு வரலாறு
   - முதலாம் இராசராசன்
   - வரலாற்று வஞ்சி
   - இலங்கையில் தமிழ்ப் பண்பாடு
8. **ஆங்கில நூல்கள்**
   - The Evolution of Moral Philosophy in Ancient Tamil Literature (In Press)
   - The Chieftains of the Sangam Age (In Press)

wrapper printed by ;
prabhu printing house, madras600 017.